ஆரம்பக்கல்வி

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை.

மலர் 29	டிசம்பர் 1965	இதழ் 12

DEC 1965
MADRAS

அபராதம் விதிக்கும் விபரீத எண்ணம்!

எந்தப் பொருளுமே இலவசமாகக் கிடைத்தால் அதற்குப் போதிய அளவு மதிப்பு இருப்பதில்லை என்பது உலகம் அறிந்த உண்மை.

கிடைத்திருக்கிற பொருள், கிடைத்தற்கு அரியதாக இருக்கலாம்; பீடும் பெருமையும் பொருந்தியதாக இருக்கலாம்; சீரும் சிறப்பும் செறிந்ததாக இருக்கலாம். இத்தனைப் பண்புகளும் ஒருங்கே அமைந்திருந்த போதிலும், அந்தப் பொருள் இலவசமாகக் கிடைத்திருந்தால், அதற்குத் தரவேண்டிய அளவு மதிப்பை உலகம் தருவதில்லை.

இலவசக் கல்வி என்கிற பொருளும் இந்தப் பொதுவிதிக்கு விலக்காக இல்லை.

தமிழ் நாட்டில் சென்ற சில ஆண்டுகளாக, உயர்நிலைப் பள்ளியின் இறுதி வகுப்புவரை, கல்வி, இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது.

அப்படி அளிக்கப்பட்டுவருவது, தமிழகத்திற்குப் பெருமை அளிக்கும் பொன்னான திட்டம் என்பதையோ, எண்ணற்ற ஏழைப் பெற்றோர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கும் மாண்பு நிறைந்த ஏற்பாடு என்பதையோ, நாம் மறுக்கவில்லை.

தங்கள் அருமைப் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் கல்வியறிவை ஊட்டவேண்டும் என்கிற பேராவல் உள்ளத்தில் நிறைந்திருந்தபோதிலும், அந்த ஆவலை நடைமுறைக் கேதமாகமாற்றுவதற்குத் தேவைப்படுகிற பணவசதி இல்லாத காரணத்தால், முன்னரெல்லாம் எத்தனை எத்தனையோ பெற்றோர்கள், வேதனைக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார்கள். அந்த வேதனை இப்போது துடைக்கப்பட்டுவிட்டது என்பதையும், வேதனை குடிகொண்டிருந்த உள்ளங்களில் இப்போது களிப்பு இன்ப நடனம் ஆடுகிறது என்பதையும் நாம் மறந்து விடமுடியாது.

இத்தனையும் உண்மைதான் என்றபோதிலும், உண்மை, இந்த அளவோடு நின்றுவிடவில்லை.

இலவசக் கல்வித் திட்டத்தின் விளைவாகப் பல பெற்றோர்களும், பல மாணவர்களும், அந்தக் கல்விக்குத் தரவேண்டிய அளவு மதிப்பை—அக்கறையை—ஆர்வத்தைத் தராத ஒரு நிலை உருவாகியிருக்கிறது.

கட்டணம் கட்டினால்தான் கல்வியைப் பெறமுடியும் என்கிற நிலை இருந்தபோது, "இந்த ஆண்டில் இந்த வகுப்பில் தேர்ச்சி பெற்று மேல் வகுப்பிற்குச் செல்லாவிட்டால் அடுத்த ஆண்டிலும் இதே வகுப்பில் இருந்தாக வேண்டுமே! அப்படி இருந்தால், ஏராளமான அளவில் பணத்தைச் செலவிட வேண்டி இருக்குமே! ஆகவே, எப்பாடு பட்டாவது இந்த ஆண்டிலேயே தேர்ச்சி பெற்றுவிட வேண்டும்" என்கிற ஒரு துடிதுடிப்பு—ஒருவகையான பதைபதைப்பு—ஒருவித அச்ச உணர்வு, மாணவர்களிடம் இருந்து வந்தது. அதே காரணத்திற்காக, அவர்களுடைய கல்வியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கிற போக்கு, பெற்றோர்களிடமும் குடிகொண்டிருந்தது. தங்கள் பிள்ளைகள் ஒவ்வோர் ஆண்டும் தவறாமல் தேர்ச்சி பெற்றுவந்தால்தான், அவர்களுடைய கல்விக்காகச் செலவிடும் மொத்தத் தொகை குறையும் என்பதைப் பெற்றோர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அறிந்திருந்த காரணத்தால், தங்கள் பிள்ளைகளை மிகச் சிறந்த முறையில் படித்துத் தேர்ச்சி பெறுமாறு அவர்கள் அடிக்கடி தூண்டி வந்தார்கள்.

இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்தபிறகோ இந்த நிலைமையில் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. மாணவர்களிலும் சரி, பெற்றோர்களிலும் சரி, பலர், ஒவ்வோர் ஆண்டும் தவருமல் தேர்ச்சி பெறவேண்டும் என்பதில் முன்னர் காட்டிய அதே அளவு அக்கறையை—ஆர்வத்தை—துடிதுடிப்பை இப்போது காட்டுவதில்லை.

"நம்முடைய பிள்ளை இந்த ஆண்டில் தவறிவிடுவானு? பரவாயில்லை! அடுத்த ஆண்டில் தேர்ச்சி பெற்றுவிடுவான்! அடுத்த ஆண்டும் தவறிவிட்டால்...இருக்கவே இருக்கிறது, அதற்கு அடுத்த ஆண்டு" என்பது போன்ற ஒருவகை மனப்பான்மை பல பெற்ருேர்களிடம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

இத்தகைய மனப்பான்மையா—எங்களிடமா — இடையவே கிடையாதே என்று அவர்களிற் பலர் மறுப்புரை வழங்கக் கூடும். ஆனல் அவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ இத்தகைய ஓர் உள்ளப்போக்கு அவர்களிடம் உருவாகிவிட்டிருக்கிறது. இந்த உண்மையை ஆசிரியர்களும் பள்ளிக்கூட நிர்வாகிகளும் நன்கு அறிவர்.

ஒரு மாணவன் ஒரே வகுப்பில் பல ஆண்டுகள் தங்கிவிடும் தேக்க நிலையைத் தவிர்த்தாக வேண்டும் என்பதை நல்லறிவாளர்கள் யாவரும் ஏற்றுக்கொள்வர்.

ஏனென்ருல் ஒரு மாணவன் ஓரே வகுப்பில் பல ஆண்டுகள் தொடர்ந்து இருக்க நேரிட்டால், அவனுக்கு அதே வகுப்பிற்கு உரிய கல்வியை மீண்டும் மீண்டும் அளித்தாக வேண்டிய நெருக்கடி அரசாங்கத்திற்கு உண்டாகிறது. இதன் விளைவாகக் கல்விக்காக அரசாங்கம் செலவிடும் தொகை உயர்கிறது.

அதுமட்டுமல்ல, எத்தனை ஆண்டுகள் ஒரு மாணவன் ஒரு வகுப்பில் கூடுதலாகத் தங்குகிருனே, அத்தனை ஆண்டுகளை அவன் வீணுக்கிவிடுகிருன் என்பது தெளிவாகத் தெரிகிற உண்மை. அதன் விளைவாக, அவன் படிப்பை முடித்துக்கொண்டு வேலை செய்யத் தொடங்கும் காலம் தள்ளிப் போவதால் நாட்டின் பொருள் உற்பத்திச் சக்தி குறைந்துவிடுகிறது.

ஒரே மாணவனுக்கு ஒரே வகுப்பில் மீண்டும் மீண்டும் பாடங்களைப் புகட்டுவது, ஆசிரியர்களுக்கும் மிகுந்த மன எரிச்சலையும் சலிப்பு உணர்ச்சியையும் தருகிறது. அப்படித் தவறிவிடுகிற மாணவர்களுக்கும், தாங்கள் மாணவ சமுதாயத்திலேயே கடைந்தெடுத்த பிற்போக்கு நிலையினர்—மட்டத்திலும் மட்டமான மந்த புத்தி உள்ள ஒரு கூட்டத்தினர்—பிறருடைய நகைப்புக்கும் கேலிக்

கும் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகிவிட்ட பரிதாபக் குழுவினர் என்பது போன்ற ஒரு வகை தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு விடுகிறது.

எத்தகைய கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் சரி, இத்தகைய நிலையை அகற்றித் தீரவேண்டியது இன்றியமையாத செயல் என்கிற முடிவுக்கே நாம் வரமுடியும்.

அத்தகைய முடிவுக்குத்தான் வந்திருக்கிறார்கள் தமிழ் நாட்டு அரசாங்கத்தினர்.

ஒரு மாணவன் ஒரு வகுப்பில் முதல் ஆண்டில் தேர்ச்சி பெறாமல் நின்றுவிட்டால் அவனை மன்னித்துவிடலாம். ஆனால் அடுத்த ஆண்டிலும் அவன் தேறாமல் தேங்கிவிட்டால் அவனுக்கு முப்பது ரூபா அல்லது அதுபோன்ற ஒரு தொகையை அபராதமாக விதிக்கலாம் என்றும், அந்த அபராதத் தொகையை நான்கு தவணைகளில் வசூலிப்பது என்றும் அரசாங்கம் கருதியிருக்கிறது என்று நாளிதழ்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதில் அரசாங்கத்திற்கு உள்ள நோக்கம், உயர்ந்தது—உன்னதமானது—சிறந்தது—செம்மையானது. பாராட்டுகிறோம் அரசாங்கத்தை—இத்தகைய எழில் மிகு நோக்கத்தைக் கொண்டிருப்பதற்காக.

ஆனால் இந்தத் தூய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவர்கள் கையாள இருக்கிற நடைமுறைத் திட்டம், பொருத்தமற்றது—பொருளற்றது—நியாயமற்றது—தேவையற்றது என்பதை எடுத்துக்காட்டவேண்டியது நம்முடைய கடமை.

"வருஷக் கணக்கில் ஒரே வகுப்பில் தேக்கமுற்றிருப்பது விரும்பத் தக்கதல்ல. ஆனால் அபராதம் விதிப்பார்களே என்று பயந்து எந்த மாணவனும் கஷ்டப்பட்டு உழைப்பான் என்று நம்பக் கூடவில்லை. உண்மையில் அது பெற்றோருக்கு அபராதம் விதிப்பதாகத்தான் பொருள்படும். ஆசிரியருக்கு அடங்காத இத்தகைய பிள்ளைகள் தந்தைக்கு அடங்குவர் என்று எதிர்பார்க்க முடியாது." என்று **"தினமணி"** நாளேடு, தன்னுடைய 4—7—1965 இதழின் துணைத் தலையங்கத்தில், "தவறான யோசனை" என்னும் தலைப்பின் கீழ்த் திட்டவட்டமான முறையில் எடுத்துக் கூறியுள்ளது. இந்தக் கருத்துக்களை அரசாங்கத்தினர் தீவிரமான முறையில் அலசி ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்பது நம்முடைய ஆவல். ஏனென்றால் இந்தக் கருத்துக்களைத் "தினமணி" மட்டும் கொண்டிருக்கவில்லை. ஏறத்தாழ எல்லா ஆசிரியர்களும் பள்ளிக்கூட நிர்வாகிகளும் இதேவகைக் கருத்துக்களைத்தான் கொண்டிருக்கிறார்கள்.

"அநாதைகள், பிற்பட்டோர், ஹரிஜனங்கள் போன்ற பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் விஷயத்தில் அதிகச் சிக்கல் ஏற்படும். தவிர இந்த முறை அமுலுக்கு வருமாயின் மேல் வகுப்புக்குத் தூக்கிப் போடுவதற்காகத் தவறான முயற்சிகளும் ஊழல்களும் கூடப் பல இடங்களில் தலை தூக்கக்கூடும். தேறாதவர்களின் கிளர்ச்சிகளும் ஆர்ப்பாட்டங்களும் ஏற்கனவே ஆங்காங்கு நிகழ்வது நாடறிந்த நிலவரம். எனவே இந்த யோசனையைக் கைவிட்டு வேறு உபாயங்களைத் தான் நாடவேண்டும்." என்றும் "தினமணி" ஏடு எழுதியிருக்கிறது.

ஒரே வகுப்பில் இரண்டுமுறை தவறிவிடுகிற மாணவர்களுக்கு அபராதம் விதிப்பது என்கிற முறையைவிட, அத்தகைய மாணவர்களுக்கு இலவசக் கல்வி கிடையாது என்றும் அவர்கள் தொடர்ந்து அவ்வகுப்பில் படிக்கவேண்டுமானால் கட்டணம் கட்டித்தான் படிக்கவேண்டும் என்றும் ஏற்பாடு செய்வது, பொருத்தம் உள்ள முறையாக இருக்கும் என்பது, நம்முடைய கருத்து.

இப்படிச் செய்வதால், எல்லா மாணவர்களுக்கும் கல்வி இலவசமாகத் தரப்படுகிறது என்று சொல்லிக் கொள்வதற்கு உரிய வாய்ப்பு இல்லாமற் போய்விடுமே என்று ஆளும் கட்சியினர் கருதக்கூடும். அப்படி இல்லாமற் போவதால் நாட்டிற்கு எத்தகைய இழப்பும் இல்லை. கல்வியில் உண்மையிலேயே அக்கறை உள்ள மாணவர்களுக்குமட்டும் இலவசக் கல்வி உண்டு என்றும், அத்தகைய அக்கறை இல்லாமல், ஏதோ நாங்களும் பள்ளிக்கூடம் போய்வருகிறோம் என்கிற அலட்சியப் போக்குடன் நாட்களை ஓட்டிவரும் மாணவர்களுக்கு இலவசக் கல்வி இல்லை என்றும் ஏற்பாடு செய்வது, முற்றிலும் நியாயமான முறை; பொருத்தமான ஏற்பாடு; தேவையான திட்டம்.

இந்தக் கண்ணோட்டத்தில் இந்தப் பிரச்சினை முழுவதையும் அரசாங்கத்தினர் அலசி ஆராயவேண்டும் என்பதே நம் வேண்டுகோள்.

முதலமைச்சர் அளித்துள்ள மூதுரை

" தமிழ் நாட்டுக் கல்வியைப் பொறுத்தவரை அதன் தரத்தைக் கவனிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. இதுவரை தமிழ் நாட்டில் கல்வி பரவுவதிலும் பெருகுவதிலுமே நாம் கவனம் செலுத்தி வந்தோம். அப்பணியில் நாம் மிகுந்த

வெற்றியை அடைந்திருக்கிறோம். ஆனால் கல்வியின் வளர்ச்சிக்கு ஏற்ப அதன் தரமும் அமையவேண்டும். தரத்தை உயர்த்தும் பணியில் இனி நாம் ஈடுபடவேண்டும்."

இந்த அருமையான கருத்துரையைத் தந்தருளியவர், தமிழகத்து முதலமைச்சர் திருவாளர் பக்தவத்சலம் அவர்கள் ஆகும்.

தமிழகத்தின் தொடக்கப் பள்ளிகள், நடுத்தரப் பள்ளிகள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் அளிக்கப்பட்டு வருகிற கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காகத் தமிழ் நாட்டு அரசாங்கத்தால் சென்னை மாநிலக் கல்விக் கழகம் என்னும் பெயருடைய புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

அந்த அமைப்பின் தொடக்க விழா, சென்னை நுங்கம்பாக்கத்தில் நவம்பர் திங்கள் 18ஆம் நாளன்று நடைபெற்றிருக்கிறது. அத்தொடக்க விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய நேரத்தில் தான், முதலமைச்சர் அவர்கள், மேலே தரப்பட்டுள்ள முதல்தரமான கருத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

முதலமைச்சர் அளித்துள்ள இம் மூதுரை, பொருத்தமான நேரத்தில் பொருத்தமான முறையில் தரப்பட்டுள்ள பொருத்தமான கருத்துரை என்பதைக் கல்வித் துறைப்பற்றிய ஆழ்ந்த அனுபவமும் அகன்ற அறிவும் படைத்த எவரும் மறுக்க முடியாது.

ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகளாகத் தமிழகத்தில் தொடக்கப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும், மிகுந்த வேகத்தில் தொடங்கப்பட்டு வந்திருக்கின்றன. அளவு கடந்த வேகத்தில் தொடங்கப்பட்டுள்ளன என்று சொன்னால், இன்னமும் பொருத்தமாக இருக்கும்.

சிறப்பாகவும் குறிப்பாகவும் உயர்நிலைப் பள்ளிகளைப் புதிது புதிதாகத் தொடங்குவதில், தேவைக்கு மீறிய உற்சாகமும் அளவுக்கு மீறிய ஆவலும் காட்டப்பட்டுள்ளன.

சென்ற பதினைந்து ஆண்டுகளில் புதிதாக நிறுவப்பட்டுள்ள உயர்நிலைப் பள்ளிகள், ஆயிரமாயிரம். இவை அத்தனையும், அந்தந்த வட்டாரத்தில் உண்மையாகவே தேவைப்படுகின்றன என்ற காரணத்தால்தான் தொடங்கப்பட்டன என்று கூறிவிட முடியாது.

எத்தனையோ இடங்களில், உயர்நிலைப் பள்ளிகள், தேவை என்கிற காரணத்திற்காகத் தொடங்கப்படாமல், வேறுவகைக் காரணங்களுக்காகத் தொடங்கப்பட்டுள்ளன.

"இந்த ஊரில் ஓர் உயர்நிலைப் பள்ளி இருந்துதான் தீரவேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் வற்புறுத்துகிறாரா? அப்படியானால் இங்கு ஒரு பள்ளி தொடங்கப்படவேண்டியதுதான்."

"இன்ன ஊருக்கு மிக அருகிலேயே மற்றோர் உயர்நிலைப் பள்ளி இருக்கிறதா? அப்படி இருப்பதால் இந்த ஊருக்கு உயர்நிலைப் பள்ளி தேவை இல்லையா? உண்மைதான், தேவை இல்லைதான். என்றாலும் என்ன செய்வது? உயர்நிலைப் பள்ளி ஒன்றைத் தொடங்கித்தான் தீரவேண்டும் என்று ஒரேயடியாகப் பிடிவாதம் பிடிக்கிறாரே இவர். இவர், அந்தப் பகுதியில் நம் கட்சியின் பெரிய தூண்போன்றவர் ஆயிற்றே! இவருக்கு மனவருத்தம் உண்டாக்கக் கூடாதே! போனால் போகட்டும். இவருக்காக அந்த ஊரில் ஒரு பள்ளியைத் தொடங்கிவிடுவோம்."

"அடுத்த ஊருக்கும் இந்த ஊருக்கும் நீண்ட நாள் பகையா? இந்த ஊருக்கு ஓர் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்குவதற்கான அனுமதி தரப்படாமல் தங்களுக்கும் அதே வகையான அனுமதியைத் தரவேண்டும் என்று அடுத்த ஊர்க்காரர்கள் கேட்கிறார்களா? அப்படியே தந்து விடுவோம்"

இப்படிப்பட்ட உரையாடல்கள் சர்வ சாதாரணமாக நடைபெற்றிருக்கின்றன சென்ற பல ஆண்டுகளில்.

இப்படித்தான் தொடங்கப்பட்டுள்ளன பலபல புதிய பள்ளிக் கூடங்கள்.

புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள பல பள்ளிக்கூடங்களுக்குப் போதிய இடவசதி இல்லை. பிள்ளைகள் விளையாடுவதற்குத் தேவையான மைதானங்கள் இல்லை. பல பாடங்களை நடத்துவதற்குத் தேவையான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை. கல்விப் பயிற்சிக்குத் தேவைப்படுகிற கருவிகள் போதிய அளவில் தரப்படவில்லை.

ஒன்றிற்கு ஒன்று மிக நெருக்கமான இடங்களில் பல உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டிருப்பதால், பல பள்ளிகளுக்குப் போதுமான அளவு மாணவர்களும் கிடைப்பதில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், இத்தகைய கல்வி நிலையங்களில் தரப்படுகிற கல்வியானது, பெறவேண்டிய அளவு தரத்தைப் பெற்றிருக்கவில்லை என்பதில் வியப்பு என்ன இருக்கமுடியும்?

கல்வியின் அளவு பெருகியிருக்கிறது—ஆமாம்—மறுக்கமுடியாத உண்மை இது.

ஆனால் அதே நேரத்தில் கல்வியின் தரம் குறைந்திருக்கிறது. இதுவும் உண்மைதான். இதையும் மறுக்க முடியாது.

உடனடியாகக் கல்வியின் தரத்தை உயர்த்தும் பணியில், நம் அரசாங்கமும் சரி, தொடர்புடைய ஏனையோரும் சரி, முழு மூச்சுடன் ஈடுபட்டாக வேண்டும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம், 1966 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து தொடங்குகிறது அல்லவா? இந்தத் திட்டத்தின் காலத்தில், புதிய பள்ளிகளைத் தொடங்குவது குறைவாகவும், இருக்கிற பள்ளிகளின் வசதிகளைப் பெருக்குவது மிகுதியாகவும் செய்யப்படவேண்டும்.

கல்வியின் வளர்ச்சிக்காக ஒதுக்கப்படுகிற தொகையில் பெரும் பகுதி, இனி, சில ஆண்டுகளுக்காவது, இருக்கிற பள்ளிகளின் வசதிகளையும் தரத்தையும் உயர்த்துவதற்கே செலவிடப்பட வேண்டும்.

எங்கெந்தப் பள்ளிகளுக்குப் போதிய கருவிகள் இல்லையோ அவற்றிற்கு அந்தக் கருவிகள் தரப்பட வேண்டும். எங்கெந்தப் பள்ளிகளுக்கு விளையாட்டுத் திடல்கள் இல்லாமலிருக்கின்றனவோ அவற்றிற்குத் திடல்கள் கிடைக்கும்படிச் செய்யப்படவேண்டும். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்காத நெருக்கடியில் சிக்குண்டு தத்தளிக்கும் பள்ளிகளுக்கு அத்தகைய ஆசிரியர்கள் எளிதில் கிடைத்தற்கு உரிய சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும்.

ஒவ்வோர் ஆசிரியராலும் கவனிக்கப்படவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை, மிகக் குறைந்த அளவினதாக ஆக்கப்பட வேண்டும்.

கல்வியின் தரம் வளரவேண்டுமானால், இந்த எண்ணிக்கையைக் குறைப்பதில் முழுக் கவனம் செலுத்தப்பட்டாக வேண்டும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும், முப்பது மாணவர்களுக்கு மேல் ஒரே ஆசிரியரால் கவனிக்கப்படவேண்டிய நிலை இருக்கக் கூடாது.

முப்பது மாணவர்களை மட்டுமே ஓர் ஆசிரியர் கவனிப்பது என்கிற நிலை இருந்தால்தான், ஒவ்வோர் மாணவனின் தனித்தனி ஆற்றல்களையும் சிறப்பு இயல்புகளையும் குற்றங் குறைகளையும் தனித் தனியே கவனிக்கவும், அவனவனுக்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கவும், ஒவ்வொரு மாணவனையும் தக்க முறையில் சீர்திருத்தி முன்னேற்றவும், ஆசிரியரால் முடியும்.

நிலைமை இவ்வாறு அமையாமல் ஒவ்வோர் ஆசிரியரிடமும் அளவுக்கு மீறிய மாணவர்களை ஒப்படைக்கிற இன்றைய நிலையே நீடிக்குமானால், ஒவ்வொரு மாணவனைப் பற்றியும் தனித்தனிக் கவனம் செலுத்தமுடியாது. அப்படிச் செலுத்த முடியாவிட்டால், கல்வியின் தரம் உயராது.

கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காகச் செய்யப்படவேண்டிய பணிகள் பற்பல இருக்கின்றன என்றபோதிலும், மிகவும் இன்றியமையாத பணி இதுவே ஆகும்.

அவசரக் கோலம் அள்ளித் தெளித்தாற்போலத் திடீர் திடீரென்று, போதிய அளவு முன்யோசனையும் ஆராய்ச்சியும் இல்லாமல்; யார் யாரைக் கலந்து ஆலோசிக்கவேண்டுமோ அவர்களை யெல்லாம் கலந்து ஆலோசிக்காமல், கல்வித் துறையில் புதுப் புதுச் சீர்திருத்தங்களை நுழைக்கிற போக்கு இனி இருத்தல் ஆகாது. தரத்தை உயர்த்துவதற்காகச் செய்யப்படவேண்டிய மற்றொரு முக்கியமான பணி இது.

தரத்தை உயர்த்தும் பணியில் கவனம் செலுத்தவேண்டிய காலம் வந்துவிட்டது என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ள அறிவுரையை மனமார வரவேற்கிறோம். தக்க நேரத்தில் தகுதி வாய்ந்த எச்சரிக்கையை விடுத்த அப் பெருந்தகையாளரை உளமாரப் பாராட்டுகிறோம்.

முதலமைச்சரின் கருத்துரையை, ஏனைய அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், ஆளும் கட்சியின் தலைவர்களும், தொடர்புடைய ஏனைய யாவரும், ஊன்றிக் கவனித்து, உரிய முறையில் பணியாற்றவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி. B. A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0- 13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 8 வீதம் கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

கல்வித் துறைச் செய்திகள்

ராணுவத்தினர் குழந்தைக ளுக்குக் கல்விச் சலுகை

எல்லைப் பகுதிகளில் போரில் கொல்லப்பட்ட அல்லது ஊன மடைந்த ராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கு கல்விச் சலு கைகள் அளிக்க தமிழக அரசாங் கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அத்துடன் போர் நடைபெறும் பகுதிகளில் பணியாற்றும் ராணு வவீரர்களின் குழந்தைகளுக்கும், அந்தப் பகுதிகளிலிருந்து குடி பெயர்க்கப்பட்ட சிவிலியன் அதி காரிகளின் குழந்தைகளுக்கும் ஆரம்பக் கட்டணத்தில் விதி விலக்கு, பள்ளிச் சீருடை அணி வதில் விதிவிலக்கு சென்னை, செகண்டரி கல்வித்துறை நெறி யாளர் நிர்வாகத்தில் உள்ள எல் லாக் கல்வி நிலையங்களிலும் சேர டிரான்ஸ்பர் சர்டிபிகேட்டுகள் அளிப்பதில் விதிவிலக்கு ஆகிய கல்விச் சலுகைகள் அளிக்க தமி ழக அரசாங்கம் முன் வந்திருக் கிறது.

கல்லூரிகளில் மாலை வகுப்புகள் இன்னும் நிறைய ஏற்பட வற்புறுத்தல், யு. எஸ். மானிய முறையை பின்பற்ற சிபாரிசு

காலேஜுகளில் தொடர்ந்து படிக்க முடியாதவர்களின் சௌக ரியத்துக்காக, இன்னும் நிறைய கல்லூரிகளில் மாலை வகுப்புகள் திறக்கவேண்டும் என்று மத்ய ரேஞ்சு உதவி போலீஸ் இன்ஸ் பெக்டர் ஜெனரல் திரு. சி. வி. நரசிம்மன் வற்புறுத்தினர்.

ஜமால் முகம்மது மாலைக் கல்லூரி மாணவர் யூனியனைத் துவக்கி வைத்து அவர் பேசினர்.

அமெரிக்காவில் அநேகமாக எழுத்தறிவின்மை ஒழிக்கப் பட்டு விட்டதெனக் கூறி, அங்கு கல்வி ஸ்தாபனங்களுக்கு நிதி உதவி அளிக்கும் முறையை இந்தியாவும் பின்பற்றலாம் என்று திரு. சி. வி. நரசிம்மன் கூறினர்.

அமெரிக்காவில் கல்விக்காகச் செலவிடப்படும் மொத்தத் தொகையில் 4 சத விகிதம் பெட ரல் சர்க்காரால் ஏற்கப்படுகிறது. 40 சத விகிதம் மாகாண சர்க் கார்கள் தருகின்றன. பாக்கி 56 சத விகிதம் ஸ்தல ஸ்தாபனங் கள் கொடுக்கின்றன. அமெரிக் காவில் மொத்தம் 40,000 ஸ்தல பள்ளி ஜில்லாக்கள் உள்ளன. கல்வி அபிவிருத்திக்காக வரிகள் விதிக்க இவைகளுக்கு அதி காரம் காட்டப்பட்டுள்ளன. இந்தியாவிலும் இதே மாதிரி பரவலான நிதி மான்ய முறை

யைக் கைக்கொள்ளலாம் என்றும், இதனால் செலவு குறைவதோடு, ஸ்தல தேவைகளையும் கவனித்துச் செய்ய முடியும் என்று திரு. நரசிம்மன் கூறினார்.

மாலை வகுப்புகளால் கல்லூரிக்குள் கல்வி நடவடிக்கைகளும் விரிவடையும் என்றார்.

மாணவரிடை கட்டுப்பாடின்மையைப் பற்றிய பிரஸ்தாபங்களைக் குறிப்பிட்டு, பிரபல கல்வி நிபுணரான பேராசிரியர் வொயிட்ஹெட் கூறியுள்ள மூன்று கட்ட முறையைப் பின்பற்றலாம் என்று திரு. நரசிம்மன் கூறினார். அதாவது முதல் கட்டத்தில் செகண்டரி கல்வி முடிய மாணவர்கள் விரும்புவதையெல்லாம் படிக்க அனுமதிக்கப்பட வேண்டும். கல்லூரியில் சேர்ந்தது முதல் பட்டப் படிப்பு வரையில் கடும் கட்டுப்பாடு இருக்கவேண்டும். பட்டப் பிற்காலப் படிப்பு முதல் தொடங்கும் மூன்றாவதுகட்டத்தில் மாணவர்களுக்கு ஓரளவு பெரறுப்புணர்ச்சி ஏற்பட்டிருக்குமாகையால், சுதந்திரம் கட்டுப்பாடு இரண்டும் இருக்கலாம்.

விஞ்ஞான, கணித பாட போதனை

முன்னேற்றத்துக்கு ஆசிரியர் சங்கத் திட்டம்

விஞ்ஞானம், கணிதக் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு நிலைகளிலும் பலதரப்பட்ட நிறுவனங்களை அமைக்க வேண்டும் என்று அகில இந்திய விஞ்ஞான கணித ஆசிரியர்கள் சங்கம் யோசனை கூறியுள்ளது.

மத்திய அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கங்களும், இதற்கான நிறுவனங்களை அமைக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் விஞ்ஞான, கணிதக் கல்வி வளர்ச்சி நிறுவனங்கள் அமைய வேண்டும். இந்நிறுவனங்களின் பணிகளை ஒரு முகப்படுத்தி இணக்கமாக அமைக்கவும், அவற்றை நடத்துவதற்கான நிதி உதவிகளுக்கு ஏற்பாடு செய்யவும் விஞ்ஞானக் கல்விக் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் ஆசிரியர்கள் கோருகிறார்கள்.

"இந்தியப் பள்ளிகளில் கணித விஞ்ஞானக் கல்வி நிலை" என்பது பற்றி இந்தச் சங்கம் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் ஆசிரியர்களின் யோசனைகள் காணப்படுகின்றன.

உயர்நிலைப்பள்ளிகள், உயர்தர செகண்டரிப் பள்ளிகளில் விஞ்ஞான சோதனைக்கூடங்கள், போதனைச் சாதனங்கள் சம்பந்தமான திட்டக்குழு சிபாரிசுகளை சங்கம் பொதுவாக ஆதரித்துள்ளது.

பௌதிகம், ரசாயனம், உயிரியல் பாட போதனைகளுக்கான புதுக் கருவிகளைச் செய்வதில் அடுத்த சில ஆண்டுகளில் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் புதுக் கருவிகளுக்காகும் செலவு இப்போதிருப்பதைவிடக் குறைவாக இருக்க

வேண்டும் என்றும் கூறியுள்ளனர். கிருமியியல் ரசாயனத்துக்கான கருவிகளைச் செய்ய வேண்டும் என்றும் கோருகிறார்கள்.

ஆரம்பக் கல்விச் சாலைகளில் ஆசிரியர்களை அமர்த்தியும், கட்டிடங்கள் போன்ற குறைந்த பட்ச வசதிகளைச் செய்து கொடுத்தும் போதனை நிலையைப் பலப்படுத்த வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளின் மூலம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வேண்டும். அவர்கள் ஊழியம் புரிந்து கொண்டே பயிற்சி பெற ஏற்பாடு இருக்க வேண்டும்.

நடுத்தரக் கல்வி வகுப்புகளின் பொது விஞ்ஞான போதனைக்கும் போதுமான வாய்ப்பு அளிக்கவில்லை என்று சங்கம் கருதுகிறது. இவ் வகுப்புகளில் பௌதிகம், ரசாயனம், உயிரியல் என்று தனித்தனிப் பாடமாக விஞ்ஞானத்தைப் போதிக்க வேண்டும் என்ற கல்விக் கமிஷன் கருத்துக்கு ஆதரவு காட்டுகிறார்கள். வானவியல், பூகர்ப்பவியல் பாடங்களையும் போதிக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள். ஒவ்வொரு நடுத்தரப் பள்ளியிலும் ஒருங்கே அமைந்த அறை இருக்க வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளனர்.

உயர்நிலை செகண்டரிப் பள்ளிகளில் விஞ்ஞானம், கணிதம் போதிக்கும் முறையைப் பற்றி விரிவாகப் பாகுபாடாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விஞ்ஞான கணித போதனை இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா ரஷியா முதலிய நாடுகளில் இப்போது எவ்விதம் அமைந்துள்ளதென்பதை விரிவாகக் கூறியுள்ளனர். உயர் நிலைப்பள்ளிகளில் பௌதிக விஞ்ஞானம் உயிரியல் விஞ்ஞானம் என இணக்கமான முறையில் போதிக்க வேண்டும் என்பதுஆசிரியர்களின் கருத்து. மத்தியப் பிரதேசம் போன்ற சில ராஜ்யங்களில் உயர்தர செகண்டரி பள்ளிகள் உள்ளன. அங்கு பௌதிகம், ரசாயனம் உயிரியல் தனித்தனியாகப் போதிக்கலாம்.

பாராளுமன்றத்தில்

பதின் மூன்று வருடம் பேசாத உறுப்பினர்

அமைச்சரானதும் பேசினார்!

மூன்று தடவை பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும்கூட பாராளுமன்றத்தில் பேசாத உறுப்பினராய் இருந்த திரு. ராமேஸ்வர் சாகு, அமைச்சர் பதவி ஏற்றதும் பேசினார்.

இதுபற்றி அவர் குறிப்பிடும் போது பேசுவது என்பழக்கமல்ல. தியாகத்திலும், சேவையிலும் வாய் பேசாது ஈடுபடுவது எனக்குப் பிடித்தமானது; என்று பேசினார்.

* * *

இங்கேபோனால் மேக மண்டலத்தில் வாழலாம்!

உலகத்திலேயே மிக உயர மான கட்டிடம் "எம்பயர் ஸ்டேட்" கட்டிடம் தான். இதன் உயரம் 442 மீட்டர் (1473 அடி) அந்தப் புகழ் இனி அந்தக் கட்டிடத்திற்கு இல்லாமற் போகப் போகிறது.

ஜெர்மனியில் உள்ள பெர்லின் ஆர்ச்பிடெக்ட் இராபர்ட் கெபீரியல் என்ற கட்டிடக் கலைக்கழகத்தார் இந்த எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தைப்போல் மூன்றுமடங்கு உயர முடைய கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இந்தப் புதிய கட்டிடத்தின் உயரம் 1250 மீட்டர் (4167 அடி) இந்தக் கட்டிடத்தில் மொத்தம் 356 அடுக்கு மாடிகள் அமையும். மேகமண்டலத்தால் - கட்டிடத்தின்பாதியளவு உயரம் மறைக்கப் படுமெனஎதிர்பார்க்கப்படுகிறது. பாதிக்கு மேற்பட்ட உயரத்தில் வாழும் வாய்ப்பைப் பெற்றவர்கள் மேகமண்டலத்தில் வாழும் வாய்ப்பைப் பெற்றவர்களாகி விடுகிறார்கள்.

64 மீட்டர் உயரமுள்ள வட்ட வடிவத்தில் இந்தக் கட்டிடம் அமைக்கப்படும். கட்டிடத்தின் அடித்தளம் இரும்புக் கான்கிரீட்டால் அமைக்கப்படுகிறது. கட்டிடத்தின் முதல் 16 அடுக்குகள் பூமிக்கு அடியில் அமைக்கப்படும். போர்க்காலங்களில் அணு ஆயுதத்தாக்குதல்களிலிருந்து தப்பித்துக் கொள்ள இந்த அறைகள் பயன்படும். மற்ற நாட்களில் 4000 கார்கள் நிறுத்திவைக்கும் கிடங்காக அதைப் பயன்படுத்துவார்களாம். குரோமியம் நிக்கல் ஸ்டீல் என்ற உலோகத்தால் இந்தக் கட்டிடம் கட்டப்படுகிறதாம். தீ விபத்து போன்ற பயத்திற்கு அவசியமே இருக்காது என்று உறுதி கூறுகின்றனர்.

6 பெரிய லிப்டுகள் இதில் அமைக்கப்படும். இந்த ஆறு பெரிய லிப்டுகளிலும் 18 சிறிய லிப்டுகள் பொருத்தப்பட்டிருக்கும். பெரிய லிப்டுகள் இருபது மாடிகளுக்கு ஒரு இடத்தில்தான் நிற்கும். இடைப்பட்ட மாடிகளுக்குச் செல்ல வேண்டியவர்கள் அங்கிருந்து சிறிய லிப்டுகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த லிப்டுகளின் மூலம் ஒரு மணிக்கு 6000 பேர்கள் கீழும் மேலும் செல்ல வசதி செய்யப் பட்டுள்ளதால் போக்குவரத்து வசதியைப் பற்றி யாரும் கவலைப்படத் தேவையில்லை.

உணவு, உடை, போன்ற வசதிகளுக்காக இருபது அடுக்கு மாடிகளுக் கிடையில் ஒரு கடைத் தெருவும் உண்டு. வாழ்க்கைக்கு வேண்டியஎல்லாப்பொருள்களும் அந்தக் கடைகளில் கிடைக்கும்.

—"முத்தாரம்"

நீவிர் அறிவீரா?

தலைமை ஆசிரியர் உரை மீது பந்தயம் பிரிட்டிஷ் மாணவர்கள் விசித்திரம்

தங்களுடைய பள்ளித் தலைமை ஆசிரியர் எஸ். பிரைஸ் பிரசங்க தினத்தன்று உரை நிகழ்த்த எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வார் என்பது பற்றி லங்காஷயரில் பாரோஸிலுள்ள ஒரு பள்ளி மாணவர்கள் பந்தயம் நடத்தினர்.

அவர் 35 நிமிஷ நேரம் எடுத்துக்கொள்வார் என்றே பெரும்பாலான மாணவர்கள் பந்தயம் கட்டினர்.

ஆனால் இதுபற்றிக் கேள்விப்பட்ட தலைமை ஆசிரியர் தனது பிரசங்கத்தை 13 நிமிஷ நேரத்தில் முடித்து விட்டார்.

பிறகு அவர் கூறுகையில் "சூதாட்டப் பந்தயம் எந்த அளவுக்கு ஏமாற்றும் என்பதை இது உங்களுக்குக் கற்பிக்கும்" என்றார்.

உலக மக்கள் தொகை 322 கோடி 1 வருடத்தில் 6 கோடி அதிகரிப்பு

1964 மத்திய வாக்கில் உலகின் ஜனத்தொகையைக் கணக்கிட்டபோது 1 வருடத்தில் 6 கோடி அதிகரிப்பதாகத் தெரிய வந்தது அப்போது உலக ஜனத் தொகை 320 கோடி.

ஐ. நா. புள்ளி விவர அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள கால் வருட அறிக்கையில் இந்தவிவரம் காணப்படுகிறது. ஆசியாவில்தான் ஜனத்தொகை மிகவும் அதிகம். ஆசியாவில் 178·3 கோடி. ஐரோப்பாவில் 44 கோடி. ஆபிரிக்காவில் 30·4 கோடி. வட அமெரிக்கா 28·6 கோடி. சோவியத் ரஷியாவில் 22·8 கோடி. தென் அமெரிக்காவில் 18·2 கோடி. கம்யூ சீனாவில் 63·8 கோடி. இந்தியாவில் 47·1624 கோடி. இந்தோனேஷியாவில் 10·2 கோடி. பாகிஸ்தானில் 10·076 கோடி.

நிலத்தை உழாமலேயே பயிரிடும் முறை

நிலத்தை உழாமலேயே பயிரிடும் புரட்சிகரமான புதியமுறை ஒன்று பிரிட்டிஷ் விவசாய ஆராய்ச்சிக் கவுன்சிலின் அறிக்கை ஒன்றில் விளக்கப்பட்டுள்ளது. உழாமலேயே விதைப்பதற்கான வகையில் நிலத்தைத் தயார்ப்படுத்தும் இம்முறையில் ரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

விதைப்பதற்கான புதிய முறை பற்றியும் ஆராய்ச்சி நடத்

பட்டுள்ளது. விதைகள் திரவம் ஒன்றில் போடப்பட்டு நிலத்துக்குள் பீச்சப்படுகின்றன: நிலத்தில் பதியும் விதைகளை அத்திரவம் முளைவிடும்படி செய்கிறது.

உருளைக்கிழங்கு போன்று வேரில் விளையும் கிழங்குகளை யந்திர மூலம் பறிப்பதைச் சுலபமாக்கும் வகையில் எக்ஸ்ரே யந்திரம் ஒன்றை ஸ்காட்லாந்திலுள்ள விவசாய என்ஜினீரிங்கழக நிலையம் ஒன்று உருவாக்கியுள்ளது.

அந்த யந்திரம் கற்களையும், மண்கட்டிகளையும் விலக்கி கிழங்குகளை மட்டும் பறிக்கும் திறன் கொண்டதாகும்.

நெல்லின் உமியிலிருந்து செங்கல் தயாரிப்பு

எடைக் கணக்கில் பார்த்தால் உலகில் உற்பத்தியாகும் நெல்லில் ஐந்தில் ஒரு பங்கு வர்த்தக ரீதியில் பயன்படுத்தப்படாமல் வீணாக்கப்படுகிறது. அவ்விதமாக வீணாக்கப்படும் உமியானது எளிதில் கெட்டுப்போவதில்லை. அதை எரித்தாலும் குறைவான உஷ்ண சக்திதான் கிடைக்கிறது.

இந்தியாவில் ஆண்டுதோறும் உற்பத்தியாகும் 5 கோடியே 50 லட்சம் டன் நெல்லிலிருந்து கிடைக்கும் 1 கோடியே 10 லட்சம் டன் உமியானது அனேகமாகப்பயனற்ற கழிவுப் பொருளாகத்தான் இருக்கிறது.

லண்டனில் வெப்ப மண்டலப் பொருட்கள் கழகத்தில் நடத்தப்பட்ட பரிசோதனைகளிலிருந்து உமியைக் கனமற்ற பயனுள்ள கட்டுமானப் பொருளைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தலாம் என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

உமியை சிமெண்டுடன் கலவைப் பொருளாகச் சேர்ப்பதற்கு ஒரு முறை கண்டு பிடிக்கப்பட்டால், உமி ஏராளமாகக் கிடைக்கும் நாடுகளுக்கு அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று மேற்படி கழகத்தின் நிபுணர்கள் கருதினர்.

அவர்கள் பரிசோதனைகளை ஆரம்பித்தபோது காற்றில் உலர்த்தப்பட்ட உமியை தண்ணீர்; சிமெண்ட் ஆகியவற்றுடன் சேர்த்தனர். ஆனால் சிமெண்ட் இறுகும்போது உமி தொடர்ந்து ஈரத்தை உறிஞ்சுவதை அவர்கள் கண்டனர். எனவே இந்த முறையிலான கான்கிரீட் பலம் குன்றியிருப்பதை அவர்கள் கண்டனர்.

இப்பிரச்சினையை சமாளிக்க அவர்கள் முடிந்த மட்டும் தண்ணீரை உறிஞ்சிக் கொள்ளும் வகையில் உமியைத் தண்ணீரில் ஊறவைத்தனர். பிறகு உமியைச் சுற்று யந்திரத்தில் போட்டு அதன் மேற்புறத்திலிருந்த தண்ணீரைப்போக்கினர்.

பிறகு பரிசோதனைகள் நடத்தப்பட்டு. சிமெண்டும் உமியும் தனித்தனியே பிரிந்துவிடாமலிருக்கும் சரியான கலவை அளவு கண்டு பிடிக்கப்பட்டது.

ஒற்றைமாடிக் கட்டடங்களில் கனம் தாங்கவேண்டிய பகுதி

களிலும் கூட மேற்படி வகையில் தயாரிக்கப்பட்ட கான்கிரீட் பிளாக்குகளையும், செங்கற்களையும் பயன்படுத்தலாம் என்று பல் வேறு பரிசோதனைகளில் தெரிய வந்தது. பெரிய கட்டடங்களில் கனம் தாங்க வேண்டியிராத பகுதிகளிலும் அவற்றைப் பயன் படுத்தலாம்.

வெளியில் பூச்சு கொடுக்காமல் கட்டடம் கட்டுவதாக இருந்தால் வெளிப்புறச் சுவர்களுக்கு உமியினாலான செங்கற்களைப் பயன் படுத்த முடியாது.

இவற்றின் மீது பருவநிலை மாறுபாடுகளால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. மேற்கூறிய அளவு முறைப்படி இராது. நீள் சதுர கான்கிரீட் பிளாக்குகள் செய்யப்பட்டன. அவற்றில் ஒன்றின் மீது சிமெண்ட் பூச்சு கொடுக்கப்பட்டது. மற்றொரு பிளாக்குக்கு பூச்சு எதுவும் அளிக்கப்படவில்லை.

இங்கிலாந்தின் மாறுபட்ட பருவநிலைக்கு உள்ளாகும் வகையில் அவை வெளியே 18 மாதங்கள் போடப்பட்டிருந்தன. எனினும் இரண்டு கான்கிரீட் கட்டடங்களிலும் எவ்விதச் சேதமும் காணப்படவில்லை.

மிகவும் செலவு குறைந்த சாதனங்களையும், மிகக்குறைவான நுட்பத்திறனையும் கொண்டு கட்டுமானப் பொருட்களைத் தயாரிக்க புதிய முறை பல சாதனங்களைக் கொண்டது என்று கழகத்தின் நிபுணர்கள் கருதுகின்றனர்.

இக்கட்டுமானப் பொருள் தயாரிப்பதற்கு தட்டுப்பாடின்றி உமி கிடைக்க வேண்டும் என்பது தான் பிரதான தேவையாகும். தவிர உமியை எடுத்துவரும் செலவு குறைவாக இருக்கும் வகையில் அது அருகாமையிலேயே கிடைக்க வேண்டும்.

பள்ளித் தோட்டங்களில் உணவு தானியங்களைப் பயிரிடலாம்

நந்தா யோசனை

அவசர நிலைமை ஏற்பட்டுள்ள இந்தச் சமயத்தில் பள்ளிகளின் தரிசு நிலங்களில் உணவுதானிய பயிர்களும்விரைவாகப் பயனளிக்கும் பழ மரங்கள், செடிகளையும் பயிரிட வேண்டும் என்று உள் துறை மந்திரி திரு. நந்தா இன்று இங்கு யோசனை தெரிவித்தார்.

பீஹார் பள்ளித் தோட்டங்கள் திட்ட கமிட்டி ஆதரவில் பாட்னா உயர்நிலைப் பள்ளியில் நடந்த ஒரு வைபவத்துக்கு அவர் தலைமை வகித்துப்பேசினார்.

ஸ்தல ஆங்கில வார சஞ்சிகை ஒன்று இந்தத் திட்டத்தைப் பாராட்டி எழுதியுள்ளது. பள்ளிகளுக்கிடையே நடக்கும் போட்டியில் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்படும் பள்ளித் தோட்டத்துக்கு அந்த வாரப் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள கோப்பை வழங்கப்படும்.

ஐம்புலன்களின் இசைவு

— ஆர். பொதோல்னி —

"மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்ளாவிடில், எனக்குக் காது சரியாகக் கேட்காது!"

அக் காலத்தில் மானங் காப்பதற்காக எதிரியைச் சண்டைக்கு அழைத்து துப்பாக்கிப் போருக்குச் சென்றவர்கள் கறுப்பு உடைகள் உடுத்திக் கொண்டனர். இதர உடைகளைக் காட்டிலும் கறுப்பு உடைகள் ஆளின் உருவத்தைச் சிறியதாகக் காட்டுவதால், குறி பார்த்துச் சுடுவது கடினமாக இருக்கட்டுமென்று இவர்கள் கறுப்பு உடைகளுடன் போருக்குச் சென்றனர். நவீன விஞ்ஞானத்தின் ஆராய்ச்சி முடிவுகள் அவர்களுக்குத் தெரிந்திருந்தால், கண் பார்வையின் மனவியல்-உடற் கூறு இயல்புகளை அவர்கள் தமது போரில் மேலும் திறம்படப் பயன்படுத்திக்கொண்டிருப்பார்கள்.

உங்கள் உருவத்தைச் சிறியதாகத் தோன்றச் செய்ய வேண்டுமென்றால், கருப்பைவிட கருஞ் சிவப்பு உடைகளே சிறந்தவை.

இவற்றுடன் சிவப்பு மூக்குக் கண்ணாடியும் போட்டுக் கொண்டால், எதிரே நிற்பவர் ஆடி அசைவது போன்ற பிரமை ஏற்படும். சில அதிசய சோதனைகளைக் கூறுகிறேன், கேளுங்கள். சினிமாத் திரையிலே நிற்கும் ஒளி வட்டத்தைப் பாருங்கள். அது அசையவில்லை; ஆனால் அதிர்வு நாதம் எழுப்பும் சுருதி மானியை ஒலிக்கச் செய்து பாருங்கள். உடனே ஒளி விட்டம் மாறி மாறிக் குறுகிப் பெருகுவதாக எல்லோரும் கூறுவார்கள். கரிய திரையிலுள்ள ஆரஞ்சு-சிவப்புக் கோட்டைப் பார்த்துக் கொண்டிருக்கையில், இசையைப் பெருக்கெடுக்கச் செய்தால், உடனே அக்கோடு நீண்டுவிடுவது போலத் தெரியும்.

"மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்ளாவிடில், எனக்குக் காது சரியாகக் கேட்காது" என்ற கூற்று அப்படி ஒன்றும் அபத்தமானதல்ல. ஏனெனில் பச்சை நிற வெளிச்சத்தில் காது மேலும் தெளிவாகக் கேட்கிறது. இசை ரசிகர்கள் பச்சைக் கண்ணாடி போட்டுக் கொண்டால் மிக மெல்லிய நாதத்தையும் கேட்டு மகிழலாம். இசைக் கூடங்கள், நாடக மன்றங்களின் உட்புறச் சுவர்கள் சிவப்பு, ஆரஞ்சு நிறங்களில் இருக்கக் கூடாது என்று நிபந்தனை போடப்படும் காலமும் விரைவில் வரலாம்.

இதேபோல, பலமான ஓசைகள் கண் பார்வையைக் கூர்மையாக்குகின்றன. பலமான ஓசை ஒலிக்கையில், நீலப் பச்சை ஒளியை நம் கண்கள் மேலும் தெளிவாகக் காண முடிகிறது; ஆரஞ்சு-சிவப்பு ஒளியைக் கண்

டுணர்வது கடினமாகி விடுகிறது.

கண் பார்வைக்கும் செவிப் புலனுக்கும் மட்டும்தான் இந்த நெருங்கிய உறவு இருப்பதாக நினைக்க வேண்டாம்.

ருசிக்கும் கண் பார்வைக்கும் கூட இதுபோன்ற தொடர்பு உண்டு. அந்திநேரத்தில் பார்வையைத் தெளிவாக்கிக் கொள்வதற்காகப் புளிப்பு கலந்த இனிப்பைச் சப்ப வேண்டுமென உடற்கூறு நிபுணர்கள் கூறுகின்றனர். சென்ற யுத்தத்தின் போது இதற்காக எலுமிச்சம் பழச் சாற்றுடன் குளுக்கோஸ் சேர்த்து வாயில் விட்டுச் சப்புக் கொட்டினர்.

நல்ல வெளிச்சத்தில் இருந்து விட்டு, இருட்டு அறைக்குள் சென்றதும், ஒன்றுமே கண்ணுக்குத் தெரிவதில்லை. ஒரு நிமிடத்திற்குப் பிற்பாடுதான் பார்வை திரும்புகிறது. இருட்டில் பார்க்கப் பழகிக் கொள்வதற்கு நம் கண்களுக்கு ஆறு அல்லது ஏழு நிமிடம் வேண்டியிருக்கிறது என்பதைச் சோதனைகள் தெளிவு படுத்துகின்றன. இருட்டில் கண் அதன் முழு ஆற்றலையும் பெறுவதற்கு உண்மையில் 40, 45 நிமிடங்கள் தேவைப்படுகின்றனவாம்.

பொறுமையையும் அகந்தையையும் விட்டுவிடுக. பிறர்க்காகக் கூடி உழைக்கக் கற்றுக்கொள். நமது நாட்டிற்குப் பெரிதும் அவசியமானது இதுவே.

—விவேகானந்தர்.

கண் பார்வையைக் கூர்மையாக்குவது முற்றிலும் சாத்தியமே. இருட்டுக்குள் செல்லுமுன் இதர புலன்களை வயப்படுத்துவதின் மூலம் பார்வைத் திறனைக் கூடுதலாக்க முடியுமென்று விஞ்ஞானிகள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றனர்.

உடற் பயிற்சிகளும் பார்வையைக் கூர்மையாக்குகின்றன. சில நிமிடங்களுக்குத் தசை நார்களை வளைத்துப் பயிற்சிகள் செய்தால், ஐந்து, ஆறு நிமிடங்களில் பார்வை பளிச்சென்றாகி விடும். இவற்றுக்குப் பதில், பதினைந்து, இருபது முறை மூச்சை நன்றாக உள்ளுக்கு இழுத்து வெளியே விட்டாலும் போதும். முகத்திலும் கழுத்திலும் குளிர்ந்த நீரைத் தடவித் தேய்த்து விட்டுக் கொண்டாலும் இதே பலன் ஏற்படும்.

மற்றொரு சிறந்த வழியையும் பின்பற்றலாம்; இதைச் செய்தால் சீக்கிரத்தில் இருட்டிலே பார்வை திரும்பிவிடுவதுடன் பார்வையின் திறனும் ஐந்து, ஆறு மடங்கு கூடுதலாகி விடுகிறது. சிவப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு பிரகாசமான ஒளித் திரையைப் பத்து நிமிடங்களுக்குப் பார்த்துக் கொண்டிருப்பதுதான் இவ் வழி. உடற்கூறு நிபுணர்கள் இதை "செவ்வொளியைக் கண்களிலே நிரப்பிப் பார்வையைக் கூர்மையாக்கும் முறை" என்பதாகக் குறிப்பிடுகின்றனர்.

பச்சை வெண்ணெயும் நீல வெப்பமும்

15 டிகிரி செண்டி கிரேடு வெப்ப நிலையில் ஆரஞ்சு நிறச் சுவர்களையுடைய அறையினுள் இருக்கும்போது நமக்கு மிகவும் இதமாக இருக்கிறது. ஆனால் சுவர்களின் நிறத்தை நீலமாக மாற்றியதும், இதே வெப்ப நிலையில், இதே அறையில் நமக்குக் குளிராக இருப்பதாகத் தோன்றுகிறது.

சாதாரண வெண்ணெயைப் பச்சை நிறமாக்கியதும், அதன் சுவை கெட்டு விடுவதாகத் தோன்றுகிறது. குளிர்ந்தோ சூடாகவோ இருக்கும் எடைக் கற்கள் சாதாரண வெப்ப நிலையிலுள்ள கற்களைக் காட்டிலும் கனமானவையாகத் தோன்றுகின்றன. ராகம் பாடிக் கொண்டு தூக்கினால் சுமையின் பளு குறைந்துவிடுவது போலத் தெரிகிறது.

பலவீனமான மின்சாரம் கையிலே பட்டு துருதுருக்கச் செய்யுமானால், நமது உணர்வு தூண்டப்பெற்று சாதாரணமாய்க் கேட்க முடியாத மெல்லிய ஒலிகளையும் கேட்கத் தொடங்குகிறோம். நன்கு வெளிச்சமாயிருந்தால் சாப்பாட்டின் சுவை அதிகமாகி விடுகிறது. ஆகவே சுவைத்துச் சாப்பிடவேண்டுமானால் சாப்பாட்டு அறையில் வெளிச்சம் அதிகம் இருக்கவேண்டும். சுவை பார்ப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள், உணவு வகைகளை வாயில் போட்டுக் கண்களை மூடிக்கொண்டு ருசி பார்ப்பதைப் பார்த்திருப்பீர்கள். புறத்தே எழும் உணர்ச்சிகளால் பாதிக்கப் படக் கூடாதென்றே இவர்கள் கண்களை மூடிக்கொண்டு ருசி பார்க்கின்றனர்.

வாசனையால் ருசி பாதிக்கப் படுவது எல்லோருக்கும் தெரிந்ததே. சாப்பாட்டின் பாதி ருசி அதன் மணத்திலேதான் அடங்கியிருப்பதாகக் கூறுவார்கள்.

அதீத ஒலியைப் பற்றிக் கேட்டிருப்பீர்கள். கேட்க முடியாத--எப்படியும் காதால் கேட்க முடியாத—ஒலி என்பதால் இதை அதீத ஒலி என்கிறோம். காதால் கேட்காது வேறு எதால் கேட்க முடியும் என்கிறீர்களா? காதுகள் இல்லாமலும் ஒலியை உணர முடியுமல்லவா? அதீத ஒலிகளைக் கண்களால் கேட்க முடியும் என்று ஒரு விஞ்ஞானி கூறுகிறார். அதீத ஒலியை வெளியிடும் ஒன்றின் அருகே நிற்கையில் நம் கண் பார்வை தீட்சண்யம் பெறுகிறது!

இனிய ஓசைகள்

இனிய ஓசை புலன்களின் இசைவால் மட்டும் தோன்றிவிடவில்லை. உள்ளத்திலும் உணர்ச்சி

இயற்கை என்பது அன்பே உருவான அன்னையா? அல்லது ஈவு இரக்கமற்ற மாற்றாந்தாயா? இதைத்தான் நம்மால் இன்றளவும் புரிந்துகொள்ளமுடியவில்லை.

—பிளினி.

களிலும் புலன்களின் ஒத்துழைப்பால் ஏற்படும் பிரதிபலிப்புமாகும் இந்த இனிய ஓசை.

இனிமை என்பது சுவை. இதைக் காதால் கேட்க வேண்டிய ஓசையுடன் சேர்த்துக் கூறுவதை யாரும் விநோதமாகக் கருதவில்லை. காரமான ஓசை, உரைக்கும் மணம், கதகதப்பான நிறம், மிருதுவான ருசி என்றெல்லாம் பேசுகிறோம். புலன் உணர்ச்சிகளை அடிக்கடி இவ்வாறு ஒப்பிடுகிறோம்.

முன்பு ஒரு பெண் இருந்தார். அவர் ஓசைகள் இனிமையாக இருப்பதுடன், பல நேரங்களில் கசப்பாகவும் புளிப்பாகவுங்கூட இருப்பதாகக் கூறி வந்தார். பியானோவில் 'க' சுரத்தைக் கேட்கும்போது, வாழைப் பழம் தின்பது போன்ற சுவையை அனுபவிப்பதாகக் கூறினார். 'எம்மா' என்ற பெயரைக் கேட்கும் போது முறுவல் அப்பம் சாப்பிடுவது போலவும், 'ஆல்பிரட்' என்ற பெயரைக் கேட்கும் போது ரொட்டியும் பாலும் சாப்பிடுவது போலவும் இருக்கிறது என்றார். இசை நிகழ்ச்சி அவருக்கு விருந்து சாப்பாடாக விளங்கிற்று. ஆனால் இந்த விருந்தால் அவருடைய பசி குறையவில்லை.

செவிப் புலனால் ருசி உணர்வு வயப்படுத்தப்படுவதற்கு இது ஓர் அசாதாரண உதாரணமாகும். நரம்பு அமைப்பில் ஏற்பட்ட சில கோளாறுகளின் விளைவாகவே இப் பெண்ணிற்கு இவை போன்ற விபரீத அனுபவங்கள் ஏற்பட்டன.

வர்ண இசை

கண்ணுக்கும் காதுக்கும் இதையும்விட நெருங்கிய உறவு உண்டு என்பதை அடிக்கடி காண்கிறோம். ஓசைகள் நிற உணர்ச்சிகளை ஏற்படுத்துவதைப் பல சந்தர்ப்பங்களிலும் காணலாம். ஆடவர் பெண்டிர் அடங்கலாக 12 பேருக்கு ஒருவர் வீதம் இந்த "வர்ணச் செவிப் புலன்" கோளாறு இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இதை ஒரு 'கோளாறு' என்பானேன்? "வர்ணச் செவிப் புலனை" உண்மையில் ஒரு குறைபாடாகக் கூறுவதற்கில்லை. வீட்டிலும் சரி, வேலையிலும் சரி இதனால் எந்த இடையூறும் ஏற்படுவதில்லை. புகழ்பெற்ற ரஷ்ய இசைவாணர் ஸ்கிரியாபின் இந்த ஆற்றலை ஒரு வரப்பிரசாதமாகக் கருதினார். "வர்ணச் செவிப் புலன்" ஆற்றல் அவருக்கு இருந்ததால்தான் அவர் இசைக்கேற்ப மாறும் வர்ணக் கோலங்களை இசைக்குப் பின்னணியாக அமைத்து வர்ண இசையைத் தோற்றுவிக்க முற்பட்டார்.

புலன்களிடையே நிலவும் இந்த உறவுகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடைமுறையில் பல துறைகளிலும் பயனளித்து வருகின்றன. ஆலையினுள் தக்க வர்ணம் பூசப்பட்டால், உள்ளே இருக்கும் சப்தத்தைச் சகித்துக் கொள்ளும் ஆற்றல் அதிகரித்துவிடுகிறது.

கோர்க்கி நகரில் ஒரு சாப்பாட்டு விடுதியில் பின்வரும் சோதனை செய்து பார்க்கப்பட்டது. விடுதியினுள் வெப்பம் அதிகமாக இருப்பதாக சாப்பிடுவோர் புகார் செய்து வந்தனர். பிறகு சுவர்கள், சன்னல்கள், சாமான்கள், விளக்குகள் யாவற்றுக்கும் நீல நிறம் பூசியதும், வெப்பம் தணிந்து இதமாகிவிட்டதாகக் கூறினர்.

தொழில் நுட்ப அழகுக் கலை, சாதாரண உற்பத்திப் பண்டங்களிலும் அழகிற்குத் தனி முக்கியத்துவம் அளிக்க முயலுகிறது. புலன்களிடையே இருந்து வரும் இந்தத் தொடர்புகளே இக் கலையின் அடிப்படையாக அமைகின்றன.

வேலை கற்றுக்கொள்வதற்கு பிரகாசமான வெளிச்சம் பெரிதும் உதவுகிறது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

பல்வேறு துறைகளுக்கும் தக்கபடி வெளிச்சத்திற்கு ஏற்பாடு செய்வது அவசியமாகும். போதிய வெளிச்சம் இல்லாத இடங்களில் விளையாட்டுப் போட்டிப் பயிற்சிகள் நடத்துவதால் பலனில்லை என்பதுடன் தீமையும் ஏற்படலாம். உயரத் தாவுவதற்கான குறுக்குக் கம்பு பிரகாசமான நிறமுடையதாக இருந்தால் அதிக உயரம் தாண்ட முடிகிறது என்பதும், நீளத் தாவுவதற்கான எல்லைக்கோடு பளிச்செனத் தெரியும்போது மேலும் அதிக தூரம் தாண்ட முடிகிறது என்பதும் உண்மை.

—**"சோவியத் நாடு"**

"ஆரம்பக் கல்வி"
ஆபீஸ்.
94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

மகாத்மாவின் முதல் பண்ணை

தென்னாப்பிரிக்க டர்பனில் பீனிக்ஸ் பண்ணை அறமானியமும், மகாத்மா காந்தி நூற்றாண்டு விழாக் குழுவும் ஏற்பாடு செய்திருந்த மகாத்மா காந்தி பிறந்த நாள் விழாவுக்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர்.

இந்திய மக்கள் பீனிக்ஸ் பண்ணையை வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகவும், புனிதத்தலமாகவும் கருதுவதால், அந்த விழாவுக்கு ஏராளமானவர்கள் கூடியதில் வியப்பில்லை. தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளின் அரசியல் பணிகளுக்குப் பீனிக்ஸ் பண்ணை மையமாக இருந்து வந்ததால், அது வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும்.

காந்தி மண்டபத்தில் சொற்பொழிவுகள், இசை, நடனநிகழ்ச்சிகள் நடந்தன; அங்கு நடந்த கண்காட்சியில் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்த காலத்தே எடுக்கப்பட்ட புகைப்படங்களும் அடங்கியிருந்தன. அடிகள் சிறையிலிருந்த காலத்தில் மகன் மணிலாலுக்கு எழுதிய அசல் கடிதங்கள், அடிகளாரின் ஆடைகள், "இந்தியர் கருத்து" என்ற பத்திரிகையின் 1903–1914 ஆண்டுகளின் பிரதிகள், காந்திமகான் பயன்படுத்திய மேசை, விளக்கு முதலியனவும் அக்காட்சியில் இருந்தன.

பீனிக்ஸ் பண்ணையை காந்தி மகான் தோற்றுவித்தார். அங்கிருந்துதான் அநியாயமான சட்டங்களை எதிர்த்து அவர் மாபெரும் சாத்வீக இயக்கங்களை நடத்தினார்.

காந்தியடிகள் அப்பண்ணையில் உலகச் செல்வ மனைத்தையும் துறந்து, ஆத்மீக வழியில் நடக்க ஆரம்பித்ததால் அது புனிதத்தலமாக விளங்குகிறது.

ஜோகன்ஸ்பர்க்கில் வழக்குரைஞராக இருந்து கொண்டே 1904 ஆம் ஆண்டில் அடிகளார் அப்பண்ணையை ஆரம்பித்தார். அப்பண்ணைக்கு வரக்கூடிய இரயில் நிலையத்தின் பெயரால் அது பீனிக்ஸ் பண்ணை என்ற பெயரைப் பெற்றது.

"இக்கடைசி வரை" என்ற ரஸ்கினின் நூலைப் படித்து, அதனால் ஏற்பட்ட அகத்தூண்டுதலால், அடிகளார் அப்பண்ணையைத் தொடங்கினார். அந்நூல் காந்தி மகானுக்கு அளித்த படிப்பினைகள் வருமாறு:-

(1) தனி மனிதனின் நற்பண்பு எல்லாருடைய நற்பண்பிலும் அடங்கியுள்ளது.

(2) முடிதிருத்துவோரின் பணிக்குள்ள அதே மதிப்பு, ஒரு வழக்குரைஞரின் பணிக்குமுண்டு. அதனால் அனைவருக்கும் தத்தமது உழைப்பைக்கொண்டு பிழைக்க உரிமையிருக்கிறது.

(3) உழுதுண்டு வாழ்பவரும் கைவினைரும் வாழ்கிற வாழ்க்கை தான் தொழுதுண்டு பின் செல்லத்தக்கது.

முதற்படிப்பினையைக் காந்தி மகான் அறிந்திருந்தார். இரண்டாவது உண்மையை ஓரளவு அவர் உய்த்துணர்ந்தார். மூன்றுவது மெய்ம்மை அவருக்குத் தோன்றவேயில்லை. இரண்டாவது மூன்றுவது மெய்ம்மைகள் முதல் மெய்ம்மையிலேயே அடங்கியுள்ளன என்பதை "இக்கடைசிவரை" என்ற நூல் அடிகளுக்குத் தெளிவாகவிளக்கியது.

அந்த லட்சியங்களை அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிப்பதென்று அடிகளார் முடிவு செய்தார். ஜோகன்ஸ்பர்க்கில் அடிகளாருக்கு முதன்முதலாகக் கிடைத்த ஆங்கிலேய நண்பரான வெஸ்ட் என்பவரிடம் அதுகுறித்துப் பேசி, ஜோகன்ஸ்பர்க்கிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "இந்தியர் கருத்து" என்ற பத்திரிகையை அனைவரும் ஒரே கூலிக்கு உழைக்கும் ஒரு பண்ணைக்கு மாற்றுவதென்று கூறினார். அச்சக வேலையை ஓய்வு நேரங்களில் செய்து கொள்ளலாமென்றும் கூறினார்.

அச்சகத்துக்குப் பொறுப்பாயிருந்த வெஸ்ட், அடிகளின் திட்டத்தை ஏற்றுக் கொண்டார், பண்ணையில் வேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் இன, தொழில் வேறுபாடின்றித் தலைக்கு 3 பவுன் மாதக் கூலியாகக் கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

டர்பனுக்கருகில் ரயில் நிலையமுள்ள ஓர் இடத்தை காந்தி மகான் தேடினார்; பீனிக்ஸ் அதற்குச் சிறந்த இடமாக இருந்தது. அடிகளாரும், வெஸ்டும் அந்த இடத்தைப் பார்வையிட்டனர். ஒரு வாரத்தில் 20 ஏக்கர் நிலம் அங்கு வாங்கப்பட்டது. சுமார் 1000 பவுனுக்கு வாங்கப்பட்ட அந்நிலத்தில் கிலமாகிப் போன ஒரு குடிலும் இருந்தது.

இந்தியத் தச்சர் சிலரின் உதவியால், அங்கு அச்சகம் நிறுவப்பட்டு, ஒரே மாதத்தில் அச்சகம் செயல்பட ஆரம்பித்து விட்டது.

தமது இலட்சியங்களை ஏற்றுக் கொண்ட உறவினரையும், நண்பர்களையும், அடிகளார் பீனிக்ஸ் பண்ணைக்குக் கொண்டு வந்து விட்டார். பிறகு மேலும் நிலம் வாங்கப்பட்டது. அடிகளார் தென்னாப்பிரிக்காவை விட்டு நீங்குவதற்குச் சில காலத்துக்கு முன்னர் 1913 ஆம் ஆண்டில் அப்பண்ணைக்கு அறமானியக் குழு ஒன்றை நியமித்தார்.

மகாத்மாவின் "சர்வோதயக் குடில்" 1950-ஆம் ஆண்டில் புதுப்பித்துக் கட்டப்பட்டது. அதன் மூலத்தோற்றம் மாறிவிடாமல் அந்த வேலை நடந்தது. பழைய கதவுகள் பலகணிகள் முதலியன அப்படியே பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. அக்குடிலுக்கு முன்னர் அடிகளார் நட்ட பிளம் மரம் ஒன்று நிற்கிறது.

—"தினமணி"

நஞ்சும் மருந்தாகும்

[ராபர்ட் ஸ்டீவன்ஸ்]

உயிரைக் குடிக்கும் நச்சுப் பொருள்கள் பல; ஆயினும் இப் பொருள்களே உயிரைக் காப்பாற்றவல்லவை என்றால் விந்தையல்லவா? ஆம்! முறை தெரிந்து பயன்படுத்தினால், விடமும் ஔடதமாகி விடுகிறது.

இக் காரணம் பற்றியே விஞ்ஞானிகள், நச்சு விலங்குகள், தாவரங்கள் முதலியவற்றிலிருந்து புது மருந்துகளைப் பெற முயற்சிக்கின்றனர். அமெரிக்காவிலும் சரி, பிற நாடுகளிலும் சரி, இத்துறையில் ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கின்றது.

ஃபுகு என்பது ஒரு வகை மீன்; ஜப்பானில் கடல்களில் இருக்கிறது; இதனிடம் கொடிய நஞ்சு இருக்கிறது. முறைப்படி தயாரித்தால் இந்த மீன் ருசிமிக்க உணவாகும். ஆனால் நஞ்சில் சிறிது தங்கியிருந்தாலும் கூட உயிரை வாங்கக் கூடியது.

லட்சம் பங்கு அதிக வீரியம்

ஃபுகு நஞ்சு, மருத்துவர்களினால், அளவோடு திறமையாகப் பயன்படுத்தும் போது, அதனால் நன்மையே விளைகிறது. வலி, தசைப் பிடிப்பு, வலிப்பு முதலியவற்றைப் போக்குவதற்கும், புற்று நோயினால் அவதிப்படுவோருக்கு இறுதி நாட்களில் அவதியைக் குறைப்பதற்கும், ஃபுகு நஞ்சை ஜப்பானியர் பயன்படுத்தியுள்ளனர். ஃபுகு நஞ்சுக்கு டெட்ரோடாக்ஸின் எனப் பெயர். மயக்கம் உண்டுபண்ணும் மருந்தாக இதைப் பயன்படுத்தும் போது, கோக்கேன் என்ற மயக்க மருந்தை விட இது 1,00,000 மடங்கு அதிக வீரியம் கொண்டதாக இருக்கும்.

ஒரு மருந்து என்ற முறையிலே டெட்ரோடாக்ஸின் பரவலாக பயன் படுத்தப்படுவதில்லை. ஆனால் விலங்குகளின் நஞ்சுகள், எதிர் காலத்தில் மனிதனின் நோய்களைக் குணப்படுத்தப் பெரிதும் பயன்படப் போகின்றன என்பதை டெட்ரோ டாக்ஸின் காட்டுகிறது.

பல தாவரங்களின் நஞ்சுகள் ஏற்கனவே மருந்துகளாகப் பயன்படத் தொடங்கி விட்டன. "குராரே" என்ற வீரியமிக்க கலவையை தென் அமெரிக்கக் காட்டு வாசிகள், விலங்குகளையோ, எதிரிகளையோ முடக்கிப் போடுவதற்குப் பயன்படுத்துகின்றனர். அம்புகளை இந்தக் கலவையில் தோய்த்து எய்வது வழக்கம். இப்பொழுது இந்த நஞ்சு, அறுவை சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குத் தசை தளர்வுக்கும், இளம்பிள்ளை வாத நோயாளிகளுக்கும் வலிப்பு

நோயாளிகளுக்கும் பயன் படுத்தப்படுகிறது.

பெல்லடோனா என்பது நச்சுச் செடி. மார்க் அந்தோணியின் ரோமன் சேனைக்கு நஞ்சூட்டப் பயன்பட்டது இதுதான். வயிற்றுவலித் துடிப்புக்கும் விரிந்துபோன கண்மணியைக் குணப்படுத்தவும் பயன்படுத்தப் படுகிறது. குருதி ஒழுக்கை நிறுத்தும் மருந்து எர்கோட் என்ற காளானிலிருந்து தயாரிக் கப்படுகிறது. இடைக்கால ஐரோப்பாவில் இந்தக் காளான் பல கொள்ளை நோய்களுக்குக் காரணமாக இருந்தது. இது மட்டுமே 40,000 ஐரோப்பியர் களின் உயிரைக் குடித்தது.

விலங்குகளில் இருக்கும், குறிப்பாகக் கடல்வாழ் விலங்கு களில் இருக்கும் நஞ்சு பற்றிய ஆராய்ச்சி அமெரிக்காவில் பல ஆண்டுகளாக, நடந்து வருகிறது. கடல் வெள்ளரி நஞ்சின், உயிர் அணுப்பெருக்கத்தைப் பாதிக் கும் திறமையை டாக்டர் எல். வி. ஹீல்பிரன் தலைமையில் பென்ஸில் வேனியப் பல்கலைக்கழகக் குழு ஒன்று ஆராய்ந்துள்ளது. புற்று நோய் சிகிச்சைக்கு இந்தத் திறமை மிகவும் பயனுள்ளதாக இருக்கக்கூடும். உயிர் அணுக்கள் கட்டுப்பாடின்றிப் பெருகுவது தான் புற்று நோய்.

செதில் இல்லாத மான் மீன் (அமெரிக்க வகை) நஞ்சு நீரிழிவு நோய் சிகிச்சைக்குச் சிறந்தது. இலைத்திருக்கை மீன் நஞ்சு இருதயத் துடிப்பின் வேகத்தைக் குறைக்க வல்லது; குருதியின் சில பகுதிகளை அழிக்கக் கூடிய பவளப் பாறைத்தேள் மீன், நஞ்சுகள் ஆய்வு சிலந்தி மீன் கூடத்தின் ஆராய்ச்சிகளுக்குப் பெரிதும் பயன்படும் கருவியாகக் கூடும் என்று கூறுகின்றனர் விஞ்ஞானிகள்.

நல்ல பாம்பு நஞ்சைவிட 50 மடங்கு வீரியம்

சிலவகை கடல் பாம்புகள், சுரக்கும் நஞ்சு நல்ல பாம்பின் நஞ்சை விட 50 மடங்கு அதிக வீரியம் உள்ளதெனக் கூறப்படு கிறது. சொறி மீன், நூல் போன்ற ஒரு பொருளை உண்டு பண்ணுகிறது. இலேசான சொறி முதல் தாங்க முடியாத கடுமையான சொறி இந்த நூலி னால் ஏற்படும். கடல் குளவி என்று கூறப்படும் ஒரு இனம் கடல் விலங்குகளிலே மிகக் கொடிய நச்சு விலங்கு. மூன்றே நிமிடத்தில் ஆளைக் கொல்லக் கூடியது இதன் நஞ்சு.

ஸ்ட்டான் போர்ஃடு பல்கலைக் கழகத்தில் (பாலோ ஆல்ட்டோக கலிஃபோர்னியா) விலங்குக ளின் நஞ்சில் ஆராய்ச்சி நடத் திய அமெரிக்க ஜெர்மன் விஞ் ஞானிகள் ஒரு முக்கிய உண் மையைக் கண்டு பிடித்தனர். நீரி லும் நிலத்திலும் வாழும் ஒரு, வகைச் சிறிய கலிஃ போர்னியா பல்லியின் நஞ்சும், ஃபுகுவின் டெட்ரோடோடாக்ஸின் நஞ்சும் இரசாயன முறைப்படி ஒன்றே என்ற உண்மைதான் இது. ஸ்ட்டான்போர்ஃடு பல்கலைக்

கழகத்தைச் சேர்ந்த டாக்டர் எச்.எஸ்.மோஷா எப்.ஏ. பர்மன் ஆகியஇருவரும் மேற்குஜெர்மனி கார்ல் ஸ்ரூவைச் சேர்ந்த டாக்டர் டர் ஹான்ஸ் கெர்ஹார்டு என்பவருடன் சேர்ந்து இந்த நஞ்சுப் பொருளைச் சுத்தம் செய்ய பல ஆண்டுகள் பாடுபட்டனர். இறுதியில் அவர்கள் வெற்றி பெற்ற போது, இரண்டு நஞ்சுகளும் ஒரே மாதிரி யிருப்பதைக் காண வியப்படைந்தனர். ஃபுகுவுக்கும் மேலே கூறப்பட்ட பல்லிக்கும் உடல் சுற்றியல்படி, யாதொரு உறவும் கிடையாது.

சுண்டெலிகள், எலிகள், தவளைகள், பொன் மீன், உடும்புகள் முதலியவற்றைக் கொன்று தனது சொந்த நச்சின் 60 மடங்கைக்கூட தாங்கவல்லது மேலே கூறப்பட்ட பல்லி. தனது சொந்த நஞ்சைத் தாங்கக் கூடிய வலு இருப்பதால்தான், இந்தப் பல்லியின் இனம் தழைக்க முடியும். இந்த இரண்டு நஞ்சுகளும் ரசாயனப்படி ஒன்றே என்பதை நிரூபிக்க, டாக்டர் மோஷர் டாக் ஃபர்மன் ஆகிய இருவரும் இப் பல்லிக்கு, ஃபுகு நஞ்சை ஊசி மூலம் செலுத்தினர். இந்த ஃபுகு நஞ்சையும் தனது சொந்த நஞ்சையும் தாங்கி நின்றது இந்தப் பல்லி.

இப்பல்லியின் சுத்தமான நஞ்சு, ஸயனைடு நஞ்சை விட 1000 மடங்கு வீரியமுள்ளது என்கின்றனர் ஸ்டான்ஃபோர்டு ஆராய்ச்சியாளர்கள்.

நஞ்சு விலங்குகள் பற்றிய முழு ஆராய்ச்சியை விஞ்ஞான மருத்துவ ஆராய்ச்சியாளர் மேற்கொண்டுள்ளனர். இந்த ஆராய்ச்சியின் பொருள் வெறும் நஞ்சு எதிர்ப்பு பிரச்னையல்ல; இந்த ஆராய்ச்சித் துறையில் தலைவர்களாக இருப்பவர்களில் ஒருவரான டாக்டர் புரூஸ்டபிள்யூ, ஹால்ஸ்டெட் உலக உயிரின ஆராய்ச்சிக் கழகத்தின் டைரக்டராவார். இது கலிஃபோர்னியாவில் கோல்ட்டனில் இருக்கிறது. அவர் சொன்னதாவது:-

"இக்கொடிய விலங்குகளும், அவற்றின் நஞ்சுகளும் உயிர் தரும் நஞ்சு எதிர்ப்புப் பொருள்களாகவும், புற்றுநோய் ஒழிப்பு மருந்துகளாகவும், இன்றியமையாத மருந்துகளாகவும், வருங் காலத்தில் அமையக் கூடும் என்பதற்கான சான்றுகள் அதிகரித்து வருகின்றன."

"தினமணி சுடர்"

கலையின் மூலமாகத்தான் நாம் முழுமை அடைய முடியும். கலையின் வாயிலாகத்தான் உலக வாழ்க்கையின் பயங்கரங்களிலிருந்து நம்மை நாம் தடுத்துக் கொள்ளவும் முடியும்.

—ஆஸ்கர் ஒயில்டு.

சுவிட்சர் சரிதை!

எஸ். நடராஜன்

உலகில் ஜாதிகள் இரண்டு; ஒரு ஜாதியினர் தன்னலம் கருதாது பிறருக்காக உழைப்பவர்; மற்றொரு ஜாதி தமக்காகவே வாழ்ந்து திரிபவர் என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கருதினர். அதனால், மன்னுயிர்க்காக முயல்பவரே.

இந்த மாநிலத்து ஓங்கும் குலத்தினராம்
தன்னுயிர் போற்றித் திரிபவரே என்றும்,
தாழ்ந்த குலத்தில் பிறந்தோர் அம்மா

ஜெர்மன் தேசத்தில் பிறந்து ஆப்பிரிக்க மக்களுக்கு வைத்தியத் தொண்டாற்றுவதிலேயே தன் வாழ்க்கையில் பெரும் பகுதியைச் செலவிட்டு தன் 90 வயதில் காலமான ஆல்பர்ட் சுவைட்ஜர் முன்னதாகச் சொல்லப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்.

இவர் காந்திஜியை நேரில் சந்தித்ததில்லை. ஆனால் இருவருக்கும் கடிதங்கள் மூலம் தொடர்பு உண்டு. ஒருவர் பணியை மற்றொருவர் பரஸ்பரம் பாராட்டி வந்தனர்.

கறுப்பர்களாகிய ஆப்பிரிக்கர்களுக்கு வெள்ளையர்களால் ஏற்பட்ட கொடுமையை எண்ணிப் பார்த்த இவர் இதற்குப் பிராயச்சித்தமாக ஆப்ரிக்கர்களுக்கு எந்த வகையிலாவது தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணத்தை மேற்கொண்டார். அதுவுமன்றி ஆப்ரிக்காவில் நீக்ரோ மக்கள் உறங்கும்நோயில் **sleeping sickness** இடர்பட்டு நூற்றுக்கணக்காக இறக்கிறார்கள் என்றும் கேள்விப்பட்டிருந்தார்.

சமய நூற் கல்வி, மெய் நூற் கல்வி, இசைக் கல்வி ஆகிய கலைகள் மூலம் புகழ் பெற்றிருந்தும் ஆப்ரிக்கர்களுக்கு வைத்தியத் துறையில் உழைக்க வேண்டும் என்பதற்காகவே வைத்தியப் படிப்பைப் படிக்க அவர் ஆரம்பித்தார். 1906ல் ஸ்டிராஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் மருத்துவத் துறையில் ஒரு மாணவனாகச் சேர்ந்து ஏழு வருடங்கள் படித்து டாக்டரானர்.

இவர் மணந்த ஹெலன் பிரஸ்லௌ என்பவரும் ஆப்பிரிக்கா விற்குப் போய் உழைக்க வேண்டும் என்ற கணவரின் லட்சியத்திற்கு ஆதரவாளராக இருந்தார். ஆப்பிரிக்காவில் வெப்பம் நிரம்பிய பெரும் காட்டில் ஓகோவே ஆற்றங்கரையில் லாம்பரீன் என்ற இடத்தில் இவரும் இவர் மனைவியும் ஆஸ்பத்திரியை அமைத்துக் கொண்டு தொண்டாற்ற ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் நீக்ரோக்களின் நம்பிக்கையைப் பெறுவது கஷ்ட

மாகவே இருந்தது. நீக்ரோக்கள் மனிதர்களுடைய மாந்திரீக வித்தைகளை நம்புபவர்கள் ஆன தால் இறந்தவர்கள் போலக் கிடந்த நோயாளிகள் பலர் சிகிச் சைக்குப்பின் எழுந்து நலம் பெற்றதைக் கண்டதும் ஸ்வைட் சரை மாயா வித்தைக்காரர் என்று சொல்ல ஆரம்பித்து விட்டனர். அவர்களுக்கு சுவைட் ஜர் மீது பூரண நம்பிக்கை ஏற் பட சிலகாலம் ஆயிற்று.

அவர் சிகிச்சை மூலம் குணப் படுத்தியவர்களின் தொகை ஏராளம். பிறருக்கும் பிராணி களுக்கும் எவ்வித ஹிம்ஸையை யும் தரக்கூடாது என்பது அவர் நோக்கம்.

நாகரிகம் என்பது ஒருவர் உயிரிடத்து வைக்கும் மதிப்பை ஒட்டியது என்பது அவர் கருத்து. ஒவ்வொரு உயிரும் தொழத்தக் கது. மதிக்கத்தக்கது. அவை களுக்கு எவ்வித ஹிம்ஸையை யும் அளிக்காது வாழவேண்டும் என்று கருதும் உயிர் நான். நானே வாழவேண்டு மென்று கருதும் பிற உயர்களிடையே வாழ்கிறேன்" என்று அவர் கூறியிருக்கிறார்.

தான் எழுதிய புத்தகங்கள் மூலமும், சொற்பொழிவுகள் மூலமும் கிடைத்த தொகை எல்லாவற்றையும் மக்களின் மருத்துவப் பணிக்காகவே செல விட்டு விட்டார். 1934இல் எடின்பரோ பல்கலைக் கழகம் அவருக்குப் பேரறிஞர் பட்டம் தந்தது. 1935ல் அவருடைய அறுபதாவது ஆண்டுவிழா நடை பெற்றபோது அவரை உலகமே பாராட்டியது. 1953இல் இவ ருடைய பெருந் தொண்டினைப் பாராட்டி 'வெல்கம்' பதக்கம் என்ற பெரும் பரிசு இவருக்கு அளிக்கப்பட்டது.

குஷ்ட நோய் எனப்படும் பெரும் நோயைத் தீர்க்க இவர் பெரும் முயற்சி செய்து வெற்றி யும் பெற்றார். அக்காலத்தில் இந் நோயைக் குணப்படுத்த மருந்தேயில்லை என்ற அபிப் பிராயம் இருந்து வந்தது. ஸல் போன் போன்ற சில புது மருந் துகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்த தால், அவற்றைக்கொண்டு தான் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே சிகிச்சை செய்தால் அந்நோ யினை அகற்ற முடியும் என்று சுவைட்ஜர் நம்பினார். இந்நோயி னருக்காவே அவர் பிரத்தியேக சிகிச்சை நிலையம் ஒன்றை நிறு வினார்.

1955இல் பிரிட்டிஷ் அரசி இவரைத் தன் தேசத்திற்கு வர வழைத்து "ஆர்டர் ஆப் மெரிட்" என்ற விருது அளித்துக் கௌர வித்தார். 1952 இல் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

சென்ற ஜனவரியில் இவ ருடைய 90-வது ஆண்டு விழா லாம்பரேனில் கொண்டாடப் பட்டபோது "நான் உங்களுக் காக இங்கேயே தங்கி இதுகா றும் சேவை செய்துவிட்டேன். இனியும் நான் இங்கேயே இறக்க விரும்புகிறேன்" என்றார்; அவர் விருப்பம் பூர்த்தியாகிவிட்டது.

இவருடைய உதாரணத்தைப் பின்பற்றி டாக்டர் டூலி போன்றவர்கள் தாய்லாந்தில், வியட்னுமில் மருத்துவப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். இரவில் அவசர நிலை ஏற்படும்போது அழைத்தால் நம் டாக்டர்கள் வர மறுக்கிறார்கள். சுவைட்ஜர், டூலி போன்றவர்கள் நாட்டை விட்டு காட்டிலும் மேட்டிலும் பாஷை தெரியாத கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் சேவை செய்ய முன்வந்ததை நமது டாக்டர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சுவைட்ஜர் இந்தியாவுக்கு வந்ததில்லை. ஆனால் இந்தியாவிடமும் இந்தியர்களிடமும் அவருக்குப் பெரு மதிப்பு உண்டு. 1957இல் சர்வ தேச சைவ உணவு மகாநாட்டிற்கு நான் காரியதரிசியாக இருந்தபோது, அவருடன் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்ளும் பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. அவசியம் சென்னையில் நடந்த அம்மகாநாட்டிற்கு வருவதாக அவர் எழுதியிருந்தார். கடைசி நேரத்தில் உடல்நிலை காரணமாக அவர் வரமுடியாது போய்விட்டது.

"தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்" என்பதற்கு உதாரண புருஷராக அவர் வாழ்ந்து காட்டி விட்டார்.

"தினமணி சுடர்"

புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி, B.A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

செய்திச் சுருள்

உலகின் 5-ஆவது பெரு நகரம் பம்பாய்

பம்பாய் நகரில் மக்கள்தொகையால் அது உலகின் ஐந்தாவது பெரிய நகரமாக விளங்குகிறது என்று, 1964-ம் ஆண்டு மத்திவரை முடிந்த 12 மாதங்களுக்கான ஐ. நா. சபையின் பிறப்பு, இறப்புப் புள்ளி விவர ஆண்டு வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் பெரிய நகரம் டோக்கியோ; அங்கு 87 லட்சத்து 33 ஆயிரம் பேர் வாழ்கின்றனர்; அடுத்தது நியூயார்க்; அங்கு 80 லட்சத்து 86 ஆயிரம் பேர் வாழ்கின்றனர்.

பெருநகரப் பரப்பு என்ற அடிப்படையில் உலகில் ஏராளமான மக்கள், வாழும் நகரம் நியூயார்க் ஆகும். அங்கு 1 கோடியே 41 லட்சத்து 14ஆயிரத்து 927 பேர் வாழ்கின்றனர். அந்நகரின் அண்டையிலுள்ள நியூஜெர்சின் நகரமாந்தரும் மேற்கூறிய எண்ணிக்கையில் அடங்குவர்.

யோக்கோமா உட்பட டோக்கியோவில் பெருநகரப் பகுதியில் 1 கோடியே 37 இலட்சத்து 87 ஆயிரத்து 760 பேர் வாழ்வதால் அது நியூயார்க்கிற்கு அடுத்த இடத்தைப் பெறுகிறது.

டோக்கியோவுக்கும், நியூயார்க்கிற்கும் அடுத்தபடியாக ஏராளமானமக்கள் வாழும் நகரங்கள் வருமாறு:-ஷாங்காய் (69 இலட்சம்) பம்பாய்(45 இலட்சத்து 37 ஆயிரத்து 926);பிகிங் (40 இலட்சத்து 10 ஆயிரம்); சிக்காக்கோ (35 இலட்சத்து 50 ஆயிரத்து 404)

லண்டன் பெருநகரப் பகுதி உலகின் மூன்றாவது பெரியநகரப் பகுதியாகும். அங்கு 81 இலட்சத்து 86 ஆயிரத்து 830 பேர் வாழ்கின்றனர். அடுத்தபடியாகப் பாரிசில் 73 இலட்சத்து 69 ஆயிரம்பேரும், போனஸ் அயர்சில் 70 இலட்சம் பேரும் வாழ்கின்றனர்.

பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழும் 80 நகரங்கள் இன்று உலகில் உள்ளன என்று மேற்சொன்ன ஆண்டு வெளியீடு கூறுகிறது.பத்தாண்டுகளுக்கு முன்னர் அத்தனை மக்கள் வாழ்ந்த நகரங்களின் எண்ணிக்கை 60 ஆகவும், இருபதாண்டுகளுக்கு முன்னர் 30 ஆகவும் இருந்தன.

* * *

பாசம் வென்றது; துவேஷம் தோற்றது

சென்ற 10 மாதங்களாகப் பிரிந்திருந்த தாயும் சேயும் நேற்று மீண்டும் ஒன்று சேர்ந்

தனர். தென்னப்பிரிக்காவின் இனத் துவேஷ சட்டம் காரணமாக இந்தப் பிரிவினை ஏற்பட்டது.

தாய்ப்பாசம் பொல்லாததல்லவா? தென்னப்பிரிக்காவின் இனத் துவேஷ சட்டம் இந்தப் பாசத்திற்குப் பணிந்தது.

திருமதி ராஜன் பென் பட்டேல் தென்னப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு ஓய்வுக்காக வந்திருந்த போது, அவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவர் தனது குழந்தையைத் தென்னப்பிரிக்காவுக்குக் கொண்டுவர அனுமதிக்கப் படவில்லை. தென்னப்பிரிக்காவில் பிறக்காமல், இந்திய மண்ணில் பிறந்த அந்தக் குழந்தை குடியேற்ற சட்டப்படி தென்னப்பிரிக்காவுக்கு வர முடியாதென்று தெ. ஆ. சர்க்கார் தடுத்து விட்டனர். திருமதி ராஜன் பென் பட்டேலும், அவருடைய கணவர் சாந்திலாலும் தமது குழந்தைக்காக வழக்காடி வெற்றி பெற்றனர். சென்ற 10 மாதமாகப் பிரிந்திருந்த தனது குழந்தையை திருமதி ராஜன் பென் பட்டேல் திரும்பப் பெற்று விட்டார்.

சட்டப்போர் கடுமையாக நடைபெற்றது. பல இந்தியர்கள் இந்தியாவிலிருந்து திரும்புகையில் தமக்குச் சொந்தமாக இல்லாத குழந்தைகளை கள்ளத்தனமாகக் கடத்திக் கொண்டு வருவதாக தென்னப்பிரிக்க உள்துறை மந்திரி வாதித்தார். அப்போது குழந்தை இந்தியாவில் உறவினர்களுடன் தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

குழந்தை தன்னுடையது என்று நிரூபிப்பதற்குத் திரு. சாந்திலால் பட்டேல் ரத்தசோதனைக்கு உள்ளானார்.

இறுதியில் தென்னப்பிரிக்க சர்க்கார் தனது தடையை நீக்கி விட்டது.

* * *

உணவுப் பற்றுக்குறை நீங்க சில யோசனைகள்

உணவு கார்ப்பரேஷன் நிர்வாக டைரக்டரான திரு. சி. நரசிம்மன் ரோட்டரிகிளப் கூட்டத்தில் பேசுகையில் உணவுப் பற்றுக் குறையை அகற்றுவதற்குச் சில யோசனைகளைக் கூறினார். நெல் அரைக்கும் இயந்திரங்களுக்குப் பதில் உமி போக்கும் இயந்திரங்களை வைத்துக் கொண்டால் 3 சதம் முதல் 5 சதம் அரிசியை மிச்சப்படுத்த முடியும் என்று அவர் கூறினார்.

மற்றும் நெல்லைப் பக்குவப்படுத்தும் இயந்திரங்களைப் புதுப்பிப்பதால், நெல்லை அதிக அளவில் மிச்சப்படுத்தலாம் என்று அவர் கூறினார். சர்க்கார் நிர்ணயித்திருப்பதுபோல, 4 சதம் வீதம் அரிசியைத் தீட்டினால் போதும் என்றும், சிலர் விரும்புவது போல 5 சதம் முதல் 8 சதம்வரை தீட்டக் கூடாதென்றும், இந்த முறையால் அரிசி வீணாவதைக் கணிசமாகத் தவிர்க்கலாம் என்றும் அவர் கூறினார்.

புழுங்கலரிசியை உபயோகிப்பதால் 2 முதல் 3 சதம் அரிசியைச் சேமிக்கலாம் என்றும், பச்சை அரிசி சாப்பிடுகிறவர்கள் புழுங்கலரிசியைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், புழுங்கலரி அதிகச் சத்து உள்ளதென்றும் திரு நரசிம்மன் கூறினார்.

மற்றும் கஞ்சி வடிக்காமல் சோறு வடிப்பதாலும் உணவை மிச்சப்படுத்த முடியும் என்றும் கஞ்சி வடிக்காத சோறு அதிகச் சத்துள்ளதென்றும் திரு. நரசிம்மன் கூறினார்.

பழவகைகள், மீன் முதலியவற்றைக் குளிர் சாதனங்கள் மூலம் கெடாமல் பாதுகாத்து வைத்து உபயோகிக்க வேண்டும் என்றும், மற்றும் பக்குவம் செய்து டின்களில் அடைக்கப்பட்ட உணவை உபயோகிக்கும் பழக்கமும் ஏற்படவேண்டும் என்றும் அவர் கூறினார். விவசாயிகள் தற்கால முறைகளை உபயோகித்து உணவு சாகுபடி செய்ய வேண்டும் என்றும், அவர்களுக்குப் போதுமான கடன் வசதியும், ரசாயன உரமும் கிடைக்கவேண்டும் என்றும் திரு. நரசிம்மன் கூறினார். இம்முறைகளால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று அவர் கூறினார்.

* * *

யார் இந்தப் பூட்டோ?

இன்றையதினம் பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரியாக இருந்து சண்டப்பிரசண்டம் அடிக்கிறாரே திருவாளர் பூட்டோ-இவர் யார்?

ஒரு காலத்தில் சண்டை என்றதும் தான் பெற்ற குழந்தையைக்கூட விட்டுவிட்டுப் பாகிஸ்தானுக்கு ஓடியவர் தான், இன்று ஆயிர மாண்டுகளானாலும் இந்தியாவோடு போராடியே தீர்வேன் என்கிற இந்தப் பூட்டோ!

அந்த 1947-ஆம் ஆண்டில் அவர் ஜுனகாத் சமஸ்தான வாசி. அந்த சமஸ்தான நவாபோ பாகிஸ்தானுடன் சேரவிரும்பினார். மக்களோ இந்தியாவுடன் சேரவிரும்பினர். அதன் பேரில் இந்தியப்படை ஜுனகாத்துக்குள் நுழைந்தது.

சமஸ்தானத்திற்குள் நுழைந்த இந்தியப் படையின் தளபதிகளில் ஒருவரான ஜெனரல் இமாத் சிங்ஜி தன்னைக் கைது செய்ய வருகிறார் எனக்கேள்விப்பட்டதும், இரவு இரண்டு மணியளவில் ஓடியே போனார் பூட்டோ! ஆம்! தான் பெற்ற ஒரு குழந்தையையும் விட்டுவிட்டு ஓடியேவிட்டார்.

பின்னர் அக்குழந்தை இந்திய அதிகாரிகளால் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

1947-நவ. முதல் நாளன்று ஜுனகாத்துக்குள் நுழைந்த இந்தியப்படை நவ. 9-அன்று இந்திய-ஜுனகாத் இணைப்பை முடித்தது.

இத்துணை விவரங்களையும் பூட்டோவைக் கைது செய்யப் போன அதிகாரியான இமாத் சிங்ஜியே கூறினார்.

* இந்திர விழாவிற்கும் ஒலிம்பிக் விழாவிற்கும் தொடர்பு உண்டு! எப்படி?
* பூம்புகார் நகர் புதையுண்ட போதுதான் ஒலிம்பிக் கிராமமும் அழியத் தொடங்கியது!
* புத்துயிர் பெற்றது ஒலிம்பிக் கிராமம்! பூம்புகார் நகரின் நிலைமை என்ன?
* ஒலிம்பிக் விழாவின் நிகழ்ச்சியினைப் பெண்கள் பார்த்தால் உடனே கொல்லப்படுவர்! ஏன்?

இவைகளுக்கான அருமையான விளக்கங்களை ஆதாரத்துடன் தரும் கட்டுரை இது.

பூம்புகார்த் தமிழகம்

"தோழன்"

"பூம்புகார்த் தமிழகம் திரும்ப வரவேண்டும்" என்ற புதுக்குரல் தாயகத்தின் மூலைமுடுக்குகளிலும் மோதி எதிரொலிக்கும் நாட்கள் இவை. குறையாத வளமும், நிறைவான பண்பும், அமைவான ஓய்வும் விழாக்களின் சிறப்பும் கொண்டிலங்கிய அந்தப் பெரு நகரத்து வாழ்க்கை உலகம் வியந்ததாகும்; பிறர் வணங்கிப் பயின்றதாகும். மனித குலம் பற்றிய இன்றைய வரலாறுகள் தலையில் வைத்துக் கொண்டாடும் சுமேரிய—கிரேக்க நாகரிகங்களுக்குச் சற்றும் குறையாத மாண்பு படைத்தவை பழங்காலத் தமிழகத்து மூதூர்கள். உலகத்தார் இன்னும் அறிந்துணர்ந்து பாராட்டப் பெறாத நமது பண்டைப் பெருமைகள்—மொத்த உலகத்தின் மூத்த நாகரிக மக்களாகத் தமிழ்க்குலத்தை ஐயத்திற்கிடமின்றி ஆக்கிவிடக்கூடிய அற்புதங்கள் பூம்புகார், முசிறி, கொற்கை, மாமல்லை ஆகிய பெரு நகரமேடுகளில் இன்று சிற்றூர்களாகத் தெரியும் இடங்களில் தோண்டியெடுக்கத் திக்கற்றுத் தூங்கிக் கொண்டிருக்கின்றன.

அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ள பூம்புகார்ப் பகுதியில் எவ்வகைக் கருவூலங்களை நமக்காகக் கடலும் காலமும் போற்றிப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றனவோ? தோண்டுவோரின் நேர்மையும் தொல்பொருளை விளக்குவோரின் வாய்மையும் துணைநிற்குமானால், எகிப்திய பிரமிட்டுகளும் ரோமானிய இடிபாடுகளும், சீனத்துப் பெருஞ்சுவரும், கிரேக்கத்து ஒலிம்பிக் கிராமமும், புகார் நகரைக் காட்டிலும் வயதில் குறைந்தவையாக இந்த உலகத்தார் கண்முன் குற

கிச்சிறுத்துப் போகவுங்கூடும்.

புகார்நகரின் பாக்கங்களோ, கோட்டங்களோ, கொட்டிக் கிடந்த அணிமணிப்பொன்களோ, அதன் வீதிகளோ நமக்கு இன்று அதே செழுமையுடன் கிடைக்க முடியாது. என்றாலும், அந்தத் திருநகரின் வாழ்வை, அதில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை, அவர்கள் நோற்றுக் கொண்டாடிய விழாக்களின் சிறப்பைச் சரியான சான்றுகளுடன் விளக்கமாகத் தெரிவிப்பதற்குத் தயவு செய்து வல்லுனர்கள் முயல மாட்டார்களா?

காப்பியங்களும் பட்டினப்பாலையும் காட்டும் பூம்புகார்க் கற்பனை நகரமல்ல; அதில் ஆண்டுதோறும் இருபத்தெட்டு நாட்கள் கொண்டாடப்பட்ட "விண்ணவர் தலைவனை வணங்கி முன் நிற்கும்" விழா குழந்தைத்தனமான நாகரிகத்தின் வளர்ச்சியுறாத் தன்மைகளைக் கொண்டதல்ல. ஓய்வும் வளமும் கொண்டிருந்த சமுதாயமே அத்தகைய விழாக்களை நடத்தியிருக்க முடியும். கொடுங்கோலாட்சியிலும், மிருகங்களைப் போல் அல்லும் பகலும் இரை தேடுவதற்கே காலத்தைக் கழிக்கும் மக்களிடையிலும், அத்தகைய விழாக்கள் கால்கொள்ள முடியாது. ஏனென்றால், இந்தத் திங்கள் 10—ஆம் நாளிலிருந்து ஜப்பானியத் தலைநகர் டோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டு விழாவும், தமிழ்ச் சமுதாயத்தைப் போன்றபண்பும் வளமும் பெற்றிருந்த கிரேக்கச் சமுதாயத்தின் படைப்பு ஆகும்.

இந்திர விழாவைப் பற்றிய நுணுக்கமான எல்லா விவரங்களும் நமக்குக் கிடைக்கவில்லை; ஒலிம்பிக் விழா பற்றிய விளக்கங்கள் தெளிவாக இந்த உலகத்திற்குக் கிடைத்திருப்பதற்குக் காரணம், கிரேக்கக் காவியங்களும் வரலாறுகளும் தெரிவித்த ஒலிம்பிக் கிராமத்தை முழு அக்கறையுடன் தேடிப்பிடித்துத் தோண்டிப் பார்த்ததே ஆகும். பூம்புகார் நகர் அழியத் தொடங்கிய அதே காலத்தில் தான், கிரேக்கத்து ஒலிம்பிக் கிராமமும் அதில் நடைபெற்ற விழாவும் மறையத் தொடங்கின. புகார் நகரம் உருவான காலம் யாருக்கும் தெரியவில்லை; அந்த நகரம் சுமார் ஆயிரம் ஆண்டுகள் சிறப்புற்றுத் திகழ்ந்ததாக இன்றைய புதைபொருள் வல்லுநர்கள் தோராயக் கணக்காகத் தெரிவிக்கின்றனர். பாதுகாப்பாகக் காலத்தைக் குறைத்துச் சொல்லும் இந்தக் கணக்குப்படி பார்த்தாலும், கி. மு. 8-ஆம் நூற்றாண்டு வாக்கிலேயே புகார்நகரம்புகழின் உச்சியில் இருந்திருக்கிறது. ஆகவே, அதில் கொண்டாடப்பட்ட இந்திரவிழா அதற்கும் முற்பட்ட காலத்திலேயே தொடங்கியிருக்க வேண்டும். நமது இந்திரவிழா மரபைக் காட்டிலும், கி.மு. 776-ஆம் ஆண்டிலிருந்து தான் தொடங்கியதாகத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படும். கிரேக்கரின் ஒலிம்பிக் விளையாட்டு விழா வயதில் குறைந்ததுதான் என்பதை வல்லுனர்கள்

ஆராய்வது தமிழகத்துக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

ஏனென்றால் நமது இந்திர விழா பற்றிய குறிப்புகளுக்கும், கிரேக்கரின் ஒலிம்பிக்விழா விவரங்களுக்கும் அடிப் படையில் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. இருவிழாக்களும் நடத்தப்பட்ட முறைகளில் வேறுபாடுகள் இருக்கின்றனவே தவிர, அடிப்படை குறிக்கோளில் மாற்றமே இருக்கக் காணோம்.

பழங்கால கிரேக்கத்தில்,எலிஸ் நகரையொட்டியிருந்த ஒலிம்பிக் என்ற சிறு கிராமத்தில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒலிம்பிக் விழா கொண்டாடப் பட்டது. ஒலிம்பிக் என்பது விழா நடைபெற்ற இடத்தை யொட்டி வந்த பெயராகும். கடைசியாக ஒலிம்பிக் விழா கி.பி. 393-ஆம்ஆண்டு நடைபெற்றது. அதற்குப் பிறகு, அன்றைய ரோமானியச் சக்கரவர்த்தியான முதலாம் தியோடியஸ் என்பவனால் ஒலிம்பிக் விழா நிகழ்ச்சியே நிரந்தரமாகத் தடுக்கப்பட்டு மாறுன எத்தகைய தெய்வவழி பாடுகளும் இருக்கக் கூடாது என்று நினைத்தவன் அந்தச் சக்கரவர்த்தி. விழா தடை செய்யப்பட்ட பிற்பாடு, ஒலிம்பிக் கிராமம் புதையுண்டு பாழ்பட்டு, மலேரியாக் கொசுக்களை உற்பத்தி செய்யும் குட்டைகள் நிரம்பிய இடமாக அதுமாறி விட்டது. அந்த இடம், சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னால் குறிப்பிட்டுக் கண்டுபிடிக்கப் பட்டது. அங்கு தோண்டிப் பார்ப்பதிலுள்ள வசதிக்குறைவை முன்னிட்டு அதுபற்றிக் கிரேக்கர்கள் எதுவும் முயற்சி செய்யவில்லை. 1875ஆம் ஆண்டில் தான், ஜெர்மனியைச் சார்ந்த புகழ்வாய்ந்த தொல்பொருள் வல்லுநர்கள்—கர்டிஸ்-ஆட்லர் என்போர் அந்த இடத்தை முழுவதும் தோண்டிப் பார்க்க கிரேக்க அரசாங்கத்துடன் தனியாக ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஆறு ஆண்டுகாலம் அங்கு அகழ்வாராய்ச்சி நடைபெற்றது. ஆறுண்டு கால உழைப்புக்குப் பிறகு, 16 அடியாழத்தில் புதையுண்டு கிடந்த விளையாட்டரங்கம், மற்போர்க்கூடம், விருந்தினர்விடுதி, பார்வையாளர் அமர்ந்து பார்க்கும் படிக்கட்டுகள், நூற்றுக் கணக்கான அரிய சிற்பங்கள், பற்பல கிரேக்க அரசுகளின் சிறப்புக்குரிய கருவூலங்கள், அனைத்துக்கும் மேலாக இரத்தச் சிவப்பு பூசப்பட்ட 60 அடிக்கும் உயர்மான கற்றூண்கள் கொண்ட ஜீயஸ் கோவில், ஆகியவைகளைக் கண்டுபிடித்தார்கள். இந்த ஜீயஸ் தான் ஒலிம்பிக் விழா கொண்டாட்டத்திற்குரிய கடவுள். பண்டைக் காலத்தில் ஜீயஸ் தேவனுக்கிருந்த செல்வாக்கு, நமது காப்பியங்களில் குறிப்பிடப்படும் இந்திரனுக்கு ஈடானதாகும். ஒலிம்பிக் கோவிலில் கண்டெடுக்கப்பட்டுள்ள ஜீயஸ் சிலை மிகப்பிரமாண்டமானது. உட்கார்ந்திருக்கும் நிலையில் காணப்படும் அது, எழுந்து நின்றால், கோவிலின் கூரையைப் பிய்த்துக் கொண்டு வானத்தை முட்டும் அளவுடையது. உலகத்தின், ஏழு அதிசயங்

களில் இந்த ஜீயஸ் சிலையும் ஒன்றென்பதைக் கொண்டே, அதன் வேலைப்பாட்டை உணரலாம். கிரேக்கர்களுக்கு ஜீயஸ்தான் தலையாய கடவுள்; தேவர்க்குத்தேவன் பருவங்களை முறைப்படி இயக்குவித்து வானகத்தை அரசாளும் பேரரசன்; அனைத்துக்கும் மேலாக ஒலிம்பிக் விழாவுக்கு உரிய தெய்வம்.

இந்த இலக்கணம்தான் நமது இந்திரனுக்கும் காப்பியங்கள் வகுத்திருக்கின்றன.

"மண்ணகம் மருள விண்ணகம் வியப்ப—

விண்ணவர் தலைவனை விழுநீராட்டி" என்ற சிலப்பதிகார வரிகளும்,

"விண்ணவர் கோமான்விழாக்கொள் நன்னாள்" என்ற மணிமேகலை வரியும் இதனைச் சொல்லுகின்றன.

ஜீயுஸ்கோவிலைத் தவிர கி. பி. 174ஆம் ஆண்டில் கிரேக்கப் புலவன் பவுசானியஸ் என்பவன் தனது எழுத்தில்குறிப்பிட்டுள்ள அற்புதச் சிலையையும்—அவன் கடைசியாகத் தான் எந்த இடத்தில்பார்த்ததாகக்குறிப்பிட்டிருக்கிறானோ அதே இடத்தில்-கண்டெடுத்திருக்கின்றனர். இந்தப் பவுசானியஸ், ஏறக்குறைய நமது இளங்கோ அடிகளுக்குச் சமகாலத்தவன். அவன்எழுதியபடி இருப்பதாகத் தெரிவித்த இடத்தில்-பொருள் எடுக்கப்பட்டிருக்கிறது. இளங்கோ குறிப்பிடும் பூம்புகார் குறிப்புகள் இன்றைக்கும் அப்படியே, ஏன் இருக்கக்கூடாது?

ஒலிம்பிக் கிராமம் கண்டு பிடிக்கப்பட்ட 15ஆண்டுகளுக்குப் பின்னால், 1896-ல் பிரான்ஸ் நாட்டில் பேர்பெற்ற விளையாட்டு வீரர் பியர் டீ-குபேர்டின் என்ற கனவானால், ஒலிம்பிக் விழா மீண்டும் நடைபெறவும், அது தோன்றிய கிரேக்க நாட்டின் புகழை நாலாண்டுகளுக்கு ஒருமுறை இந்த உலக முழுவதும் நினைவு கூறவும் வழியேற் படுத்தப்பட்டது.

1896ஆம் ஆண்டிலிருந்துஇந்த ஆண்டு வரை நான்காண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பிக் விழா நடைபெற்று வருகிறது. இடையில் 1916, 1940, 1944ஆகிய ஆண்டுகளில் நடந்திருக்க வேண்டிய மூன்று விழாக்கள் உலகப் போர்களின் காரணமாக நடைபெறவில்லை. கடந்த விழா ரோம் நகரில் நடைபெற்றது. இந்த ஆண்டில் 18-வது ஒலிம்பிக் விழா ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் நடைபெறுகிறது. இதுவரை ஒலிம்பிக் விழா ஆசியாக் கண்டத்தில் நடைபெற்றதில்லை. 18வது ஒலிம்பிக் ஜப்பானில் நடைபெறுவது, பொதுவாக ஆசியாக் கண்டத்திற்கேபெருமை என்று கருதப்படுகிறது. கிழக்கிந்திய நாட்டு மக்கள் அத்தகைய பெரு விழாவைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாட ஏற்பாடு செய்யவியலாது என்ற கருத்து ஐரோப்பியர்களிடையே நிலவிவந்ததை ஜப்பான்நாடு இன்று பொய்யாக்கிக்காட்டியிருக்கிறது. அது மட்டுமல்லாமல், ஐரோப்பியர்களே மலைத்துப்போகும் அளவு

விழாவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒலிம்பிக் விழாவினை முன்னிட்டுமட்டுமே, சுமார் 1200 கோடி ரூபாய் செலவில் டோக்கியோவின் சுற்றுப்புறங்களும், தெருக்களும், கட்டிடங்களும் ஜப்பானிய அரசாங்கத்தால் புதுப்பிக்கப் பெற்றிருக்கின்றன. சுற்றிலும் மரங்களும் இயற்கை அழகும் சூழ்ந்த விழாத் திடலையும் விளையாட்டு மேடைகளையும் உருவாக்குவதற்கேசுமார் 33 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வேளைக்கு 5 இலட்சத்து 20 ஆயிரம் பேருக்கான 150 வகைப்பட்ட பதார்த்த வகைகளுடன் கூடிய பல்வேறு உணவுகள் பரிமாற ஒலிம்பிக் உணவு விடுதி ஆயத்தமாகியிருக்கிறது. உலகத்தின் 98 நாடுகளிலிருந்தும் அந்தந்தத் துறை விளையாட்டில் தேர்ந்து பொறுக்கியெடுக்கப்பட்ட 800 விளையாட்டு வீரர்களுக்குமேல் டோக்கியோ ஒலிம்பிக் திடலில் தங்கள் தங்கள் திறமைகளின் மூலம் தாம் பிறந்த நாட்டின் பெருமைகளை நிலைநாட்டுவர்.

கிரேக்கத்தில் கொண்டாடப்பட்ட ஒலிம்பிக் விழாவுக்கும் இன்று கொண்டாடப் படுவதற்கும் நிரம்ப வேறுபாடுகள் உண்டு. விளையாட்டைக் கூட அரசியல் களமாகவும் வியாபாரச் சாதனமாகவும் ஆக்கிவிட்ட இந்நாள் ஒலிம்பிக்விழா, அன்றைய கிரேக்கருக்குப் பழக்கமில்லாதது. உடல் வலிவுக்கும் நேர்மையான போட்டியுணர்வுக்கும் மட்டுமே அங்கு முதலிடம் கிடைக்கும். கிரேக்கரைத் தவிர்த்த மற்ற மக்களோ, நற்குடியிற் பிறவாத கிரேக்கனோ அன்றைய போட்டியில் ஒரு போதும் கலந்துகொள்ள முடியாது. முற்றிலும் கிரேக்கர்கள் மட்டுமே கலந்துகொள்ளும் விழா அது ஒன்று தான். போட்டியில் கலந்துகொள்ளும் எவரும் ஒரு விரற்கடைதுணிகூட அணியமாட்டார்கள். பிறந்த மேனியோடு தான் திடலில் பொருதுவார்கள். ஒலிம்பிக்விழா நாட்களில் பெண்கள் அந்தப் பக்கமாகப் போவது பயங்கரக் குற்றமாகும். அதிலும், குறிப்பாக மணமான பெண் எவளாவது அந்தத் திடல்பக்கம் தப்பித்தவறிவந்து விட்டாலும் அந்த இடத்திலேயே அவள் கொல்லப்படவேண்டும் என்பது விழாவின் சட்டத்திட்டங்களில் ஒன்றாக இருந்தது. வைரம் பாய்ந்த உடற்கட்டுடன் பிறந்த மேனியாய்ப் பொருதிக் கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான ஆண்களை ஒரே சமயத்தில் பார்க்கும் எந்தப் பெண்ணும், தன் கணவனின் ஆண்மையை அலட்சியப்படுத்தும் மனோ பாவத்தைப் பெற்று விடுவாள் என்ற முட்டாள் தனமான நம்பிக்கை அப்போது நிலவிற்று.

ஒலிம்பிக்விழாநடக்கவேண்டிய ஆண்டின் வசந்த காலத்தில், ஜீயஸ் கோவிலைச் சார்ந்த 'ஆலிவ்' மரத்தின் இலை தழைகளைக் கிரீடமாக அணிந்து கொண்டு மூன்று தூதுவவீரர்கள் எலிஸ் என்னும் நகரத்திலிருந்துபுறப்படுவார்கள். மூவரும் கிரேக்க மண்டலத்தின் எல்லா நாடுகளுக்கும் சென்று

விழாத் தொடக்கத்தை அறிவிப்பார்கள். கிரேக்கர்கள் அனைவரும் விழாவுக்காக ஒலிம்பிக்குப் பாதுகாப்பளிப்பது பற்றி கிரேக்க அரசுகளுக்குள் கி. மு. 776-இல் செய்துகொண்டுள்ள புனித ஒப்பந்தம் பற்றியும் அவர்கள் கூவித் தெரிவிப்பர்.

நம்து இந்திர விழாவும் அப்படித் தான். நாள் இதிப்படியோ; பஞ்சாங்கத்தில் போட்டுள்ளபடியோ மற்ற விழாக்களைப் போல் இந்திரவிழா தொடங்கப் பெற்றதில்லை. விழாத் தொடக்கத்தை அரசத் தூதுவர்கள் பறையறைவித்து நாடு நகரெங்கும் அறிவிப்பார்கள்:

“வச்சிரக்கோட்டத்து மணங்
கெழுமுரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை
யேற்றி’

விழா முரசம் அறைந்து தெரிவிப்பது நமது மரபு.

ஒலிம்பிக் விழாத் தொடக்கத்தை எலிஸ் நகரத்தூதுவர்கள் அறிவித்ததும்கிரேக்கர்களுக்குள் நடந்துகொண்டிருக்கும் போர், நிலவிவரும் பிணக்கு, பகைமை ஆகியஅனைத்தும் ஒத்திப்போடப்படும். ஏதாவது இரு அரசுகளுக்குள் எப்போதும் போர் நடந்துகொண்டிருக்கும். கிரேக்க மண்டலம், அந்த மாதத்தில் முழுஅமைதியை அனுபவிக்கும். ஒலிம்பிக் விழா நடக்கும் மாதம் அரசர்களின்றி ஆண்டவனே நேரடியாக மக்களை ஆளும்காலமாகக் கிரேக்கர்கள் கருதினர். நாடு, எல்லை, சட்டம், அரச மகிமை ஆகிய எவையும் அந்த மாதத்தில் விழாவுக்கு வரும் எந்தக் கிரேக்கனையும் கட்டுப்படுத்தா.

இந்திர விழாநாட்களையும் இது போன்றே தமிழர்கள் கருதினர்.

‘நால்வேறு தேவரும் நலத்தகு
சிறப்பில்
பால்வேறுதேவரும் இப்பதிப்
படர்ந்து
மன்னன் கரிகால் வளவன்
நீங்கியநாள்’

எனும் “மணிமேகலை” வரிகள், விழாக் காலத்தில் மன்னனின் ஆட்சி தளர்ந்து தேவர்கள் ஆட்சி துவங்கியதான நம்பிக்கையைத் தெரிவிப்பதுடன்,

“வேறுவேறுசிறப்பின் வேறு
வேறு செய்வினை
ஆறறிமரபின் அறிந்தோர்
செய்யுமின்”

எனும் வரிகள் பல்வேறுகருத்தும் சிறப்பும் கொண்டோர் அனைவரும் விழா நாளில் ஒருங்கிணைய வேண்டுவதை வலியுறுத்தியும்,

“தேவரும் மக்களும்ஒத்துடன்
திரிதரு
நாளேழ்நாளிலும் நன்கறிந்
தீரென்”

என்ற வரிகள், நடமாடும் மக்கள், நற்சிறப்புகொண்ட தேவர்கள் ஆகிய இருசாராரும் தோளோடு தோளாகத் தெருவில் நடமாடுவதாகக் கொள்ளுமாறும்,

“பசியும்பிணியும் பகையும் நீங்கி
வசியும்வளனும் சுரக்கென,
வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன்
அந்நகர் மருங்கென்

என்ற வரிகள் பகைமை, பசி, பிணி அனைத்தும் நீங்கி வளமான வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு விழா நாட்கள் கழியட்டும் என்பதையும் தெரிவிக்கின்றன.

எலிஸ் நகர ஒலிம்பிக் கிராமத்திற்குப் போகும் எவனுக்கும் எத்தகைய இடறும் தொல்லையும் யாராலும் விளைவிக்கப் படக்கூடாது என்பது விழாநாட்களில் கிரேக்கம் கடைபிடித்த கண்டிப்பான விதி. அப்படி யாராவது துணிந்து தொல்லை விளைவித்தால் கடுமையான தண்டனை விதிக்கப்படும். அலக்சாண்டரின் தந்தையான முரடன் பிலிப்ஸ்மன்னனே கூட, ஒருமுறை இது போன்ற தண்டனைக் குட்பட்டுப் பெருந்தொகையை அபராதமாகச் செலுத்தினனும்.

நடுவேனிற் காலத்தின் முழு நிலவு நாளன்றுதான் விழாவின் துவக்கம் அமையும். முதல்நாளில் எவ்விதப் போட்டியும் நடைபெறாது. அன்று முழுக்கமுழுக்க ஒலிம்பிக் கடவுளான ஜீயஸ் வழிபாட்டிலேயே கழியும். இந்திர விழாவும் நடுவேனிற்கால சித்திரைத் திங்களின் முழுநிலவு நாளில்தான் சிறப்புடன் விளங்கும்.

"சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென,

வெற்றி வேல்மன்னற் குற்றதை ஒழிக்கென"

எனும் சிலப்பதிகார வரிகள் தெரிவிப்பது போல், மறப்பெண்களும் ஆண்களும் அன்றுதான் பலவிதப் பலிகள் கொடுத்துப் படையலிடுவர்

ஜீயஸ் சிலையின் முன்னல்விழாவின் முதல்நாளன்று பலவிதபலிகளும் படையலும் இட்டு, ஒவ்வொரு கிரேக்கப் போட்டியாளரும் உறுதிமொழி எடுத்துக் கொள்வர். பணிவும் மாண்பும் மிளிரநேர்மைகாக்கப் போட்டியிடுவதாக அவர்களின் உறுதி மொழிவாசகங்கள் இருக்கும்.

போட்டியினைக் காண ஒவ்வோர் விழாவின்போதும் அன்றைய உலகெங்குமிருந்தும் 30 ஆயிரம் பேர்களுக்குக் குறையாமல் ஒலிம்பிக் கிராமத்தில் கூடினர்கள் என்று ஒரு கணக்கு தெரிவிக்கப்படுகிறது. விழா, ஓட்டப்பந்தயத்தில்தான் தொடங்கும். 600 அடிகளைக் கொண்ட "ஸ்டேடியன்" எனும் தூரத்தை அவர்கள் ஓடிக் கடப்பார்கள். இந்த "ஸ்டேடியன்" என்ற பெயரிலிருந்துதான், இன்றைய ஸ்டேடியம் முளைத்திருக்கிறது. ஓட்டப்பந்தயம் தவிர மற்போர், குத்துச்சண்டை, கோல் தாண்டுதல், பளுஎறிதல், அம்பெய்தல், வண்டிகள் ஓட்டும் பந்தயம் ஆகிய போட்டிகள் அங்கு குறிப்பிடத்தக்கவை. இன்றைய ஒலிம்பிக்கில் இவைதவிர நவீன விளையாட்டுக்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டு விட்டன. முக்கோண கணித விதியின் ஆதிகர்த்தா பிதாகரஸ் ஒலிம்பிக் போட்டியில் வெற்றிவாகை சூடிய தகுதியில்தான் தனது தத்துவத்தை அனைவரும் ஆவலுடன் கவனிக்

கச் செய்திருக்கிறான்

ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் அங்கு எந்தவகையில் மதிக்கப் பெற்றனர் என்பதைச் சொல்லவே முடியாது. அரசர்களாலும் அதிகமாக அவர்கள் போற்றப்பட்டனர். வெற்றி வாகை சூடியவர்களுக்கு அன்று கொடுக்கப்பட்ட சிறப்பு பொருள் மதிப்புக்குப் பொருந்தாதது. ஜீயஸ் கோவிலின் ஆலிவ்மரத்து மிலாறுகளால் ஆன கிரீடம்தான் வெற்றிபெற்றவர்கள் பெற்ற பரிசு. இந்தப் 'பரிசுக்கு அன்றைய கிரேக்கத்தில் இருந்த பெருமை, இன்றைய நோபில் பரிசுக்கும் இருக்கிறதா என்பது ஐயமே. தமிழகத்தில் யாக்கப் பெற்ற பரணிகளைப் போல், ஒலிம்பிக் வெற்றி யாளர்களுக்கு கிரேக்கப் புலவர்கள் தங்கள் முழுத்திறமைகளையும் பயன்படுத்தி பாக்கள் புனைந்து சிறப்பித்தனர். கிரேக்கப் புலவர்களுக்குப் புலவன்—பிண்டார் என்ற பெருங்கவிஞன். ஒலிம்பிக் வெற்றியாளரைப் புகழ்ந்து பாடுவதிலேயே தனது திறமைகளையும் வாழ் நாளையும் செலவிட்டிருக்கிறான். கைகிறையச் சம்பாதிக்க வேண்டும் என்ற குறிக்கோளிலேயே இன்றைய இளைஞர்கள் படிப்பைப் பெற்றோர்கள் கண்காணித்து வருவது போல், ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெற வேண்டும் என்ற கொள்கையிலேயே தங்கள் குழந்தைகளைப் பயிற்றுவிப்பது கிரேக்கர்களுக்கு மூச்சுடன் கலந்த நெறியாக இருந்தது. கிரேக்கர்கள் பெருமையும் பீடும் மறைந்ததற்கு வாய்த்த பல்வேறு காரணங்களுடன், ஒலிம்பிக் வெற்றியில் வெறி கொண்டலைந்த "விளையாட்டுப் புத்தியும்" தலையாயகாரணமாகப் பின்னால் வந்த வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜீயஸ் வழிபாட்டையொட்டி ஏற்பட்டதுதான் ஒலிம்பிக் விழா என்றாலும், அது வெறும் மதச் சம்பிரதாயமாக மட்டுமே விளங்கவில்லை. விழாவின் ஒவ்வொருநாளிலும்-போட்டிகள் முடிந்து மாலை வேளைகளில் -பாட்டும் கூத்தும், தத்துவவாதங்களும் சமயப் பிரச்சாரங்களும் அங்கு நடைபெற்றன. கிரேக்க மண்டலம் முழுவதிலும் பரவிக் கிடந்த பல்வேறு துறையின் ஆய்ந்தறிவாளரும் அங்குக் குழுமினர். கவிவாணர்கள் தாங்கள் யாத்த கவிதைகளை அரங்கேற்றுவர்; சிற்பிகள் தங்களது திறமைகளைக் காட்சிக்கு வைப்பர். இசோகிரேட்ஸ் போன்றோரும் சோபிஸ்டுகளும் தங்கள் தங்கள் தர்க்க அறிவை இளைஞர்கள் வியக்கும் வண்ணம் வெளிப்படுத்துவர். கிரேக்கர்களை ஒன்றுபடுமாறு கோரும் ஒருமைப்பாட்டு வாதமும் அங்கு இருக்கும்; ஏதன்சும், ஸ்பார்ட்டாவும் எந்த வகையில் தனித்தனிப் புகழ்வாய்ந்தவை என்ற பெருமையும் அங்குபேசப்படும். ஆண்டவன் அருமைகள் போதிக்கப் படும்; அப்படியொருவன் இல்லவே இல்லையென்று சொல்பவனும் அங்கு சிறப்பிக்கப் படுவான்.

அரசியல் ஒப்பந்தங்கள், முடிசூட்டும் ஏற்பாடுகள், சம்பிரதாயத்தின் குறைநிறைகள், ஆகிய அனைத்தும் அங்கு விரிவாக விவாதிக்கப்படும்.

இந்திரவிழாவும் இப்படித்தான் நடந்திருக்கிறது.

"திறவோர் உரைக்கும் செயல் சிறந்தொருபால்"
கண்ணுளார் கருவிக் குயிலுவர்; பண்ணியாழ்ப் புலவர் பாடற் பாணரொடு
எண்ணருஞ் சிறப்பின் இசை சிறந்தொருபால்
முழவுக்கண் துயிலாது முடுக்கரும் வீதியும்
விழவுக்களிசிறந்த வியலுள் ஆங்கண்

எனும் சிலப்பதிகார வரிகள் விழாவின் சிறப்புச் செயல்களை வெளியிடுகின்றன.

தண்மணற்பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்
ஒட்டியசமயத் துறுபொருள் வாதிகள்
பட்டிமண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்
பற்றுமாக்கள் தம்முடனாயினும்
செற்றமும் கலாமும் செய்யாதகலுமின்

எனும் மணிமேகலை வரிகள் இந்திரவிழாவில் இருந்த கல்வி—கேள்விச் சிறப்புகளையும், வாதம் புரிந்தோர் காட்ட வேண்டிய சகிப்புத் தன்மைகளையும் வெளிப்படுத்துகின்றன.

மிருகத்தனமான ரோம் ஏகாதிபத்தியம் தலைதூக்கியதும் கிரேக்க அரசுகளும் அதன் பண்புகளும் அழிந்தன. அத்துடன் ஒலிம்பிக் விழாவும் மறைந்தது.

ஒலிம்பிக் விழாவைப்போன்று நாம் கொண்டாடிய இந்திரவிழா எதனால் மறைந்தது என்பதை இதுவரை யாரும் தெளிவாகச் சொல்லவில்லை. ஜப்பானில் இப்போது நடைபெறும் ஒலிம்பிக் விழாவையொட்டிப் பேசப்படும் கிரேக்கத்து மாண்புகள் நம்மை ஏங்கவைக்கின்றன. அதற்குக் குறையாத வகையில் நாமும் பெருவிழா ஒன்றை இருபத்தெட்டு நாட்கள் ஒலிம்பிக்குக்குரிய அத்தனைச் சிறப்புகளுடனும் கொண்டாடவிருக்கிறோம். ஒலிம்பிக் விவரங்கள் வெளிப்போந்தது போல், நமது இந்திர விழா விளக்கங்களும் வெளிப்பட்டால், கிரேக்கப் பண்பாடுகளுக்குச் சளைக்காதவை நமது பண்பாடு என்பது உறுதியாகும்.

உலகத்திலேயே பெருவிழாவைக் கொண்டாடிய முதல் சமுதாயம் கிரேக்கச் சமுதாயந்தான் என்று உறுதியாகத் தெரிவிக்கும் வரலாற்று வல்லுனர்கள், இனி தமிழ்ச் சமுதாயத்தையும் பக்கத்திலிருத்தியே அதுபோல் பேசவேண்டும். இதற்குப் பூம்புகாரின் அகழ்வாராய்ச்சி பெரிதும் பயன்படும் என்று நம்புவோம். இந்த நம்பிக்கைபட்டுப்போகாமல் பாதுகாத்துக் கொள்வதற்கும் "பூம்புகார்த் தமிழகம் திரும்ப வர வேண்டும்" என்ற முழக்கத்தை விடாது தொடர்வோம்.

—"முத்தாரம்"

அதிசயம்; ஆனால் உண்மை!

நோயை வீழ்த்தும் துப்பாக்கி!
காய்ச்சலுக்குக் கைகண்ட மருந்து!
(பீட்டர் எல்லர்)

எதிரியை வீழ்த்தத்தான் துப்பாக்கி பயன்படும் என்று நினைத்தால், அது தவறு. நோயை வெல்லவும் துப்பாக்கி பயன்படும். உடலுக்குள் மருந்தைச் செலுத்த புதிய "துப்பாக்கி" ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. கொலைக் கருவியான துப்பாக்கியிலிருந்து வெளிப்படும் குண்டு, உயிரைப் பறிக்கும்; ஆனால் மருத்துவக் கருவியான துப்பாக்கியிலிருந்து உடலுக்குள் செலுத்தப்படும் மருந்து, உயிரைப் பாதுகாக்கும்.

ஹாம்பர்க் (டாட்) - ஒவ்வொரு ஆண்டும் உலகமெங்கும் இலட்சக் கணக்கான மக்கள் 'இன்புளுயன்சா' காய்ச்சலினால் அவதிப்படுகிறார்கள். 'புளு' என்று சுருக்கமாக அழைக்கப்படும் குளிர்க்காய்ச்சலுக்கு இப்போது தக்க மருந்து கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இம் மருந்தைச் செலுத்த புதுவித சாதனமாக துப்பாக்கி தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நவீன துப்பாக்கி மூலம் இம்மருந்தை உடலுக்குள் "சுட்டுக்" கொள்ள வேண்டும். காய்ச்சல் இருக்கும் போது இம்மருந்தைச் செலுத்தினால் உடனடியாகப் பலன் தெரியாது. ஆனால் உடலில், 'புளு' காய்ச்சலை எதிர்க்கும் ஆற்றலை வளர்த்து விடுகிறது. அதன் பின், 'புளு' காய்ச்சல் வரவே வராது; மருத்துவத் துப்பாக்கியிடம் ஒரே பயம்.

மேற்கு ஜெர்மனியில் மார்பர்க் என்னுமிடத்தில் உள்ள 'பெரிங் வர்கி' என்னும் மருந்துக் கம்பெனி இந்தப் புதுமையான மருந்தையும் துப்பாக்கியையும் கண்டு பிடித்திருக்கிறது. ஒவ்வொருவரும் உரிய காலத்தில் இந்த மருந்தை உடலில் செலுத்திக் கொண்டால், குளிர்காய்ச்சல் எட்டிப்பார்க்காது.

குளிர் காய்ச்சல் கண்டவர்களுக்கு, ஊசி போட்டுக்கொள்ள பயம்! உடம்பெல்லாம் ஒரே புண்ணாகி விடுகிறதே என்ற வேதனை, வெறுப்பு. இதைத் தவிர்க்கவே, துப்பாக்கி ஆயுதம்! வலி தெரியாமல், தோல் வழியாக இத்துப்பாக்கி வேகமாக மருந்தை உட்செலுத்தி விடுகிறது. இம் மருந்தைச் செலுத்திக் கொண்டால், குளிர் காய்ச்சலை எதிர்த்து, உடம்பைப் பாதுகாக்கக் கூடிய சக்தி ஓராண்டுக்கு இருக்கிறது.

இம்மருந்தும், துப்பாக்கியும் மார்க்கெட்டுக்கு வருவதற்கு முன்னர், 80,000 பேர்கள் மீது

சுட்டு' சோதனை நடத்தினார்கள். சோதனை வெற்றி அடைந்தது. ஒரு சிலருக்கே சில உபாதைகள் ஏற்பட்டன.

நவீன துப்பாக்கி மூலம் மருந்தைச் சுடுவதால், நோயாளிக்கு வலி ஏற்படுவதில்லை என்பதுடன், வேகமாகவும் செயலாற்ற முடிகிறது. இந்தத் துப்பாக்கியைக் கொண்டு, ஒரு நோயாளிக்கு மருந்தைச் செலுத்த சில வினாடிகளே பிடிக்கும். இதன் மூலம் ஒரு மணி நேரத்தில் 1,000 நோயாளிகளுக்கு மருந்தைச் செலுத்தலாம். பழைய ஊசிகுத்தும் முறையில்மருந்துப்புட்டியை உடைத்து, மருந்தை அடைத்து, உடம்பில் ஏற்றுவதாக இருந்தால், இதே நேரத்தில் 100 பேர்களுக்குத்தான் ஊசி போட முடியும்.

இருதய, இரத்தக் குழாய், ஆஸ்துமா, காசநோய் உள்ளவர்களுக்கு 'புளூ' குளிர் காய்ச்சல் எளிதில் பற்றிக் கொள்கிறது. மேற்கு ஜெர்மனியில் மட்டும் ஓராண்டில் 10,000 பேர்கள் 'புளூ' காய்ச்சலுக்குப் பலியாகிறார்கள்.

—(யூ. பி. எஸ்.)

"ரெடிமேட் உணவு"க்கு கிராக்கி!

சங்கடமான சமையல் வேலை குறைகிறது

(எலிஜபெத் ஜெர்விட்ச்)

" அடுப்பங்கரையே கதி என்று ஆரணங்குகள் அடைபட்டுக் கிடந்த காலம், மலையேறி வருகிறது. புட்டிகளில் அடைக்கப்பட்ட "ரெடிமேட்" உணவு வகைகளுக்கு இப்போது கிராக்கி அதிகரித்து வருகிறது. இன்னும் கொஞ்ச காலத்தில், வீடுகளில் சமையல் என்பதே இருக்காது என்ற நிலை ஏற்பட்டாலும், ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

ஹாம்பர்க் (டாட்) — சமையல் செய்வதே, பெண்களின் முக்கியமான வேலையாக இருந்து வந்தது. இன்று மாறிவருகிறது. 'ரெடிமேட்' உணவு வகைகள் பெருத்து வருகின்றன; சமையல் வேலையில் சங்கடப்படும் பெண்களுக்கு இதனால் சிரமம் குறைகிறது.

குளிர்பதனம் செய்யப்பட்ட உணவு வகைகள் தயாரிப்பு, மேற்கு ஜெர்மனியில் அதிகரித்து வருகிறது. எனவே நடப்பு ஆண்டில் அதிகமான அளவு இவை விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு விற்பனை நூறு கோடி மார்க் நாணய மதிப்பை எட்டலாம்.

வேலை செய்ய நேரமோ ஆட்களோ கிடைப்பதில்லை. இதனால் உணவுப் பழக்கத்தில், பல அடிப்

படை மாறுதல்கள் ஏற்படத் தொடங்கிவிட்டன. முன்பு கொழுப்பு, மாவுச் சத்து ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தினார்கள். ஆனால் இன்று புரதம், வைட்டமின், உலோகச் சத்து ஆகியவற்றில் அக்கறை செலுத்துகிறார்கள். புதிதாகப் பழுத்த பழங்களையும், காய்கறிகளையும் சாப்பிட்டுப் பழகிவிட்டார்கள் மக்கள். அத்துடன் 'ரெடி, மேட்' உணவு வகைகளும் வழக்கத் தொடங்கி விட்டன.

அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது, மேற்கு ஜெர்மனியில் குளிரவைக்கப்பட்ட உணவுப் பதார்த்தங்கள் குறைவாகப்பயன் படுத்தப்படுகின்றன. அமெரிக்கர் சராசரி ஓராண்டில் 36 இராத்தல் குளிர் உணவைச் சாப்பிடுகிறார் என்றால், மேற்கு ஜெர்மனியர், 2, 4 இராத்தல் குளிர் உணவைப் பயன்படுத்துகிறார். ஏற்கனவே தயாரிக்கப்பட்ட 'ரெடி மேட்' உணவைச் சாப்பிடும் வழக்கம் இன்றும் பரவவில்லை. சற்று கூடுதலாகச் செலவு ஆகும் என்பதுடன், மேற்கு ஜெர்மனிப் பெண்கள், இன்னும் தங்கள் உணவைத் தாங்களே சமைத்துக் கொள்ள விரும்புகிறார்கள்.

எனினும் மேற்கு ஜெர்மனியில் உள்ள 180,000 உணவுக் கடைகளில் ஏறத்தாழ 130,000 கடைகளில் குளிரவைக்கப்பட்ட காய்கறிகள், மீன், இறைச்சி, உருளைக்கிழங்கு பதார்த்தங்கள் ஆகியவை விற்கப்படுகின்றன. வேண்டிய பண்டங்களைத் தாங்களேபொறுக்கி எடுத்துக் கொள்ளும் வசதியுள்ள கடைகளில்கிட்டத்தட்ட 93 சதவீத கடைகளில் குளிர்ப்பதன வசதி செய்யப்பட்டுள்ளன.

சத்துணவு என்று கருதினாலும்; குளிரவைக்கப்பட்ட உணவே சிறந்ததாக விளங்கும். தற்போது 150 இலட்சம் பேர், ஒவ்வொரு நாளும் தங்கள் முக்கிய உணவை வெளியேதான் சாப்பிடுகிறார்கள். உணவு, சிற்றுண்டி விடுதிகளில் தொழிலாளர் பற்றாக் குறையைச் சமாளிக்க, குளிரவைக்கப்பட்ட 'ரெடி மேட்' உணவுவகைகள் மிகவும் உதவியாக இருக்கின்றன. வழக்கமான முறையில் 'சுடச்சுட' தயாரிக்கப்படும் உணவைவிட குளிரவைக்கப்பட்ட உணவுப் பதார்த்தங்கள் மிகவும் சுவையாக இருப்பதாக "சாப்பாட்டுப் பிரியர்கள்" கூறுகிறார்கள்.

பெரிய நிறுவனங்கள் மட்டுமன்றி, ஆஸ்பத்திரிகளிலும் குளிர் உணவுப் பண்டங்களைப் பெருமளவு வாங்குகிறார்கள். விரைவில் முதியோர் விடுதிகளிலும், சமூக நல நிலையங்களிலும், இப்புரட்சிகர உணவு முறை அமுலுக்கு வரும் எனத் தாராளமாக நம்பலாம்.

—(யூ. பி. எஸ்.)

மதிய உணவுத் திட்டம்—மானிய 'செக்'குகளை, மத்திய பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்கள் மூலமாக வழங்க உத்தரவு.

Midday Meals Scheme—Issue of cheques through Headmasters of central schools—Instructions—Issued.

(G. O. Ms. No. 1726, Education, dated 18th September—1965.)

மதிய உணவு மானிய 'செக்கு' களை, மதிய உணவு நிலைய செயலாளர்களின் பெயருக்கே அனுப்புவதுபற்றி 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் (கல்வி) 104-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டன. மேலும் கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 34851-ல் உள்ள உத்தரவு களின்படி, ஒவ்வோரு பஞ்சாயத்து யூனியனிலும் உள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், பற்பல குழுக்களாகப் பிரிக்கப் பட்டு, ஒவ்வொரு குழுவிலும் உள்ள மத்திய பள்ளிக்கூடத் தலைமை யாசிரியர் மூலமாக அக்குழுவி லுள்ள மற்ற ஆசிரியர்களுக்கான சம்பள 'செக்'குகள் அனுப்பப் பட்டு வருகின்றன. அதுபோலவே, மதிய உணவு மானிய செக்குகளையும், மத்திய பள்ளிக் கூடத் தலைமையாசிரியர்களுக்கே அனுப்பிவிடலாம் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது.

(2) அதற்கேற்ப, ஒவ்வொரு மதிய உணவுச் செயலாளருக் கும், தனித்தனியாக முன் மானிய 'செக்'கை அனுப்புவதற் குப் பதிலாக, மத்திய தலைமை யாசிரியர் பெயருக்கே பல்வேறு மதிய உணவு நிலையங்களுக்கான முன் மானிய மொத்த தொகைக்கு ஒரு 'செக்' அனுப் பப்படவேண்டுமென்று, 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் (கல்வி) 104-ல் உள்ள உத்தரவுகளுக்கு பகுதி திருத் தமாக அரசாங்கம் ஆணை பிறப் பிக்கிறது; அவ்வாறு 'செக்'குகள் அனுப்பும்போது, ஒவ்வொரு மதி யஉணவுநிலையத்திற்குமுண்டான முன் மானியத்தொகை எவ்வளவு என்பதைக் குறிப்பிட்டு, இரண்டு நகல்கள் கொண்ட பட்டியலை அந்தச் 'செக்'கோடு இணைத்து அனுப்பவேண்டும். அதே சமயத் திலேயே, ஒவ்வொரு மதிய உணவு நிலையத்திற்கும் அனும திக்கப்பட்ட முன் மானியத் தொகை எவ்வளவு என்று சம் பந்தப்பட்ட செயலாளர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். அப்போது தான் அவர்கள், மத்திய பள்ளிக் கூட தலைமையாசிரியர்களிட மிருந்து, தொகையைப் பெற்றுக் கொள்ளக்கூடும். மேற்குறிப் பிட்ட இரண்டு பட்டியல்களிலும், தொகையைப் பெற்றுக்கொண்ட தற்காக, செயலாளர்களின் கை யெழுத்தை, மத்தியபள்ளிக்கூடத்

தலைமையாசிரியர்கள் பெறுக் கொள்ள வேண்டும். அதில் ஒரு நகலை அவர் வைத்துக்கொண்டு, மற்றதை பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்குத் தபால் மூலம் அனுப்பிவிடவேண்டும். மதிய உணவு நிலைய செயலாளர்கள் கையொப்பமிட்ட இந்த நகல் தங்களுக்கு வந்து சேர்ந்ததா என்பதை பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் கவனித்து வர வேண்டும்.

(3) ஒவ்வொரு மாதமும் முதல் தேதி சம்பள 'செக்' அனுப்பும்போது, மதிய உணவு மானிய 'செக்'கையும் சேர்த்து அனுப்பிவிடலாம் என்றும், அதுவரை, மதிய உணவு மானிய 'செக்'கை அனுப்ப தாமதம் செய்யக்கூடாது என்றும், மாவட்ட கல்வி அதிகாரிகளிடமிருந்து சிபாரிசுகளைப் பெற்ற உடனேயே, 'செக்'கை அனுப்பி விடவேண்டும் என்றும் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

(4) உதவிபெறும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் செயல்பட்டு வரும் மதிய உணவு நிலையங்களுக்கான மானிய 'செக்'கை தபால் மூலம் நேரடியாக அந்த நிலைய செயலாளருக்கே அனுப்பி விடவேண்டுமே யல்லாது மத்தியபள்ளிக்கூடத் தலைமையாசிரியருக்கு அனுப்பக்கூடாது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் (கல்வி) 1726.) —(கிராம நலம்)

" ஆரம்பக் கல்வி "
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு
Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

மதிய உணவுத் திட்ட மானியங்களை செயலாளர்களுக்கு மணியார்டர் மூலம் அனுப்புதல்

Education—Elementary Education—Midday - Meals Scheme—Payment of grant to the Secretaries of Midday Meals Committees—Payment of grant by Money Order—Regarding. (Memorandum No. 127476/R.D. Acts, 4/R.D. and L.A., dated 21st July 1965.)

மதிய உணவு மானியங்களை அளிப்பது பற்றி கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 41346-ல் அரசாங்கம் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. அதன்படி, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள், 'செக்'குகள் (Cheques) மூலமாக, மதிய உணவு மானியங்களை அனுப்பி அந்தச் 'செக்கு'கள் பணமாக மாற்றிக்கொள்ள இடையூறுகள் ஏற்படும் இடங்களுக்கு மானியங்களை மணியார்டர் மூலமாக அனுப்பலாம். இதுவரை மதிய உணவு நிலையங்களின் தலைவர்கள் என்ற முறையில், மதிய உணவு மானிய 'செக்கு'கள் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன. ஆனால். கல்வி பொதுச் சுகாதாரத் துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 104-ல் மதிய உணவு மானிய 'செக்கு'கள் மதிய உணவு நிலைய செயலாளர்களுக்கு (பஞ்சாயத்துத் தலைவர்களுக்குப் பதிலாக) அனுப்பப்படவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேற்கண்டவாறு திருத்தப்பட்ட உத்தரவின்படியும், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் மதிய உணவு மானியங்களை, மணியார்டர் மூலம் அனுப்ப அனுமதித்து அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று, வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். மதிய உணவு மானியங்களை மணியார்டர் மூலம் அனுப்பலாம் என்று அரசாங்கம் ஏற்கனவே அனுமதித்திருந்தாலும், இப்பொழுது திருத்தப்பட்டுள்ள உத்தரவின்படியும், மதிய உணவு நிலைய செயலாளர்களுக்கு, மானியங்களை அனுப்புவதற்குப் பொருந்தும் என்றும், அவசியமானபோது, மானியங்களை மணியார்டர் மூலமாக அனுப்பலாம் என்றும் நிலைமையைத் தெளிவாக்க அரசாங்கம் விரும்புகிறது.

இந்த விஷயத்தை எல்லாப் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 127476.)

—(கிராம நலம்)

தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி: தரம் உயருவதன் அவசியம்

அதிகம் பேர் கல்வி பயின்றால் மட்டும் போதாது; கற்கும் கல்வியின் தரம் உயர்ந்ததாக அமைய வேண்டும். அதற்குப் போதனை முறை, ஆசிரியர்களின் நிலை, நூல்களின் வளர்ச்சி, போன்ற மற்ற அம்சங்களைக் கவனித்துத் திருத்த முறச் செய்யும் நோக்கோடு, ராஜ்யந்தோறும் புதிய ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டுக் கல்விக் கழகத்தின் விசேஷப் பொறுப்பு பற்றி, இக்கட்டுரையில், உயர் நிலைப்பள்ளி கல்வித் துணை இயக்குனர் திரு. என். எஸ். எஸ். வாரன்ஸ் எழுதியுள்ளார்.

தமிழ் நாட்டில் கல்வி நிறுவனம் ஒன்றை நிறுவ தமிழக அரசாங்கம் தமது உத்தரவு ஒன்றில் அனுமதித்துள்ளது. பாரத நாட்டில் ஏற்பட்டுள்ள பதினைந்து நிறுவனங்களுள் இது ஒன்றாகும். ராஜ்ய திட்ட வரம்பிற்கு அப்பாற்பட்டு, இரண்டு லட்சம் ரூபாய் வரையில் முழு உதவியை இந்த நிறுவனத்திற்கு அளிக்க மத்திய அரசாங்கம் முன் வந்துள்ளது. உயர் நிலைப்பள்ளிக் கல்வி இயக்குநரின் ஆதிக்கத்தின் கீழ் ஒரு தனிப்பட்ட உரிமையுள்ள நிறுவனமாக சென்னையில் 1-7-1965 லிருந்து தொடங்கப் பெற்றது இம்மாநிலக் கல்வி நிறுவனம்.

தமிழ் நாட்டின் கல்வி வளர்ச்சி

கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தில் கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் வசதிகளைப் பெருக்குவதில் வரலாற்றில் கண்டறியாத மிகச் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் கல்வி இன்றியமையாததென்று உணரப்படுகிறது. முன்னூறு மக்கள் உள்ள ஒவ்வொரு இடத்திலும் ஒரு மைல் தூரத்திற்குள்ளாக ஓர் ஆரம்பப்பள்ளி ஏற்பட்டுள்ளது. ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை 15,30-3லிருந்து (1948-49) 30,323 (1964-65) ஆக உயர்ந்துள்ளது. உயர் நிலைப் பள்ளிக் கல்வித் துறையில் ஏற்பட்ட முன்னேற்றமும் குறிப்பிடத்தக்கதாகும். உயர் நிலைப் பள்ளிகளில் எண்ணிக்கை 1947-ல் இருந்த 440-லிருந்து 1965-ல் 2100 ஆக உயர்ந்துள்ளது. ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கான வாய்ப்புகளும் பெருகியுள்ளன. கடந்த பத்தாண்டுகளில் மாணவர்களின் எண்ணிக்கை ஆசிரியர் பயிற்சிக் கூடங்களில் 50 சதவீதம் உயர்ந்

துள்ளது. சென்னை அரசாங்கம் ஆண்டுதோறும் கல்வித்துறையில், செலவை உயர்த்தி வருவது நல்லதொரு அறிகுறியாகும். 1963-64-ல் கல்விக்கான செலவு மொத்தச்செலவில் 22·8 சதவீதமாக உயர்ந்துள்ளது.

தர வளர்ச்சியின் அவசியம்

தமிழ் நாட்டில் சிறந்த அளவில் கல்வி வளர்ச்சி ஏற்பட்டுள்ளதைக் கண் கூடாகக் காண்கிறோம். இன்று பள்ளிகளில் தர வளர்ச்சி ஏற்படுவதன் அவசியத்தை உணர்வதற்கான நேரம் நெருங்கிவிட்டது. இது மத்திய அரசாங்கம் மற்ற அரசாங்கத்தின் கல்வித் துறையின் கவனத்தைச் சில காலமாகக் கவர்ந்தது. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் பயிற்சியை ஆய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழு இப் பிரச்சினையை ஆராய்ந்து முதல் நடவடிக்கையாக மாநிலக் கல்வி நிறுவனம் ஒன்றை ஒவ்வொரு அரசாங்கத்திலும் நிறுவமுடிவு செய்தது.

கல்வி மட்டுமல்லாமல் நல்ல கல்வியைப் பெறுவது சுதந்திர ஜனநாயகக் குடியரசின் பிறப்புரிமை என்று எல்லா முனைகளிலும் உணரப்படுகிறது. கல்வியின் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டும். பள்ளிகளில் எண்ணிக்கை உயர்ந்து கல்வியின் தரம் தாழ்வதில் லாபமொன்றுமில்லை. இத்துறையில் ஈடுபட்டுள்ள மக்கள் புதிய மனோநிலைகளையும் திறமைகளையும் ஏற்று, தரத்தை உயர்த்த வேண்டும். பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்த வழிதுறைகளை, அவர்கள் காணவேண்டும். அளவும் தரமும் ஒத்து இயங்கவேண்டும்.

தமிழ் நாட்டுக் கல்வி நிறுவனம்

இந் நோக்கத்துடன் இம்மாநிலக் கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டது; இக்கல்வி நிறுவனம் ஒரு புதிய பரிசோதனையாகும். கல்வியின் தரத்தை உயர்த்துவது இதன் அடிப்படைக் கடமையாகும். இந்தியக் கல்விக் கமிஷனின் செயலாளர் திருவாளர் ஜே. பி. நாயக் கூறியது :—

"கல்வித் தரத்தினைச் சீர்திருத்தி உயர்த்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட மாநிலக் கல்வி நிறுவனம் கல்வித் துறையில் ஒரு தனிப் பிரிவாகும்."

மாநிலக் கல்வி நிறுவனத்தின் நோக்கங்கள்

கீழே கொடுக்கப்பட்டுள்ளவை, தமிழ் நாட்டுக் கல்வி நிறுவனத்தின் நோக்கங்களாகும் :—

(1) ஆரம்பப் பள்ளிகளைக் கண் காணிக்கும் தணிக்கை அதிகாரிகளுக்கும், பயிற்சிப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் தமது வேலைக்காலத்தில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மூன்றுமாத காலப் பயிற்சி அளிப்பது.

(2) ஆரம்ப கல்விப் பிரச்னைகள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் பயிற்சி, சிறப்பாக ஆதாரப் பள்ளிப் பாடங்களைக் கற்பித்தல், இது போன்றனவற்றை ஆய்ந்தறிதல்.

(3) ஆசிரியர் பயிற்சிப் பள்ளி களில் விஸ்தரிப்பு வேலை.

(4) ஆரம்பப் பள்ளிகளுக்கும் ஆசிரியர்களுக்குமான நூல்களை, வெளியிடுதல் (போதனை முறைப் புத்தகங்களைச் சேர்த்து).

(5) பயிற்சிப் பள்ளி ஆசிரியர் களுக்கும் ஆரம்பக் கல்வி சம்பந் தப்பட்ட தணிக்கை அதிகாரி களுக்கும் வேலையில் சேரும் பொழுது புதிய பயிற்சி அளித் தல்.

(6) ஆசிரியர் பயிற்சிப் பள்ளி களில் விஸ்தரிப்பு வேலையை ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுடன் தொடர்புபடுத்துதல்.

வகிக்கும் பாகமும் ஆற்றலும் கடமைகளும்

கல்வி நிறுவனங்களின் முதல் வர்களும், துணை முதல்வர்களும் 1964-ல் புது டில்லியில் நடத் திய ஆய்வுக் கூடத்தில் மாநிலக் கல்வி நிறுவனத்தின் கடமை களைப் பின்வருமாறு வரையறுத் துள்ளனர் :—

முதல் முதலாக நியமிக்கப் பட்ட மேற் பார்வையாளர்களுக் கும் ஆசிரியர்களின் பயிற்சி யாளர்களுக்கும் சிறந்த பயிற்சி யளித்தல்.

ஆரம்பப் பள்ளிகளைக் கண் காணிக்கும் தணிக்கை அதிகாரி களுக்கும், ஆசிரியர்களின் பயிற்சியாளருக்கும் எப்போதும் கல்வித்துறையின் கருத்தின்படி ஐந்தாண்டுக்கு ஒருமுறை மூன்று மாதக் கல்விப் பயிற்சி அளித்தல்.

காலந்தோறும் மாவட்டக் கல்வி அதிகாரிகளும், மேலதி காரிகளும் ஒன்று கூடுவதற்கான பெரிய கூட்டங்களையும், சிறிய மன்றங்களையும் கூட்டுவித்தல் (ஆண்டிற்கொரு முறையாவது இவ்வாறு கூடுதல் வேண்டும்.)

ஸ்தல ஸ்தாபனங்களின் அர சுச்சார்பற்ற அதிகாரிகளுக்கும், இத்தகைய பெரிய கூட்டங்களை யும் கருத்தரங்குகளையும் கூட்டு வித்தல்.

ஆரம்பப் பள்ளியின் அருகி லேயே விஸ்தரிப்பு சேவை மையங்களை நிறுவுதல்; கண்கா ணித்தல்.

பயிற்சி நிலையங்களில் ஆரம் பப்பள்ளி ஆசிரியர்களுக்கான விஸ்தரிப்பு சேவையைத்தோற்று வித்தல்.

மாநிலக் கல்வி நிறுவனத்தின் அலுவலர்கள் மூலமாகவும், மற்ற கல்வி நிலையங்களின் மூலமாகவும் ஆராய்ச்சிகளை நடத்தல்.

காலந்தோறும் கல்வித் துறை யின் கருத்தின்படி ஆசிரியர் பயிற்சித் திட்டத்தைச் சீர்திருத் துதல். சிறப்பாக மத்திய கல்வித் துறையால் திட்டமிடப்படும் ராஜ் யக் குழுக்களை, அல்லது ஆசிரி யர் பயிற்சிக் குழுவை நிறுவுதல்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தரத்தை உயர்த்தவும் கடிதப் போக்குவரத்து மூலமான பயிற்சி அளித்தல்.

கல்வியின் தொடர்பான நூல் களை வெளியிடுதல்.

காலந்தோறும் இராஜ்யக் கல்வித் துறையால் கொண்டுவரப் படும் கல்வித் திட்டங்களை மதிப்பிடுதல்.

பாட புத்தகங்களை மாற்றியமைத்தலிலும் அவற்றின் தரத்தை உயர்த்துதலிலும் உதவுதல்.

கல்வியை வளர்க்க ஏற்ற பரிசோதனைகளை நடத்துதல்.

பாடத் திட்டங்களையும் போதனை முறைகளையும் நன்கு விருத்திசெய்ய புதிய சாதனங்களைக் கண்டுபிடித்தல்.

கல்வி வளர்ச்சியின் அவசியத்தையும், கல்வித் தரத்தின் இன்றியமையாமையையும் பொது மக்களுக்கு உணர்த்துதல்.

கல்வித் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றுவதில் கல்வித்துறையோடு ஒத்துழைத்தல்.

தமிழ் நாட்டுக் கல்வி நிறுவனத்தின் தலை நோக்கங்கள் 1) ஆராய்ச்சி, 2) வேலை காலத்திலும் பயிற்சி, 3) விரிவுபடுத்துதல், 4) நூல்களை வெளியிடுதல்.

மேற்பார்வை அபிவிருத்தியும் நிர்வாக அபிவிருத்தியும்

கண்காணிப்பையும், தணிக்கையையும் கல்வி நிர்வாகத்தையும் சிறந்த முறையில் விருத்தி செய்வதே தமிழ் நாட்டுக் கல்வி நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். தணிக்கை அதிகாரிகளும், தம்முடைய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற சிறப்புப்பயிற்சி பெறுவது அவசியமாகும். அவர்களுடைய மனோ நிலையையும் முறைகளையும் மாற்றிக் கொள்வது அவசியமாகும். திறமையை வளர்ப்பதற்கான ஆராய்ச்சிகளையும் புத்தகங்களை வெளியிடுதலையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆசிரியர் கல்வி அபிவிருத்தி

பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்த ஆசிரியர்களின் தரத்தை உயர்த்த வேண்டும். ஆதலால் ஆசிரியர் கல்வித் தர உயர்வும் மிகவும் அவசியமாகும். இது இக் கல்வி நிறுவனத்தின் பொறுப்பாகும். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்காகப் பயிற்சிக் கூடங்களில் அளித்த வசதிகள், பின்பற்றிய முறைகள், செய்த மதிப்பீடு, நிறைவேற்றிய செயல்கள் முதலியவற்றை ஆராய வேண்டும். ஆசிரியர்களின் பயிற்சியாளர்களுக்குத் தமது ஊழிய காலத்திலேயே பயிற்சி அளிக்கவேண்டும். விஸ்தரிப்பு வேலையும் ஆசிரியப் பயிற்சிகளுக்கான நூல்களைக் குறித்துப் பரிசோதனை வேலையும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தரமான கல்வி புகட்டுதல்

ஆரம்பப் பள்ளிகளில் தரமான கல்வியைப் புகட்டுவது மாநிலக் கல்வி நிறுவனத்தின் முக்கிய கடமையாகும். ஆரம்பப்பள்ளிகளில் வீணாவதையும் தேக்கத்தையும் குறைத்தல் வேண்டும். ஆசிரியர்களுக்கான கை புத்தகங்

களை வெளியிட வேண்டும். இக் கல்வி நிறுவனம் பாட திட்டத்தையும், போதனு முறைகளையும் பாடப் புத்தகங்களையும் நன்கு விருத்தி செய்வதில் ஈடுபடும்.

ஆராய்ச்சியும் மதிப்பிடுதலும்

திறமைமிக்க ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும். ஆராய்ச்சி வேலை செயல் ஆற்றல் கொண்டதாகவும், விரைவில் பயன்தரக் கூடியதாகவும் அமைய வேண்டும். புள்ளி விவரங்களும் தேவையான செய்திகளும் இங்கு எக்காலத்தும் கிடைக்கும். பொது மக்களை அறிவுறுத்த பொது மக்கள் தொடர்பு அலுவலகமாகவும் இக் கல்வி நிறுவனம் விளங்கும். செய்திக் கடிதங்களையும் இதழ்களையும் ஆசிரியர்களுக்காக அச்சிட முயற்சி செய்ய வேண்டும்.

வளர்ச்சிப் பிரிவு

உயர்தரக் கல்வியின் வளர்ச்சிப் பிரிவே தமிழ் நாட்டுக் கல்வி நிறுவனமாகும். கல்வித் துறையின் முன்னேற்றப் பிரிவு எனவும் இதைக் கருதலாம்; பொறியியல் பல மருத்துவத்துறைகளில் உள்ளதைப் போலவே கல்வித் துறையிலும் வளர்ச்சிப் பிரிவு அவசியமானது. இக் கல்வி நிறுவனத்திற்கு உயர்ந்த நிலையையும் பெருமையையும் தரவேண்டும். உயர்நிலைப் பள்ளிக் கல்வி இயக்குநரைத் தலைவராகவும் நிறுவனத்தின் முதல்வரைச் செயலாளராகவும் மத்திய கல்வித் துறை என். ஸி. இ. ஆர். டி. பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு குழு திட்டங்களை வகுப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் வழிகாட்டும் செவி, பார்வை, புணர்வு, கல்விப்பிரிவு, விஞ்ஞான நிலையம் விஸ்தரிப்பு சேவை அதிகாரிகள் ஆராய்ச்சிப் பிரிவு, தொழில் விளக்கப் பிரிவு, மதிப்பீடு அதிகாரிகள் முதலிய பிரிவுகளும் அதிகாரிகளும் இக்கல்வி நிறுவனத்தின் கீழ்ப் பணியாற்றுமாறு செய்ய வேண்டும். தேசம் முழுவதும் பரவியுள்ள இயக்கத்தில் தமிழ் நாட்டுக் கல்வி நிறுவனம் முக்கியமாகும். இன்று தேவைப்படுவது அளவு அல்ல: தரமேயாகும். மிக்க ஆர்வத்துடனும் ஆழ்ந்த நம்பிக்கையுடனும் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வி நிறுவனம் வாய்ப்பும் வசதியும் பெறின் தன்னிடத்தில் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்று மென்பதில் ஐயமில்லை

புதுடில்லியில் முதல்வர்கள் ஆய்வுக் கூட்டத்தில் மத்திய கல்வி அமைச்சர் திரு. எம். சி. சாக்ளா கூறியதாவது,

"மக்களிடையே கல்விக்கான அறிவுப் பசி ஏற்பட்டுள்ளதால், எதிர் காலத்தில் மேலும் அபிவிருத்தி ஏற்படக் கூடும். தற்போதைய சந்தர்ப்பத்தில் அதிகமாகத் தேவைப்படுவது தரத்தின் உயர்வேயாகும். இந்நோக்கத்துடன் தான் மாநிலக் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

—தினமணி

செகண்டரி கல்விப் பாடத் திட்டம் சீரமைப்பு

அரசாங்கம் பரிசீலிப்பதாக முதல் அமைச்சர் தகவல்

கல்வியின் தரத்தை மேம்படுத்துவது நோக்கம் என்கிறார்

செகண்டரிக் கல்வியின் தரத்தை உயர்த்தும்பொருட்டு, செகண்டரிப் பள்ளிகளின் பாடத் திட்டத்தை சீரமைக்கும் பிரச்னையை அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறதென்று முதல் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் கூறினார்.

முதல் பிராந்திய பெற்றோர் ஆசிரியர் ஒத்துழைப்பு கருத்தரங்கைத் துவக்கி வைத்து முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் பேசினார்.

சென்னை ராஜ்ய பெற்றோர் சங்கத் தலைவரான திருமதி. சரோஜினி வரதப்பன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

கல்வியின் தரத்தைக் குறிப்பிட்டு திரு. பக்தவத்சலம் பேசியதன் கருத்து பின் வருமாறு;

கல்வியின் தரத்தைப்பற்றிப் பொதுவாகக் குறை கூறப்படுகிறது. அதை அலட்சியம் செய்வதற்கில்லை. கல்வியைப் பெருமளவில் விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறோம். எனவே கல்வியின் தரத்தை அலட்சியம் செய்யலாகாது.

இந்நாளில் மாணவர்கள் பண்டை இலக்கியங்களிலும் முழு அறிவைப்படைத்தவர்களாக இருக்கவில்லை. வருங்கால விஞ்ஞான தொழில் நுட்ப சகாப்தத்திற்குரிய வகையில் நவீன கல்வியிலும் முழுத்தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கவில்லை. இது வருந்தத்தக்கதாகும். மாணவர்கள் பண்டைய இலக்கியங்களில் மட்டுமின்றி, நவீன கல்வியிலும் முழுத் திறமையுடன் விளங்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

புகு முக வகுப்பில் விஞ்ஞான பாடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் மாணவரில் பாதிபேர் கூட வெற்றியுடன் தேறிவருவதில்லை. அகில இந்தியப் பரிட்சைகளில் முன்பெல்லாம் சென்னையிலிருந்து செல்லும் மாணவர்கள் பிரமாதமாகத் தேறி வருவார்கள். இப்போது சென்னை மாணவர்கள் அம்மாதிரி இல்லை என்று குறை கூறுகிறார்கள்.

அறிவுக் கூர்மையில் தம் ராஜ்யமாணவர்கள் எவருக்கும் பின்னடைந்தவர்கள் அல்ல. இப்போது வேண்டுவதெல்லாம் அவர்களுடைய அறிவுக்கூர்மையைப்

பக்குவப்படுத்தி வளர்க்கக்கூடிய நல்ல கல்வி முறையை வகுத்துக் கொடுப்பதேயாகும்.

கல்வியின் தரத்தை அபிவிருத்தி செய்யவும் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டவும், சோதனைக் கூடங்கள் அமைக்கவும், மற்றத் தளவாடங்களை வாங்கவும் பெற்றோர், ஆசிரியர் சங்கம் மிகவும் உதவியாக இருக்கும் என்று திரு. பக்தவத்சலம் கூறினார். விஞ்ஞானம், தொழில் நுட்பம் முதலியவற்றைக் குழந்தைகளுக்கு ஆரம்பத்திலிருந்து கதை போலப் போதிக்க வேண்டும் என்றும், ஆரம்பப் பாடசாலைகளிலிருந்தே இந்தப் பாடங்களைப் போதிக்க வேண்டும் என்றும், இதனால் மற்றப் பாடங்களைப் படிக்க வேண்டாம் என்று தான் சொல்லவில்லை என்றும் திரு. பக்தவத்சலம் கூறினார்.

பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்புத் தேவைக்கு ஏற்பக் கல்விமுறை மாற வேண்டும்

திட்டக்குழு உறுப்பினர் கருத்து

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கும், பாதுகாப்புத் தேவைகளுக்கும் ஏற்ப தற்போதைய கல்வி முறையை முடுக்க வேண்டும் என்று திட்டக் கமிஷன் மெம்பர் பேராசிரியர் எம். எஸ். தாக்கர் கூறினார்.

மகாராஜா சாயாஜி ராவ் சாவகலாசாலையின் 18—வது பட்டமளிப்பு விழா உரையை அவர் நிகழ்த்தினார். பல்வேறு துறைகளில் தேவைப்படும் தொழில் நிபுணர்களின் தேவைகளுக்கு ஏற்பநமது உயர்தரக் கல்வி பூர்ணமாக முடுக்கப்படவில்லை. விண்வெளியுலகத்தின் தேவைகளை அதிக அளவு பூர்த்தி செய்யும் ரீதியில் கல்வி முறையைச் சீரமைப்பது பற்றி நாம் முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த 15 ஆண்டுகளில் நமது நாட்டில் கல்வி பெருமளவு விரிவடைந்துள்ளது; மாறுதலுமடைந்துள்ளது. அப்படியிருந்தும் தொழில் நுட்பமறிந்த பட்டதாரிகள் அல்லது விஞ்ஞான பட்டதாரிகள் எண்ணிக்கை இன்னமும் குறையாகவே இருந்து வருகிறது. இத்துறையில் இதர பல அந்நிய நாடுகளுடன் ஒப்பிடும்போது நம் நாடு மிக்வும் பின் தங்கியுள்ளது.

இந்தியாவில் ஒவ்வொரு லட்சம் ஜனத் தொகைக்கும் தயாராகும் விஞ்ஞானப் பட்டதாரி ஒன்றுக்கும் குறைவு. யூகோவில் 5·15; இத்தாலியில் 5·19; பிரிட்டனில் 10·38 அமெரிக்காவில் 22·29;

இந்தியாவில் ஒவ்வொரு லட்சம் ஜனத் தொகைக்கும் தயாராகும் எஞ்சினீயரிங் பட்டதாரிகள் டிப்ளமோ வைத்திருப்போர் 4 மட்டுமே யாகும்; பிரிட்டனில் 15; ஜெர்மனியில் 25; ஆஸ்டிரியாவில் 35 என்று திரு. தாக்கர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

பெண்கள் உயர்நிலைப்பள்ளிகளில் ஆண்கள் நியமனம் பற்றித் தாக்கீது

மேல் சபையில் அமைச்சர் அறிக்கை :

பெண்களுக்காக மட்டும் உள்ள பள்ளிகளில் ஆசிரியர்களாக ஆண்களை நியமிக்கக் கூடாது என்று செகண்டரி கல்வி டைரக்டர் தாக்கீது பிறப்பித்திருக்கிறார்.

அவ்வாறு நியமிக்க வேண்டிய அத்யாவசிய நிலை இருந்தால் ஆசிரியரின் வயது நியமனத் தேதி யன்று 35 வயதுக்குக் குறைவாக இருக்கலாகாது.

நியமனத் தேதியிலிருந்து கோடை விடுமுறைக்காகப் பள்ளி மூடப்படும் தேதி வரையுள்ள காலத்திற்கு மேற்படாமல் தற்காலிக ஏற்பாடாக ஆண்கள் நியமனம் அனுமதிக்கப்படும்.

தற்காலிக நியமனத்திற்குக் கூட நிர்வாகத்தினர் சாத்தியமான அளவு ஆசிரியர் பயிற்சி பெறாத பெண்களுக்குச் சலுகை காட்ட வேண்டும்.

முக்கிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்த போதிலும், ஆசிரியை பயிற்சி நிலையங்களையும், வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களையும் விசாரித்தும் தகுதியுள்ள ஆசிரியைகள் கிடைக்காவிடில், ஆண்களை ஆசிரியர்களாக நியமிக்க செகண்டரி கல்வி டைரக்டரின் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

டாக்டர் திரு. அ. சிதம்பரநாதன் மேல் சபையில் கொண்டுவந்த கவன ஈர்ப்புப் பிரேரணைக்கு தொழில் மந்திரி திரு. ஆர். வெங்கடராமன் பதிலளிக்கையில் மேற்கண்ட அறிக்கையை விடுத்தார்.

சென்ற ஆண்டு இலாகாவின் அனுமதியின்றி உயர் நிலைப் பள்ளிகளில் ஆண்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட அநேக சம்பவங்கள் டைரக்டரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் தகுதியின் பேரில் அவை கவனிக்கப்பட்டதாகவும் மந்திரி சொன்னார்.

மேற்கண்ட தாக்கீதுகளின் விளைவாகப் பெண்கள் உயர் நிலைப் பள்ளிகளின் நிர்வாகத்தினர் தங்களது பள்ளிகளில் நியமித்துள்ள ஆண்களுக்கு வேலை நீக்க நோட்டீஸ் பிறப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே நீண்ட கால சர்வீஸ் உள்ள ஆண்

களை வேலையிலிருந்து நீக்க வேண்டாம் என்றும், அவர்களுக்கு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் வேலை கிடைக்கும் வரை ஒவ்வொரு ஆண்டும் டைரக்டரின் அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்குமாறும் பெண்கள் உயர்நிலைப்பள்ளிகளின் நிர்வாகத்தினருக்கு தாக்கீதுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

பெண்கள் பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஆண்கள் உத்தியோகத்தில் நீடிப்பதை தடை செய்தோ அன்றி பெண்கள் நியமனத்தை ஒழுங்குபடுத்தவோ சர்க்கார் சமீபத்தில் உத்தரவு எதையும் பிறப்பிக்கவில்லை. எனினும் மேற்கண்ட தாக்கீதுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன என்று மந்திரி மேலும் கூறினர்.

சென்னை பப்ளிக் சர்வீஸ் பரீட்சைகளைத் தமிழிலும் எழுத வசதி

சர்க்கார் பரிசீலனை செய்வதாக முதல் அமைச்சர் தகவல்

சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷன், தமிழில் பரீட்சைகளை நடத்துவதற்கு வழி செய்யும் ஒரு திட்டத்தைப் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகவும், இந்தத் திட்டம் சம்பந்தமான விவரங்கள் இன்னும் தயாராக வில்லை என்றும் அசெம்பிளியில் முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினர்.

ஒரு கேள்விக்குப் பதில் கூறுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பப்ளிக் சர்விஸ் பரீட்சைகளை ஆங்கிலத்துடன் இஷ்டப்பட்டால், தமிழிலும் எழுதுவதற்கு வழி செய்வதுதான் திட்டத்தின் நோக்கம் என்று அவர் கூறினர்.

மத்திய பப்ளிக் சர்வீஸ் பரீட்சைகளைத் தமிழில் எழுத வேண்டும் என்று சர்க்கார் வலியுறுத்துமா என்று ஓர் உறுப்பினர் கேட்டார்.

முதன் மந்திரி பின் வருமாறு பதில் கூறினர் :—

"மத்திய பப்ளிக் சர்வீஸ் பரீட்சைகளைத் தமிழில் மாத்திரம் எழுத வழி செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. பரீட்சைகளை பிராந்திய மொழிகள் அனைத்திலும் நடத்துவதுபற்றி மத்திய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஆலோசனை செய்து வருகிறது என்பது மெம்பர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

புது பள்ளிகளைத் திறக்கும் விஷயம்

சர்க்கார் விளக்கம்

தற்போதுள்ள நடைமுறை உத்தரவுகள்படி (அதாவது கல்வி, பொது சுகாதாரத் துறையின் 11-4-1961 அரசாங்க ஆணை எண். 790 மற்றும் 31-3-62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 744 பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் புதிதாக ஆரம்பப் பள்ளிக்கூடங்களைத் திறக்கவேண்டுமானால், அவ்வாறு திறக்கவிருக்கும் இடங்களிலுள்ள மக்கள் தொகை 300-க்குக் குறையாமலும், அங்கு ஒரு மைல் சுற்றளவுக்கு வேறெந்தப் பள்ளிக்கூடமும் இல்லாமலும், இருக்க வேண்டும். மேற்கண்ட இரு நிபந்தனைகளையும் திருப்தி செய்யாத இடங்களில், புதிதாக ஆரம்பப் பள்ளிகளை, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் திறக்க வேண்டுமானால், கல்வித் துறையின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இது தவிர, புதிதாகப் பள்ளிகளைத் திறத்தல்;; மேலும் வகுப்புகளைஅதிகரித்தல், ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதாசாரப்படி, மேலும் ஆசிரியர்களை நியமித்தல் போன்ற விஷயங்களைத் தீர்மானிக்க செகண்டரி கல்வி நெறியாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இவை பற்றி செகண்டரி கல்வி நெறியாளர்முடிவு செய்த பின், அந்த முடிவுகளை மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துவார். அவர் புதிய பள்ளிக்கூடங்கள் அல்லது கூடுதலான வகுப்புகளைத் திறக்க அனுமதி தந்து, சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு ஆசிரியர்களை ஒதுக்குவார்.

மேற்கண்டவாறு அதிகாரங்கள் எல்லாம் கல்வித்துறையினரிடமே குவிந்து இருப்பதாகவும், தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் (65)0) பிரிவின் கீழ், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு இது விஷயத்தில் அளிக்கப்பட்ட அதிகாரங்கள் எடுபட்டுவிட்டன என்றும் அரசாங்கத்திற்கு முறையீடுகள் வந்துள்ளன.

ஆகவே, இனி பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், கல்வித் துறையின் முன் அனுமதியின்றியே, புதிதாக ஆரம்பப் பள்ளிக்கூடங்களைத் திறக்கலாம் என்று, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு, அரசாங்கம் அதிகாரம் அளிக்கிறது. ஆனால் பள்ளிக்கூடங்களைத் துவக்க இருக்கும் இடங்களில், மக்கள் தொகை 300-க்குக் குறையில்லாமலும், அங்கு ஒரு மைல் சுற்றளவுக்குப் பள்ளிக்கூடங்கள் இல்லாமலும் இருக்கவேண்டும். இதற்குட்பட்டு, பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டபின், மூன்று மாதத்திற்குள், கல்வித் துறையின் அனுமதியை பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் பெற்றுவிட வேண்டும். இது தவிர, மற்ற எல்லா விஷயங்களிலும், புதிதாகப் பள்ளிக் கூடங்களைத் திறக்க, பஞ்சாயத்து யூனியன் மன்றம், செகண்டரி கல்வி நெறியாளரை கலந்தாலோசித்துக்கொள்ள வேண்டும்.

பாரதியின் உவமைகள்

பேராசிரியர் கே. எஸ். நாகராஜன்

தமிழ்க் கவிதையின் நறுமணம் வாடிப்போய், செய்யுள்கள் இயற்றுவதைச் செப்பிடு வித்தை போல் செய்து தமிழ்ப் புலவர்கள் திண்டாடிக் கொண்டிருந்த சமயம் பாரதி தோன்றினன்; உண்மைக் கவிதையின் ஒளியைத் தமிழகம் முழுவதும் வீசினன்; எளிய நடையைச் சிறந்த கவிதைக்கு அழகு என்று நிரூபித்துக் காட்டினன். ஆகவே, அவன் ஒரு பொருளைத் தெளிவாக விளக்க முற்படும்போது எளிய உவமைகளையே கையாள்கிறன். சொல் அளவிலே எளிமை இருந்தாலும், அந்த உவமைகளிலே மிகுந்த அழகும், ஆழ்ந்த கருத்துக்களும் இருக்கும்.

ஆரமுதும் கள்ளும்

சிறந்தவகை உணவைக் கொள்ள ஆசையுடன் காத்திருக்கிறன் ஒருவன். அவனிடம் கள்ளைக் கொண்டு போய்க் கொடுத்தால் குடிப்பானு? அதில் கவனத்தையேனும் செலுத்துவானு? இல்லையே! அது போன்றே வீர சுதந்திரம் வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் நிற்பவர் வேறு எதையும் ஒப்புக்கொள்ள மாட்டார். பதவியோ, பொருளோ அவருடைய நாட்டத்தைக் கவர முடியாது. "வீர சுதந்திரம் வேண்டி நின்றூர் பின்னர் வேறென்று கொள்வாரோ? என்றும் ஆரமுதுண்ணுதற்காசை கொண்டார் கள்ளில் அறிவைச் செலுத்துவாரோ?"

கண்ணை விற்று சித்திரமா?

கண்ணை விற்றுவிட்டு அதனல் வரும் பொருளைக்கொண்டு ஒருவன் அழகான சித்திரம் வாங்குகிறன். அதனல் அவனுக்கு என்ன பயன்? சித்திரம் உண்டு; ஆனல் அதைக் காணக் கண் இல்லையே! அவனைக் கண்டு உலகம் நகையாடும், பித்தன் என்று தூற்றும். உடனடியாகக் கிடைக்கும் சில இன்பங்களுக்கு ஆசைப்பட்டு, நாட்டின் சுதந்திரத்தை மறந்தால் அவனும் ஒரு பித்தனே. "கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினல் கைகொட்டிச் சிரியாரோ?"

இரணியன் போல

ருஷிய நாட்டில் ஜார் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவருடைய ஆட்சி எப்படியிருந்தது என்று வருணிக்க முற்படுகின்றன் கவிஞன். தருமந் தன்னைத் திரணம் எனக் கருதிவிட்டான் ஜார் மூடன். ஆகவே பொய், சூது, தீமை, எல்லாம் காட்டில் பாம்புகள் போல் மலிந்து வளர்ந்து ஓங்கின அந்நாட்டில். இம்மென்றூல் சிறைவாசம், ஏனென்றூல் வனவாசம். இதையெல்லாம் மிகச்சுருக்கமாக ஓர் உவமையின் மூலம்

கூறுகின்றான் கவிஞன். "இரணியன் போல அரசாண்டான் கொடுங்கோலன் ஜாரெனும் பேரிசைந்த பாவி" இதனால், கடவுள் நம்பிக்கை இல்லாத தருமத்தைக் கைவிட்ட, அநீதி மலிந்த துன்பம் நிறைந்த ருஷிய நாட்டை தத்ரூபமாக நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்திவிடுகிறான் பாரதி. கடவுள் உணர்வு இல்லாத சமுதாயத்தில் அன்பு ஏது? அறம் ஏது? துன்பமே, ஒரு நாளும் இன்பமில்லை.

புழுதியில் நல்லதோர் வீணை

கவிஞனுக்கு சுடர் மிகும் அறிவை நிரம்பக் கொடுத்திருக்கிறான் கடவுள். ஆனால் அவ்வறிவால் உலகுக்கு நன்மை தேடித் தர அவனுக்கு வலிமையும் வேண்டுமல்லவா? அதைத் தரவில்லையாம் கடவுள். ஆகவே, கேட்கிறான் தன் இஷ்ட தெய்வமான பராசக்தியை நோக்கி: "எனைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்; வல்லமை தாராயோ, இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே! சொல்லடி, சிவசக்தி!" வலிமை இல்லாமல் அறிவை மட்டும் உடைய தன் நிலைமையை விளக்குகிறான் ஓர் உவமையின் மூலம். ஒரு நல்ல வீணையைச் செய்து அதைத் தெருவில் உள்ள புழுதி மண்ணிலே போட்டு வைத்தால், அதனால் யாருக்கு என்ன நன்மை? வீணையின் பெருமை அது எழுப்பும் இசையில் அதைக் கையாளும் கலைஞன் திறமையில் அல்லவா இருக்கிறது? அதே போன்று, என்னுள் இருக்கும் அறிவுச் சுடரைப் பயன்படுத்தி, உலகத்துக்கு நன்மை செய்ய எனக்கு ஆற்றலைக் கொடு' என்று உரிமையோடு கேட்டு, சொல்லடி பதில் என்று மிரட்டவும் செய்கிறான் கவிஞன்.

வெள்ளைநிறப் பூனைக்கு பலநிறக் குட்டிகள்

உலகில் பல நிறத்தவரும் வருகின்றனர். ஆனால் அவர்கள் வேறு பட்டவர் ஆகார். அவர்களுடைய எண்ணங்களும், செயல்களும் ஒரு முகப்பட்டனவே. இதை விளக்க ஒரு சிறு கதை சொல்கிறான் பாரதி. வெள்ளை நிறத்துப் பூனை ஒன்று எங்கள் வீட்டில் வளருது. அப்பூனைக் குட்டிகள் போட்டது. ஒவ்வொன்றும் ஒரு நிறமாய் இருந்தது. சாம்பல் நிறம் ஒரு குட்டி, வெள்ளைப் பாலின் நிறம் ஒரு குட்டி, கரு நிறம் ஒரு குட்டி, பாம்பு நிறம் ஒரு குட்டி, எந்த நிறம் இருந்தாலும் அவை ஒத்த மதிப்புள்ளவை தானே? ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள் தானே? இந்த நிறம் சிறிது என்றும், இந்த நிறம் பெரியது என்றும் சொல்லலாமா? "வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் அதில் மானுடர் வேற்றுமை இல்லை. எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் இங்கு யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்; நிகர் என்று கொட்டு முரசே. இந்த நீணிலம் வாழ்பவரெல்லாம்."

விமானம் போன்ற நல்ல மனம்

அழகு என்னும் தத்துவத்தை உணர்ந்த கவிஞன் கற்பனை என்னும் சிறகுகளின் உதவியால் பிரபஞ்சம் முழுவதும் உலவித் திரிகிறான். அவனுடைய உயர்ந்த நிலையை வருணிக்கிறான் பாரதி. பன்றிக்கு மண், சேறு என்றால் தனி மகிழ்ச்சி. அதில் படுத்துப் புரளுவதிலே அதற்கு ஓர் அலாதியான இன்பம். அப்படித் தான் வாழ்கிறார்கள் பெரும்பான்மையான மக்கள். உலக துன்பங்களிலே, கோர உருவங்களிலே, ஏற்றத் தாழ்வு மனப் பான்மைகளிலே உழல்கிறார்கள். ஆனால் ஒரு சிலர் அவ்வாறின்றி மண்ணைவிட்டு உயரக் கிளம்புகிறார்கள். விண்ணிலே விரைந்து சஞ்சரிக்கிறார்கள். வெற்றியை நாடிச் செல்கிறார்கள். அதைப் பெற்றும் விடுகிறார்கள். சாதாரண மனிதர்களுடைய மனம் தெருவில் செல்லும் மாட்டு வண்டியைப் போன்றது. உண்மைக் கவிஞர்கள், ஞானிகள் ஆகியோருடைய மனம் விமானத்தைப் போன்றது. ஒரு தனிப்பண்பு சிறப்பு அவர்களுக்கு உண்டு. ஆனால், அதைப் பெற அவர்களுக்குத் தகுதி என்ன? அவர்கள் நல்ல மனம் படைத்தவர்கள். அவ்வளவு தான். எத்தனை உவமைகள் அடுக்கடுக்காய் வருகின்றன. யாவும் எளியவை, ஆனால் பொருள்பொதிந்தவை.

பன்றியைப் போலிங்கு மண்ணி
 டைச் சேற்றில்,
படுத்துப் புரளாதே,
வென்றியை நாடியிவ் வானத்
 தில் ஓட
விரும்பி விரைந்திடுமே;
மூன்றிலில் ஓடுமோர் வண்டி
 யைப் போலன்று
மூன்றுலகுஞ் சூழ்ந்தே
நன்று திரியும் விமானத்தைப்
 போலொரு

தூண்டில் புழு, சுடர் விளக்கு

நல்ல மனம் படைத்தோம். கண்ணனின் மேல் ஆராக் காதல் கொண்டிருக்கிறாள் ஒருத்தி. ஆனால் பல நாட்களாக அவனைக் காணவில்லை. அவள் மனம் துடிக்கிறது. அம்மனத் துடிப்பைச் சரியான படி உணர வேண்டுமா? இதோ பாருங்கள் குளக்கரையில் உட்கார்ந்திருக்கிறான் ஒரு சிறுவன். அவன் ஒரு தூண்டிலை நீரில் போட்டிருக்கிறான் ...... அதோ, சிக்கிக் கொண்டது ஒரு மீன். சிக்கியதும் தான் தெரிகிறது தன் நிலைமை. துடிக்க ஆரம்பிக்கிறது. சிறுவனுக்குப் பக்கத்தில் வெட்ட வெளியில் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. ஒரே சீராக, அமைதியாக அது எரிவதில்லை. காற்று அடிப்பதால் சுடர் துடிக்கிறது. அணைந்து விடும் போலிருக்கிறது. கண்ணனைக் காணாமல் தவிக்கும் பெண்ணின் மன நிலை அம்

மீனின்நிலையைப் போன்றது. இச்சுடரின் நிலையைப் போன்றது. துன்ப அலைகளால் அலைக்கழிக்கப்படுகிறது. இன்னும் சிறிது நேரத்தில் துயர் மேலீட்டால் அது வெடித்துப் போனால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இத்தனைக் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் உள்ளடக்கிப் பாடுகிறான் கவிஞன்.

தூண்டிற் புழுவினைப் போல்-
வெளியே
சுடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக - எனது
நெஞ்சந் துடித்த தடீ!

சினங்கொண்ட சர்ப்பம்

தருமன் ராஜசூய யாகம் செய்கிறான். மூவுலகும் அவனுக்கு மரியாதை செய்கிறது. துரியோதனனுக்கு இது பொறுக்கவில்லை. தன் மாமனான சகுனியுடன் கலந்து ஆலோசிக்கிறான். பின் திருதராஷ்டிரனிடம் செல்கிறான். அரசன் தன் மகனை நோக்கி, 'உனக்கு எவ்விதத்திலும் குறையில்லை. செல்வங்கள், அமைச்சர்கள், குடி, படைகள், பெரும் புகழ் எல்லாவற்றுக்கும் மேலாக பாண்டவச் சோதரர் உனக்கு உண்டு. உனக்கு ஏது துயர்?'' என்று கேட்கிறான். அச்சொற்களைக் கேட்ட துரியன் நெருப்புப் போலக் கோபங்கொண்டான். விஷம் போன்ற தகாத சொற்களை அள்ளி வீசினான். ஆனால் இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அவனுடைய கொடியில் இருப்பது பாம்பு. அவன் உள்ளத்தில் இருப்பதும் பாம்பு. திடீரெனச் சீறி எழுவான். விடம் உமிழ்வான். இக்கருத்துக்களைக் கொண்ட 'பாஞ்சாலி சபதம்' பகுதியைப் பாருங்கள்.

தந்தை வசனஞ் செவியுற்றே-
கொடி
சர்ப்பத்தைக் கொண்டதோர்
கோமகன்
வெந்தழல் போலச் சினங்
கொண்டே-தன்னை
மீறிப் பல சொல் விளம்பி
னான்.

நல்லவர் காப்போன் அல்லவர் தேய்ப்போன்

துரியோதனன் சபைக்கு திரௌபதியை இழுத்துக் கொண்டு வருகிறான் துச்சாதனன். அவள் சேலையைக் களைய உத்தரவிடுகிறான் கர்ணன். துச்சாதனன் எழுந்து அன்னையின் துகிலை உரிதல் உற்றான். வேறு திக்கின்றி கண்ணனை நினைந்து கூவினாள் திரௌபதி. அவள் அணிந்திருந்த துணி புதிதாய் வண்ணப் பொற் சேலைகளாய் வளர்ந்தன. இவ்வதிசய நிகழ்ச்சியை வர்ணிக்கும் பாரதி அடுக்கடுக்காய் உவமைகளைக் கையாள்கிறான். உண்மை அற்றவர்கள் மேன் மேலும் துயர் அடைவதைப் போல, நன்னெறியில் வாழ்வோருடைய புகழ் மேன் மேலும் வளருவதைப் போல, பெண் குலத்தின் கருணை அளவின்றிப் பெருகுவது போல, கடலலைகள்

லையாமல் பொங்கி எழுவது போல, பெருமக்களுடைய செல்வம் ஓயாது பெருகுவது போல, துணி வளர்ந்ததாம். இந்தப் பல பொருள் உவமையின் மூலம் நம் வாழ்க்கைக்கு ஏற்ற நீதிகள் பல வற்றைச் சொல்லாமல் சொல்லி விடுகிறான் கவிஞன். இதுவே காவியம் படைக்கும் கவிஞன் கையாளும் முறை. பொய்யர் துன்புறுவர் என்றோ, நன்னெறி யில் நிற்பவர் புகழ் மேவிடும் என்றோ கூறினால், அது நீதி நூல் மரபாகும். ஒருவன் தன் நண்பனிடம் கூறுவதைப் போலா கும். ஆனால் பொய்யர் துயர் போல் திரௌபதியின் ஆடை வளர்ந்தது என்பது காப்பிய மரபாகும். ஒரு காதலி, தன் இனிய காதற் கிழவனுக்குக் கூறுவதைப் போலாகும். நீதி வெளி வருகிறது - ஆனால் மறை முகமாக உள்ளுறையாக, யாரும், எளிதில் இன்பமுடன் உணரும் வகையில்.

நல்லவர்களுக்கு ஒரு தீங்கும் நேராமல் காத்திடுவான் கண்ணன். அதே சமயத்தில் தீயோ னுக்குக் கொடியோனாய் விளங்கு வான். எவ்வளவு கொடுமை என்று கேட்கிறீர்களா? விஷத் தை விட, நோயை விட, நெருப்பை விடக் கொடியவனாய் இருப்பான் என்கிறான் கவிஞன். நெருப்பு சுட்ட மாத்திரத்தில் துன்பந்தரும். நோய் வதைத்துப் பின் உயிர் கொள்ளும். விஷ மோ விரைவில் கொன்று தீர்க் கும். இவை யாவற்றையும் விடக் கொடியவனாய், மாற முடியுமாம் கருணாமூர்த்தியான கண்ண னுக்கு. கம்சன், சிசுபாலன், தந்தவக்ரன், பூதனை, ஜரா சந்தன், காளிங்கன் ஆகியோ ரைக் கேட்டால் கதை கதை யாச் சொல்வார்களே இதைப் பற்றி.

நல்லவருக்கொரு தீங்கு
நண்ணாது நயமுறக் காத்தி
டுவான் கண்ணன்
அல்லவருக்கு விடத்தினில்,
நேரயில்
அழலினி லுங் கொடியான்."
—"தினமணி"

பொன்மொழி

பிறரது குற்றங்களைப் பற்றி ஒருக்காலும் பேசாதே. அவை எவ்வளவு கெட்டவையாயினும் சரி. அதனால் யாதொரு பய னும் ஒன்றும் விளைவதில்லை. ஒருவனுடைய குற்றங்களைப் பற்றிப் பேசுவதால் அவனுக்கு ஒரு நாளும் உதவி செய்தவ னாகாய். நீ அவனுக்குக் கேடு இழைக்கிறாய். உனக்கும் கேடி ழைத்துக் கொள்கிறாய்.

—விவேகானந்தர்.

இந்தியாவில் மொத்த ராணுவத்தினர் 8·69 லட்சம்

லண்டன் கழக அறிக்கை கூறுகிறது

இந்தியா தனது மத்ய பட்ஜெட்டில் பாதுகாப்புக்காக 4·7 சதவிகிதம் செலவிடுகிறது என்று இங்குள்ள யுத்தமுக்கியத்துவ ஆராய்ச்சிக் கழக ஆண்டு அறிக்கையிலிருந்து தெரிகிறது. பல்வேறு நாடுகளின் பாதுகாப்பு பட்ஜெட்டுகள் அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

அமெரிக்கா தனது மொத்த மத்ய சர்க்கார் செலவுகளில் 53 சதவிகிதம் பாதுகாப்புக்காகச் செலவிடுகிறது. பிரிட்டன் 26 சதவிகிதம்; பிரான்ஸ் 22 சதவிகிதம்; மேற்கு ஜெர்மனி 34 சதவிகிதம்; ஜப்பான் 8·4 சதவிகிதம். இந்தோனேஷியா 39 சதவிகிதம்; இஸ்ரேல் 31 சதவிகிதம்; ரஷ்யா 16 சதவிகிதம்; பாகிஸ்தான் 18 சதவிகிதம்.

பல்வேறு நாடுகளிலுள்ள ராணுவத்தினரின் மொத்த எண்ணிக்கையையும் அறிக்கை குறிப்பிடுகிறது. இந்தியாவில் ராணுவத்தினர் மொத்த எண்ணிக்கை 8·69 லட்சம். உலகிலேயே ராணுவத்தினர் எண்ணிக்கையில் நான்காவது ஸ்தானம்.

ரஷியாவில் மொத்த ராணுவத்தினர் 31·5 லட்சம்; அமெரிக்காவில் 26·6 லட்சம்; இது 30 லட்சமாக உயர விருக்கிறது. சீனா 24·86 லட்சம்; இதில் ராணுவ உடை அணியாத, ஆனால் முறைப்படி ராணுவப் பயிற்சி பெற்ற லட்சக் கணக்கானவர்கள் சேரவில்லை. பிரான்ஸ் 5·57 லட்சம்; பிரிட்டன் 4·4 மேற்கு ஜெர்மெனி 4·38 லட்சம்; பாகிஸ்தான் 1·88 லட்சத்திலிருந்து 2·08 லட்சம்; பாராகூட் ராணுவப்படையினர் 70 ஆயிரம்.

சென்னையில் கடல் நீரைக் குடி நீராக்கும் திட்டம்

அணு மின்சார நிலையத்தின் உதவியுடன் மேற்கொள்ளப் படும்

அணு சக்தியைப் பயன்படுத்தி கடல் நீரைக் குடி நீராக மாற்றும் திட்டம் முதன் முதலாக இந்தியாவிலேயே சென்னை நகரில் அமுலுக்கு வரக் கூடும்.

2 அணு உலைகளுடன் கூடிய அணு மின்சார நிலையத்தின் உதவியால் இவ்வாறு மாற்றப் படும். 400 மெக்காவாட் உற்பத்தி செய்யக் கூடிய இந்த அணு மின்சார நிலையம் 1971 ஆம் வருடத்தில் இயங்கத்தொடங்கலாம். இந்த மின்சார நிலையத்துடன் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் தொழிற்சாலையை இணைப்பதன் சாத்தியக் கூறு குறித்து டிராம்பே அணுசக்தி ஸ்தாபனம் பூர்வாங்க பரிசீலனைகளை நடத்தியுள்ளது.

டிராம்பே அணுசக்தி ஸ்தாபனத்தின் அணு உலை இஞ்சினியரிங் பிரிவின் தலைமை அதிகாரி

யான திரு. வி. என். மெக்கானி, "நியூக்ளியர் இந்தியா" என்ற சஞ்சிகையில் எழுதி யுள்ள ஒரு கட்டுரையில் இவ்வாறு கூறுகிறார். இந்த சஞ்சிகை அணு சக்தி இலாகா வெளியிடுவதாகும்.

இந்தத் திட்டம் குறித்து டிராம்பேயில் மேற்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினர்.

இந்தியாவின் அணுகுண்டு தயாரிக்கும் ஆற்றல்

பிரிட்டிஷ் நிபுணர் தரும் விவரம்

பம்பாய் அருகே டிராம்பேயில் உள்ள கனடா - இந்தியா அணு உலை வருட மொன்றுக்கு இரு அணு குண்டுகளைத் தயாரிக்கும் சக்தி உடையது என்று யுத்த முக்கியத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் 7வது ஆண்டு அறிக்கையில் தரப்பட்டிருக்கும் புள்ளி விவரம் கூறுகிறது.

கழகத்தின் நிபுணர் ஒருவர் "குண்டு பரவவேண்டுமா?" என்ற புத்தக மொன்றை எழுதி வருகிறார். அதிலிருந்து புள்ளி விவரங்கள் அறிக்கையில் தரப்பட்டுள்ளன. அறிக்கையில் காணப்படும் புள்ளி விவரங்களின் முக்கியத்துவத்தை நிபுணர் நிருபர்கள் கூட்டமொன்றில் விளக்கினர்.

இந்நிபுணரின் பெயர் பீட்டன். சாதாரண அல்லது சராசரி அணு குண்டு ஒன்றுக்கு 5 கிலோ கிராம் புளுடோனியம் தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒரு கிலோ கிராம் புளுடோனியம் கிடைக்க 4 தெர்மல் மெகாவாட் மின்சாரம் தேவை. இந்தக் கணக்கின் அடிப்படையில் மதிப்பிட்டதில் இந்தியாவின் தற்போதைய அணு உலையை அணு ஆயுதங்களைத் தயாரிப்பதில் ஈடுபடுத்தினால் வருட மொன்றுக்கு இரண்டு அணு குண்டுகள் வீதம் தயாரிக்க முடியும் என்று தெரிகிறது.

மின்சார அணு உலைகள் பற்றிய அட்டவணையில் 4 புதிய அணு உலைகளை இந்தியா நிறுவி வருகிறது அல்லது நிறுவ உத்தேசித்துள்ளது என்று குறிப்பிடுகிறது. 380 மெகாவாட் சக்தியுள்ள தாராபூர் நிலையம் ஆண்டு ஒன்றுக்கு 76 குண்டுகளைத் தயாரிக்க முடியும். 200 மெகாவாட் சக்தியுள்ள ராஜஸ்தான் அணு உலை வருடத்திற்கு 40 குண்டுகளைத் தயாரிப்பது சாத்தியம். 400 மெகாவாட் சக்தியுள்ள சென்னை நிலையம், ஆண்டு ஒன்றுக்கு 80 குண்டுகளைத் தயாரிக்க முடியும்.

அணு குண்டுகளைப் பற்றிய புள்ளிவிவரங்கள் வெறும் அனுமானமே என்றும், அணு உலைகள் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்ய ஈடுபடுத்தப்படும் என்று ஊகிக்கப்படவில்லை என்றும் கழக டைரக்டர் புசான் தெளிவாக்கினர்.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.

p. 64 + 64 + 64 + 64 + 64 + 64 +

ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATIO



டிசம்பர் — 1965

ஆல்பர்ட் சுவைட்சர்

ஆரம்பக்கல்வி நிலையம்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

MADRAS

அறிவிப்பு!

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

உமாபதி

தமிழ்ப் பாட உரைநூல்

ஏழாம் வகுப்பு – விலை 1–25 பை.
ஐந்தாம் வகுப்பு– ,, 60 ,,
நான்காம் வகுப்பு– ,, 50 ,,
மூன்றும் வகுப்பு – ,, 40 ,,

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M. A., L. T., (Dip. in-Geog.)

ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்,
சி. அப்துல் ஹகீம் இந்து-முஸ்லிம் உயர்நிலைப் பள்ளி,
சென்னை–1.

ASSOCIATION ENGLISH PRIMER

III STANDARD

★

By

Mrs. LUCY ARULRAJ

★

Price: 70 nP.

புதுமுறை சங்க வாய்பாடு — 100 — ரூ. 9

ஆசிரியர்களுக்கு 20% கழிவு உண்டு.

வியாபாரிகட்கு பிரத்தியேக கழிவு உண்டு.

வேண்டிய பிரதிகளுக்கு உடனே ஆர்டர் அனுப்பவும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
("ஆரம்பக்கல்வி" நிலையம்)
94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

CONNEMARA PUBLIC LIBRARY
30 MAR 1966
MADRAS